முன்னுரை

எனது எழுத்துலகத்தின் அரிச்சுவடியே இந் நூலில் பதிவாகியுள்ளது. எதிர்பாராமல் திடீரென நிகழ்ந்த விபத்தினால் பேச முடியாத சிறுவனைப் போன்று நானும், எனது வாழ்வில் நடந்த சம்பவங்களை வெற்றுத்தாள்களில் கிறுக்கி வைத்திருந்தேன். பதினைந்து வருடங்களுக்கு முன்பு எழுதி வைத்தேன்.

அவுஸ்திரேலியாவுக்கு புலம் பெயர்ந்த காலத்தில் எனது கல்விசார் பட்டம் அங்கீகரிக்கப்படாதமையால் வேலையும் கிடைக்க வில்லை.

புலம் பெயர்ந்த அங்கலாய்ப்பு அவலம் ஒருபுறம், பல வருடங்களாக பழகிய பல நண்பர்களை வன்முறைக்கு இழந்து விட்ட துயரம் ஒருபுறமாக மனஅமைதியற்றவாறு காலம் ஓடிக்கொண்டிருந்தது.

அத்தகைய காலத்தில் பரணில் கிடந்தன என் எழுத்துக்கள். அதில் ஒரு அங்கம் தான் 'நடுக்காட்டில் பிரேத பரிசோதனை' உதயம் இதழிலும் பின்பு குமுதம், யாழ்மணத்திலும் பிரசுரமாகி, எனது வாழும் சுவடுகள் தொகுப்பிலும் இடம் பெற்றது.

இந்த நெடுங்கதையில் நிகழும் சம்பவங்கள் எண்பதிற்கும் எண்பத்தி மூன்றுக்கும் இடைப்பட்ட காலத்தில் நான் தரிசித்தவை.

இம் மூன்று வருட காலமும், இலங்கையின் வரலாற்றை எழுதுபவர்களுக்கு முக்கியமான காலமாகும்.

இந்தக்காலத்தில் தனித்தமிழ் பிரதேசமான வட பகுதியில் வளர்ந்து கண்டியில் உயர்கல்வி பெற்ற பின்னர் ஒரு எல்லைக் கிராமத்தில் சிங்களவர்கள் மத்தியில் வேலை செய்த போது, என்னைப் பாதித்த, நான் சாட்சியாகிய, நான் சம்பந்தப்பட்ட பல சம்பவங்கள் இதில் இடம் பெறுகின்றன.

இலங்கையில் எண்பத்திமூன்றில் நிகழ்ந்த யூலைக் கலவரம் தற்செயலானது அல்ல, அதே சமயம் ஒரு சிலரால் வழி நடத்தப்பட்டதும் அல்ல.

ரஷ்யாவிலும் பிரான்ஸிலும் புரட்சி தோன்றுவதற்கு முன்பு பல சம்பவங்கள் - அதற்கான அத்திவாரத்தை தோற்றுவித்தது போலவே, இலங்கையிலும் எண்பத்திமூன்று யூலைக் கலவரத்திற்கும் பல காரணிகள் விதையிட்டன. இனவிடுதலைப் போராட்டத்திற்கும் மூலகாரணங்கள் நிறைய உண்டு.

இலங்கையில் மூவின மக்களையும் பிரித்தாளும் தந்திரத்தில் அரசியல் வாதிகள் ஈடுபட்டிருந்த வேளையில் - அந்த மூவின மக்களுடன் வாழவேண்டிய - அவர்களின் உணர்வுகளை புரிந்து கொள்ள வேண்டிய தேவை எனக்கு இருந்தது. அந்த வாழ்வின் அனுபவங்களை பதிவு செய்து வைத்திருந்தேன்.

குடாநாட்டுக்கு வெளியே வாழத் தலைப்பட்ட போதுதான் - தமிழினம் தவிர்ந்த, ஏனைய இனமக்களும் எவ்வாறு அரசியல் வாதிகளினால் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. இன முரண்பாடுகளுக்கு அடிப்படையாக விளங்கியவற்றையும் தெரிந்து கொள்ள முடிந்தது.

காதல்-திருமணத்தில் முடிந்தால் தான் வெற்றி என்பதில்லை. காதல், இனம் - மதம் - மொழி - குலம் பார்த்து வருவதில்லை. அதனால் தான் அதற்கு கண்கள் இல்லை என்பர். தமிழ் - சிங்கள காதல் திருமணம் தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கும் என சொல்ல முடியாது. ஆனால் அத்தகைய காதல் திருமணங்கள் - இனவாத வன் செயல்கள் தலை தூக்கிய காலப்பகுதிகளில் இரண்டு தரப்பினாலும் விமரிசிக்கப்படுவதை அவதானித்துள்ளேன். அதுவும் வாழ்வுப் பாதுகாப்பை அடிப்படையாக கொண்டதாகவே இருக்கும்.

நோக்கங்கள் வேறாக இருந்த போதிலும் வடக்கிலும், தெற்கிலும் இளைஞர்கள் கிளர்ச்சி செய்வதற்கும் வித்திட்டவர்கள் அரசியல்வாதிகள். சாதாரண மக்களிடமிருந்தே போராளிகள் தோன்றினர். அந்த மக்களிடமிருந்து கனவுகளும் தோன்றின. அந்த கனவுகளை அருகே இருந்து ரசிப்பவன் கலைஞனாகவோ, படைப்பாளியாகவோ இருக்கும் பட்சத்தில் அவற்றை தான் சார்ந்த துறையில் பதிவு செய்து விடுவான்.அத்தகையதொரு முயற்சியே இக்கதை.

இந்த நெடுங்கதையில் இடம் பெற்றுள்ள சம்பவங்கள் அனைத்தும் நிஜம். அந்த நிஜம் - நான் புலம் பெயர்ந்தபின்பும் நிழலாக தொடர்ந்தவை. அந்த நிஜத்தினுள் - புகுத்தப்பட்டுள்ள காதல் - கேள்விகளை எழுப்பும். விடைகளைத்தேடும்.

அரசியல் சம்பவங்கள் இடம் பெற்றாலும் கூட இது ஒரு காதல் கதைதான். இரண்டு வெள;வேறு இனங்களைச் சேர்ந்த ஜீவன்கள் இணையும் போது எதிர் நோக்கப்பட்ட சிக்கல்களின் முடிச்சுக்கள் அவிழ்ப்பதற்கு மார்க்கங்கள் தேடப்பட்டன. வாழ்க்கையும் ஒரு தேடல் தான்.

இதனை புத்தகமாக வெளியிடத் தூண்டியதுடன் பல ஆலோசனைகளை நல்கிய நண்பர் எஸ்.பொ அவர்களுக்கும், எனது தெளிவற்ற எழுத்துக்களை சிரமம் பாராது வாசித்து கணணியில் பதிவு செய்த மேகலா குணரட்னத்துக்கும்;, மேலும் அச்சுப்பிழைகளை திருத்திய நண்பர் டு .முருகபூபதிக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

அன்புடன்

நடேசன்

வண்ணாத்திக்குளம்

டி.பி.எஸ் ஜெயராஜ்!

VannaaththikkuLamஇங்கிலாந்தின் பண்ணைகள் செறிந்த கிராமப்புறங்களில் மிருக வைத்தியராகத் தொழில் புரிகையில் பெற்ற அனுபவங்களை எழுத்துருவில் வடித்து சமகால ஆங்கில இலக்கியப்பரப்பில் தனக்கெனத் தனியிடத்தைச் சுவீகரித்துள்ளார் ஜேம்ஸ் ஹெரியட். இலங்கைத்தீவில் பிறந்து, வளர்ந்து உயர்கல்வி பெற்றுத் தற்போது

அவுஸ்திரேலியாவில் மிருகவைத்தியராகக் கடமை புரியும் நண்பர் நடேசனும் தான் பெற்ற அனுபவங்களை எழுத்து வடிவில் கொண்டு வருவதில் ஈடுபாடு காட்டிவருகிறார்ஏற்கனவே தனது அனுபவங்கள் சிலவற்றைத் தொகுத்து வெளியிட்டுள்ள நடேசன் இந்த முயற்சி ஊடாகப் புதியதோர் பரிமாணத்துள் புகுந்துள்ளார். ஆங்கிலத்தில் 'நொவெல்லா' என வர்ணிக்கப்படும் குறுநாவல் என்ற வகையீட்டுக்குட்பட்ட இந்தப் படைப்பு சுயசரிதை வடிவிலான கதையாடல் போக்கினைக் கொண்டதாகும். ஆசிரியரே தமது முன்னுரையில் கூறியுள்ளபடி 1980-1983வரையிலான காலப்பகுதியைப் பின்னணியாகக் கொண்டு இந்நூல் விளங்குகின்றது.

யாழ்ப்பாணத்தில் பிறந்து கண்டியில் உயர்கல்வி பெற்ற நடேசன் அவ்விரு நகரங்களையும் இணைக்கின்ற யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலை ஊடறுத்துச் செல்லும் மதவாச்சியில் தொழில் புரிந்த காலத்தின் பதிவுகளை ஒரு படைப்பாளிக்குரிய எழுத்துச் சுதந்திரத்தைப் பிரயோகித்துப் பொலிவூட்டி வாசகப் பெருமக்களிடம் சமர்ப்பித்துள்ளார். வடமாகாணம், வடமத்திய மாகாணம் ஆகிய தமிழ், சிங்கள பெரும்பான்மை மாகாணங்களின் எல்லைப்பகுதியில் அமைந்துள்ள மதவாச்சி, பதவிய, வவுனியா ஆகிய இடங்களைப் பின்புலமாகக் கொண்டு நாவல் எழுதப்பட்டுள்ளது.

நூலின் அடிநாதம் ஒரு தமிழ் ஆடவனுக்கும் சிங்கள மங்கைக்கும் இடையில் மலரும் காதல் படிப்படியாக வளர்ச்சியடைந்து பதிவுத் திருமண உறவு நிலையை

அடைவதாக அமைந்துள்ளது. இலங்கைத்தீவின் இனப்பிரச்சினை மிக மோசமான நிலையை அடைந்த 1983 ஜ_லை வன்முறை வெடிப்புக்கு முன்னோடியாக இரு சமூகங்கள் மத்தியில் 'மோதல்' அரசியல் வெடிப்புக்களையும் பிளவுகளையும் ஏற்படுத்திக் கொள்கின்ற காலகட்டத்தில் சூரியனும் சித்திராவும் மிக நெருக்கமாக உறவுப்பிணைப்பில் ஈடுபடுகின்றனர்.

அதேபோல் கதையில் வரும் தமிழ், சிங்களப் பாத்திரங்களும் தம்மிடையே சினேகமான அமைதியான உறவு கொண்டே வாழ்கின்றார்கள். வாழ விரும்புகின்றார்கள்.சமகால அரசியல் சூழலில் ஆதிக்கம் செலுத்துகின்ற அரசியல் போக்குகளும் நெறிகளும் எத்திசையில் சென்றாலும் சாதாரண மக்களிடம் அவர்கள் எந்த இனமாகஇருந்தாலும் சரி அடிப்படை மனிதநேயமும் உத்தம குணங்களுமே நிறைந்திருப்பதை நடேசன் நன்குணர்ந்திருப்பதுடன் நன்றாக உணர்த்தியுமுள்ளார்.

*ஆயினும் வலிமை குன்றிய சாமானியர்களால் அசுர வலிமை மிகுந்த ஆதிக்க சக்திகள் கட்டவிழ்த்துவிடும் வெறுப்பு மிகுந்த அழிவுகளைத் தடுக்க முடியாது. தப்பியோடுவது தான் இயலும். அதையே தான் கதையின் நாயகனும் நாயகியும் இறுதியில் செய்கின்றனர். 'வென்றவன் சொல்வதெல்லாம் வேதம்' என்ற கண்ணதாசன் வரிகளுக்கேற்ப தற்காலத் தமிழர் அரசியல் என்பது ஒரு வீரதீரப் பிரதாபத் தோற்றப்பாடு கொண்டதாகவே ஆதிக்க சக்திகளாலும் அவற்றை எதிரொலிக்கும் ஊடகங்களாலும் பிரதிபலிக்கப்படுகின்றது. இத்தகைய 'களபப்பிரா;' காலச் சூழ்நிலையில் சமகால நிகழ்வுகளைச் சரியான முறையில் பதிவு செய்ய இலக்கியம் தான் களமாக அமைகின்றது.*

*அரசியல் போக்கின் அதிகாரத்தினால் அப்பாவி மானுடர்கள் பொசுங்கியும் நசுங்கியும் போகின்றதை எடுத்துக் காட்டவோ அல்லது அளப்பரிய இடர் நடுவிலும் மனிதப் பண்புகளைத் தளராமல் காப்பாற்ற முயற்சிப்பதையே இன்றைய நிலையில் இலக்கியத்தினால் மாத்திரமே பூரணமாக வெளிச்சம் போட்டுக் காட்ட முடிகின்றது. மிகமிகத் தேவையான அக்காரியத்தை நடேசன் இச்சிறு நூல் மூலம் கணிசமான அளவில் செய்து காட்டியுள்ளார். பிரச்சார நெடி மிகுந்த பாத்திரங்களை உலவ விடக்கூடிய வாய்ப்பினை கதையின் செல்நெறி ஏற்படுத்திக் கொடுத்தபோதிலும் அதனைத் தவிர்த்து மிக இயல்பான முறையில் மிகுந்த சொற்சிக்கனத்துடன் அதிகப் பிரசங்கித்தனத்தையும் அதிமேதாவித்தனத்தையும் ஒதுக்கிக் கதையாடல் செய்திருக்கிறார் நடேசன்.*

*பிரிந்து நிற்கும் சிங்கள, தமிழ் இனங்கள் மத்தியில் மென்மையான புரிந்துணர்வை ஊட்டக்கூடிய பண்புகள் இந்நாவலுக்குண்டு. இரண்டு உதாரணங்களைச்*

*சுருக்கமாகக் குறிப்பிடலாம். நாவலின் தலைப்பான 'வண்ணத்திக்குளம்' பதவிய என்ற சிங்களக் கிராமத்தின் பண்டைய தமிழ்ப் பெயராகும். வடக்கில் நடந்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் முன்னோடி வெளிப்பாடு தான் இந்த எழிலார¦ந்த கிராமம். பேரினவாத ஆதிக்கத்தின் சின்னமாகத் தமிழர் நினைவுகளில் இடம் பெற்றுள்ள இக்கிராமத்தைப் பின்புலமாக வைத்துச் சில கதை மாந்தர்களைச் சித்தரித்ததன் மூலம் அக்கிராமவாசிகளை 'ஆக்கிரமிப்பாளர்' போலல்லாது 'மானுடர்கள்' ஆகக் காட்டுகிறார் ஆசிரியர். இந்தக் கண்ணோட்டத்தில் நோக்குகையில் பகையுணர்வு குறையத்தான் செய்யும். அதேபோல் அரசியல் சுற்றுச் சூழலை மறந்து இயல்பான மனித உணர்வுகளால் உந்தப்பட்டு உறவு கொள்ளும் நெஞ்சங்கள் திருமண பந்தத்தில் சேருவதற்கு நாட்டு நிலைமையே தடையாக உள்ளது.*

*எந்தவொரு வலிதான நியாயமும் இல்லாமல் 'பிரச்சினை' தீவிரமடைந்ததால் சிங்களத்தியைக் கட்டிக் கொண்ட தமிழன் தமிழ்ப் பகுதிக்குச் செல்ல முடியாததும் தமிழனை மணந்த சிங்களப் பெண் சிங்களப் பகுதியில் வாழ முடியாததும் தான் நியாயங்களாகத் தெரிகின்றன. இது எவ்வளவு வேதனைக்குரிய விடயம். இறுதியில் இருவரும் தம் பிறந்த மண்ணில் வாழமுடியாது வெளிநாடு செல்வது சிக்கலின் கூர்மையை மனிதாபிமானப் பார்வையில் ஏற்படுத்துகின்றது. இவற்றையெல்லாம் இங்கு குறிப்பிடுவதால் நடேசன் ஒரு அரசியல் நாவலை எழுதியுள்ளார் என்றோ அரசியலை வலிந்து திணித்துள்ளார் என்றோ எவரும் எண்ணிவிடக் கூடாது.*

*அடிப்படையில் இது மென்மையான காதல் கதை, பழைய நினைவுகளை அசைபோடும் படைப்பு, மனிதநேய அனுபவங்கள் நிறைந்த தொகுப்பு. பாண்டித்தியம் நிறைந்த அளவு கோல்களுடன் திறனாய்வு மேற்கொள்ளும் வித்தகர்கள் நடேசனது நாவலில் பல குறைகள் காணக்கூடும். நாவலுக்குரிய அடிப்படை இலக்கணம் உண்டா? என்று கேட்கக்கூடும். அதன் கருப்பொருளில் பல உள்நோக்கம் கற்பிக்கக்கூடும். ஆனால் அத்தகைய கருத்துக்களைக் கடந்து இதனை நோக்கும் போது இந்நூலில் காணப்படும்*

'உண்மைத்தன்மை' தெளிவாகப் புலப்படும். பாரதி கூறிய 'உள்ளத்தொளி வாக்கினில்' வருவது போல் நடேசனது உண்மையான அனுபவங்களும் எண்ணங்களும் இந்த நாவலில் நன்றாகவே வெளிப்பட்டுள்ளது. இதுவே நாவலின் அடிப்படை வெற்றிக்குக் காரணமாகிறது.

பின் நவீனத்துவக் கோட்பாடுகளுக்கு அப்பால் ஒரு சத்தியமான மெய்பொருள் இதில் உண்டு. அந்த மெய்யொளி தரும் பிரகாசம் படிப்பவரை ஆட்கொள்கின்றது. இலகுவான வார்த்தைப் பிரயோகமும் அமைதியான எழுத்தோட்டமும் நாவலை ஒரு வாசிப்புத்தன்மை மிக்கதாக உருவாக்கியுள்ளது. முல்லையும் மருதமும் கொண்டமண்ணில் நடந்த இக்கதையை வாசிக்கும் போது வண்ணத்திப்பூச்சிகளின் இறக்கைகள் போல் உங்கள் உணர்வலைகளும் சற்றுப் படபடத்தால் அதுவே ஆசிரியரின் வெற்றியாகும்.

**மதவாச்சி**

யாழ்தேவியிலே சனநெரிசல் வவனியாவிலே குறைந்து விட்டது மதவாச்சியில் இருந்து நான் இறங்குவது வசதியாக இருந்தது. இரண்டு கைகளிலும் பெட்டிகள் இருந்தபடியால் மற்றவர்களுக்கு இடிக்காமல் மெதுவாக பிளாட்பாரத்தில் கால் வைத்து இறங்கினேன்.

முன்னும் பின்னும் பார்த்தேன். மதவாச்சி புகையிரத நிலையத்தில் ஐந்துபேர் மட்டுமே இறங்கியிருக்கிறார்;கள். சகலரின் கைகளிலும் பயணத்துணையாக சிறிய தோல்பைகள். அவர்கள் முகங்களில் அவசரமும் தெரிந்தது. அவர்களை அரசாங்க ஊழியர்களாக அடையாளம் காண்பதற்கு அதிக விவேகம் தேவைப்படவில்லை.

ஒவ்வொருத்தரின் முகத்தையும் பார்த்துக் கொண்டு நடந்தபோது, ஒருவர் முகத்தில் மட்டும் புன்னகை தவழ்ந்தது. மற்றவர்களுக்கு வீட்டில் என்ன பிரச்சனையோ, அல்லது சனி, ஞாயிறு விடுமுறை சீக்கிரமாக முடிந்துவிட்டது என்ற ஆதங்கமோ தெரியவில்லை, முகங்களிலே ஒருவித இறுக்கம் நிலைத்திருந்தது.

புன்னகை தவழவிட்டபடி நடந்து வருபவரிடம் பேசுவதற்கு முடிவு செய்து, என்னை அறிமுகம் செய்தேன்.

'என் பெயர் சூரியன். நான் மிருக வைத்தியராக மதவாச்சிக்கு வந்துள்ளேன்.'

'சந்தோஷமான விடயம். எனது பெயர் சுப்பையா. தொழிற் கந்தோரில் கிளார்க்காக இருக்;கிறேன். '

'இதுதான் எனது முதல் நியமனம் '

'அப்படியா? '

இருவரும் பேசியபடியே பஸ்ஸில் ஏறினோம். 'மிஸ்டர் சுப்பையா, நான் இங்கு தங்குவதற்கு ஏதாவது இடம் இருந்தால் சொல்ல முடியுமா? '

'அதுக்கென்ன, ஏன் நாங்கள் தங்கும் அரசாங்க விடுதியிலேயே நீங்களும் தங்கலாம். நான் உங்களை மாலையில் சந்திக்கிறேன். அதோ தெரியும் கட்டிடந்தான் மிருக வைத்திய நிலையம். ' எனச்சொல்லி தன் கந்தோருக்கு பஸ்ஸிலிருந்து இறங்கி நடந்தார்.

எனது கந்தோரின் வாசலிலே 'கோமத' என விசாரித்தவாறு வந்தவர், தம்மை 'சமரசிங்க' என அறிமுகப்படுத்திக் கொண்டார். நான் புதிதாக நியமனம் பெற்று வந்திருக்கும் மிருக வைத்தியர் என்பதை அவர் சரியாக ஊகித்திருக்க வேண்டும். இருவரும் கந்தோருக்குள் சென்றோம். அங்கு என்னை மெனிக்கா, ஜயவதி என்ற இரண்டு ஊழியர்கள்; வரவேற்றார்கள்.

எனக்குத்தெரிந்த அரைகுறை சிங்களத்தில் அவர்கள் நலனை விசாரித்து விட்டு எனது மேஜைக்கு சென்றேன்.

கடிதங்களையும் கோப்புகளையும் பார்த்துக் கொண்டு இருந்த பொழுது சமரசிங்க ஒரு உணவுப்பார்சலை நீட்டினார். நன்றியுடன் வாங்கிக்கொண்டேன்.

உண்டவுடன் களைப்பு வந்தபோது, கண்களை மூடிக் கொள்வது சுகமாக இருந்தது. அப்போது மனதிலே பல நினைவுகள் அலைமோதலாயின.

யாழ்ப்பாணப்பகுதியிலே பிறந்து வளர்ந்தேன். அங்கேயே படித்தேன். இதனால் பல்கலைக்கழகம் செல்லும் வரை சிங்கள மக்களுடன் பரிச்சயம் இல்லை. கல்லூரியில் படிக்கும் போது நானும் என்னுடன் படித்தவர்களும் மொழி ரீதியான தரப்படுத்தல் மூலம் பல்கலைக்கழகத்திற்கு செல்வது பாதிக்கப்பட்டதும் சிங்களவர்களை வெறுக்கத் தொடங்கினேன். எனது வெறுப்பைப் பல இடங்களில் எதிர்ப்பாகவும் காட்டியுள்ளேன்.

ஆனால் பேராதனை பல்கலைக் கழகம் சென்ற போது சில விடயங்கள் தெளிவாகின. அரசாங்கம்இ அரசியல் நிர்ப்பந்தங்கள் என்பன வேறு வேறு என்பதும் விளங்கின.

மதவாச்சி, சிங்கள விவசாயிகள் மட்டும் வாழும் ஒரு தொகுதி. அங்கு என் முதல் நியமனம் கிடைத்தபோது 'சிங்களவர்களோடு கவனமாக வேலை செய்.'என்று என் தகப்பனார் கூறிய அறிவுரையை என் நெஞ்சிலே சுமந்தபடிதான் நான் ரயில் ஏறினேன்.

கந்தோரில் வேலை செய்பவர்களைப் பற்றி விசாரித்தேன். மெனிக்கே அநுராதபுரத்தில் இருந்து தினமும் பஸ்ஸில் வருபவள். கண்டிய முறைப்படி சேலை உடுத்துவாள்;. கரையோரச் சிங்கள பெண்கள் சேலை அணிவதிலும் பார்க்க இது எடுப்பானது.

' மெனிக்கே உனக்கு கல்யாணம் ஆகிவிட்டதா? '

என்று அவளிடம் சகஜமாகவே கேட்டேன்.

'இல்லை' என்று முகத்தில் செந்தூரம் படர கூறினாள்.

ஜெயவதிக்கு நாற்பது வயதிருக்கும். இரண்டு குழந்தைகளுக்குத் தான் தாய்; என்று விபரங் கூறினாள்.

சமரசிங்க மிகவும் ஜாலியான ஆள். கலகலப்பாக பேசும் இயல்பினன். சமீபத்தில் திருமணமாகியது என்றும் அறிந்தேன்.

நாலு மணியாகியதும் வெளியே வந்து பார்த்தேன். வெய்யில் இன்னமும் இறங்கவில்லை. தூரத்தில் எனது கந்தோரை நோக்கி  சுப்பையா வருவதைக்கண்டேன். எனது பெட்டிகளை எடுத்துக்கொண்டு அவரை நோக்கி நடந்தேன்.

சுப்பையா கூறிய அரசாங்க விடுதி. அதிலே பல அறைகள்  இருந்தன. விடுதியின் முன் போர்டிக்கோவில் பல செருப்புக்கள் கிடந்தன. என்னை உள்ளே அழைத்து சென்ற  சுப்பையா ஒரு அறையைக் காட்டி

'இதுதான் உங்களது' என்று கூறினார்.

அவர் காட்டிய அறையில் பெட்டிகளை வைத்துவிட்டு வெளியே வந்த போது மூவர் எதிரில் வருவது தெரிந்தது. பரஸ்பரம் அறிமுகம் நடக்கலாயிற்று. கல்லூரி மாணவர் போல் காட்சியளித்தவர்  'என் பெயர் ருக்மன்;, இலங்கை போக்குவரத்து சபையில் வேலை செய்கிறேன் ' என்றார். குட்டையாக காட்சியளித்தவர் 'நான் காமினிஇ நீர்ப்பாசன திணைக்களம் ' என்றார். நடுத்தர வயதில் உள்ளவர் தனது பெயர் குணதாச, தான் கட்டிட திணைக்களத்தில் வேலை செய்வதாக தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

நாங்கள் பொதுவான விஷயங்களைப் பேசிக்கொண்டு இருக்கும் போது, ருக்மன்; 'இன்று எனது சமைக்கும் நாள் ' என கூறிவிட்டு அடுக்களைப்பக்கம் சென்றான். கல்லூரி மாணவன் மாதிரி தோற்றம் இருந்தாலும் குரலில் ஒருவகை அழுத்தம் பதிந்திருந்தது.

ருக்மன்; எனக்கு மட்டும் சாப்பாடு பரிமாறிவிட்டு மற்றையோரை பார்த்து என்னை 'இவர் எங்களது விருந்தாளி' என்று நேச மனப்பான்மையுடன்; கூறினான்.

ருக்மனின் சாப்பாடு உண்மையில் மிகவும் நன்றாக இருந்தது. ருக்மனுக்கு நன்றி கூறினேன்.

அவசரமாக ஒருவன் வந்து 'ஐயா நான் நெடுந்தீவு' என்றான். முகத்தில் இருந்த மீசையும், நெற்றித் திறுநீறும் தமிழர் என பறைசாற்றியது. அவனுடைய பெயர் ராகவன். ஆக மொத்தம் என்னைத்தவிர சுப்பையாவும் ராகவனும் தான் அந்த விடுதியிலே தங்கும் தமிழர்கள் என்பதை அறிந்து கொண்டேன்;.

**பிரேதப் பரிசோதனை**

எல்லோரும் போனபின் நான் மட்டும் தனியாக இருந்து கோப்புகளை பார்த்துக்கொண்டு இருந்தேன்.

என்னுடன் வேலை செய்பவர்களின் பேர்சனல் கோப்புகளை அவர்கள் இருக்கும் போது பார்ப்பது நாகரீகம் இல்லை என்பது என் நினைப்பு. ஐந்து மணிக்கு மேலாகி விட்டது. கோப்புகளை அலமாரியுள்ளே வைத்து பூட்டி விட்டு நாற்காலியில் வந்தமர்ந்து எனது இரண்டாம் நாள் வேலையை வெற்றி கரமாக முடித்து விட்டேன் என்கிற ஒருவகை திருப்தியுடன் ரிஜிஸ்டரில் கையெழுத்திட்டேன்.

அப்போது வெளியே ஒரு ஜீப் வந்து நின்றது.

என்னை நோக்கி நான்கு பொலிஸ்காரர்கள் இறங்கி வந்தார்கள்.

அவர்களுள் ஒருவர் 'நான் தான் பதவியா இன்ஸ்பெக்டர் ' என தம்மை அறிமுகப்படுத்தினார். நான் என்ன செய்ய வேண்டும் என்பது போல அவரைப்பார்த்தேன்.

'பதவியாவில் ஒரு யானைக்கு போஸ்மோட்டம் செய்ய வேண்டும் ' என்று பொலிசார் என்னைத்தேடி வந்த முகாந்திரத்தை விளக்கினார்.

எனக்கு தலையில் இடி இறங்கியது. வாயில் எச்சில் காய்ந்தது போன்ற உணர்வு.

யானைகளை கண்டிப் பெரஹராவிலும், தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையிலும் பார்த்திருக்கிறேன். சாதாரணமாக பொலிசார் மீது எனக்கு எப்போதும்  நல்ல அபிப்பிராயம் இருந்ததில்லை. அவருக்கு என்ன பதில் சொல்வது என தெரியவில்லை.

நான் முழிப்பதை அசட்டை செய்து 'நீங்கள் வந்து போஸ்மோட்டம் செய்யவேண்டும். மேலும் நாங்கள் யானையை சுட்ட சந்தேகநபர் இருவரைப்பிடித்திருக்கிறோம். '  பொலிசுக்கே உரிய அதிகார தோரணையில் இன்ஸ்பெக்டர் சொன்னார்..

உடன் வந்த பொலிசாரில் ஒருவன் 'இரண்டு தந்தங்களையும் மீட்டு விட்டோம்' என்று இன்ஸ்பெக்டருக்கு ஒத்து ஊதினான்;.

வேறு வழி இpருப்பதாகத்தோன்றவில்லை. 'சரி எப்படி போவது? '

'ஜீப்பில் ஏறுங்கள். '

சாரதிக்கும், இன்ஸ்பெக்டருக்கும் இடையில் முன் சீட்டில் நான் ஏறி அமர்ந்ததும்; ஜீப் புறப்பட்டது.

இன்ஸ்பெக்டர், 'டாக்டர் யாழ்ப்பாணமா? 'என்று கேட்டார்.

'ஆமாம். '

'எப்ப மதவாச்சி வந்தது? '

'நேற்றைய தினம். அது சரி எப்போது யானை சுடப்பட்டது?' என உரையாடலை திசை திருப்பினேன்.

'சரியாக ஒருமாதம் இருக்கும். '

ஒருமாதத்தின் பின் எப்படி போஸ்மோட்டம் செய்வது என என் நெஞ்சு குறுகுறுத்தாலும்; இதை எப்படி இன்ஸ்பெக்டரிடம் கேட்பது? இன்ஸ்பெக்டர் கல்லுளிமங்கனைப்போல குந்தியிருந்ததால் நான் மௌனம் காத்தேன்.

'டொக்டர் யாழ்ப்பாணம் பிரச்சனைகள் எப்படி? ' என்று வேறு ரூட்டிலே பேச்சை இழுத்தார்.

என்னை ஆழம் பார்க்கிறார் என்பது எனக்கு விளங்கியது. 'இரண்டு நாள்தான் யாழ்ப்பாணம் இருந்தேன் மற்றப்படி கண்டியில் தான் வாழ்ந்;தேன்.'

இன்ஸ்பெக்டர் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது. பட்டும் படாத என்னுடைய பதிலை அவர் ரசிக்கவில்லை என்பது புரிந்தது.

மதவாச்சிக்கும், பதவியாவுக்கும் இடைப்பட்ட பிரதேசம். இது முற்றிலும் விவசாய பிரதேசம். வழி நெடுகிலும் பெரிய மரங்கள் வீதியின் இரண்டு பக்கங்களிலும்; இருந்தன. கண்ணுக்கு பசுமையான வெளிகள். இடையிடையே வைக்கோலால் வேயப்பட்ட குடிசைகள் தெரிந்தன. வேலிகள் எதுவும் கிடையாது. யாழ்ப்பாணத்து ஓட்டுவீடுகளையும் ஆளுயரமான கிடுகு வேலிகளையும் பார்த்த எனக்கு, இது புதிய காட்சியாக இருந்தது.

ஜீப் சொல்லி வைத்தது போல் சிறு கடைகள் இருந்த இடத்தில் நின்றது. ' ரீP குடிப்போம் ' என கூறி இன்ஸ்பெக்டர் முதலில்; இறங்கினார்.

கடைக்காரன் எல்லோருக்கும் மிக மரியாதை செலுத்தி தேநீர் பரிமாறினான். பொலிஸ்காரரிடம் காட்டிய மரியாதையை எனக்குக்காட்டிய போது உடலில் அட்டை ஊர்வது போல இருந்தது.

யாரும் கேட்காமலே கடைக்காரர் இரண்டு பக்கெற் பிறிஸ்டல் சிகரெட்டை எடுத்து ஒன்றை இன்ஸ்பெக்டரிடமும் மற்றயதை மற்ற பொலிஸ்காரரிடமும் கொடுத்தான்.

என்னைப்பார்த்து 'மாத்தைய சிகரெட் குடிப்பதா? ' என்றான்.

'இல்லை,' எனக் கூறியபடி பத்து ரூபா நோட் ஒன்றை எடுத்துக் கொடுத்தேன். கடைக்காரன் அதனை பெற்றுக்கொள்ள மறுத்து விட்டான்.

நான் இன்ஸ்பெக்டரை பார்த்தபோது 'கடைக்காரர் எமக்கு வேண்டியவர்' என்றார்.

பொலிசாருக்கு வேண்டியவர்கள் பரிதாபத்துக்கு உரியவர்கள் என நினைத்தேன்.

மீண்டும் ஜீப் புறப்பட்டு இப்பொழுது பற்றைக்காடுகள் உள்ள பகுதியூடாக, அரைமணி நேரம் சென்றது.

' இனிமேல் நடக்க வேண்டும்' என்று கூறியபடி இன்ஸ்பெக்டர் இறங்கினார்.

நேரம் மாலை ஆறுமணிக்கு மேல் இருக்கும். ஆனாலும் சூரியவெளிச்சம் நன்றாக எறித்தது.

நடக்கத்தொடங்கினோம்.

எம்முடன் கிராமத்தைச்சேர்ந்த இருவர் சேர்ந்து கொண்டார்கள்.

கால்மணி நேர நடைக்கு பின்; ஒரு குளத்தின் அருகே வந்து சேர்ந்தோம்.

குளக்கரையின் வலக்கரைப் பக்கத்தை காட்டி, 'இதுதான் யானை' என இன்ஸ்பெக்டர் கூறினார்.

திடுதிப்பென திரும்பிப்பார்த்த எனக்கு அதிர்ச்சி காத்துக்கொண்டு இருந்தது. ஆறு அடி உயரத்தில் எலும்புக் குவியல். அதைச்சுற்றி கொழுப்பு உருகி பாசி போல் படர்ந்து இருந்தது. அதிகமாக மணக்கவில்லை. தசை, குடல் போன்ற பகுதிகள் எதுவும் காணப்படவில்லை. எலும்பும் சிறிது தோலுமே மிஞ்சி இருந்தது.

'இன்ஸ்பெக்டர் இதில் நான் எப்படி போஸ்மோட்டம் பண்ண முடியும்.? 'என்று என் இயலாமையை வெளிப்படுத்திக் கேட்டேன்.

'உங்கள் ரிப்போட் இல்லாமல் நாங்கள் வழக்கு தாக்கல் செய்ய முடியாது. ' என்னிடம் எப்படியும் ரிப்போட் ஒன்று பெறுவதில் இன்ஸ்பெக்டர் குறியாக இருக்கிறார் என்பதை புரிந்து கொண்டேன். எலும்புக்குவியலின் அருகிலே சென்று பார்த்தேன். தலைமண்டை ஓட்டைத் தவிர்ந்த மற்றைய எலும்புகள் இருந்தன.

'தலையைக்காணவில்லையே' என்றேன்?

எனக்குப்பதிலாக இன்ஸ்பெக்டர் திருதிரு என முழித்தார்.

பிரச்சனையை இன்ஸ்பெக்டர் தலையில் போட்டு விட்டதில் எனக்கு மகிழ்ச்சி.

இன்ஸ்பெக்டர் பொலிசுக்கே உரியவிதத்தில் மூன்று பொலிசாரையும் காட்டுக்குள் சென்று தேடும்படி பணித்தார். கிராமத்தவர்களான சில்வாவையும், அப்புகாமியையும் குளத்தில் இறங்கித் தேட உத்தரவிட்டார்.

பத்து நிமிட தேடலின் பின் குளத்தில் இருந்து யானையின் தலை எலும்பு கொண்டு வரப்பட்டது.

தலை எலும்பை உற்றுப்பார்த்த போது, காதுக்கு அருகில் சிறு ஓட்டை இருந்தது தெரிந்தது. சில்வாவால் தலை எலும்பு கோடரியால் பிளக்கப்பட்ட போது அதற்குள் ஓர் ஈயக்குண்டு இருந்தது.

எனக்கும் இன்ஸ்பெக்டருக்கும் அளவிடமுடியாத சந்தோஷம். யானையை கொலை செய்ததற்கான ஆதாரம் கிடைத்துவிட்டதால் என்னால் போஸ்மோட்டம் ரிப்போட் எழுத முடியும். அதேநேரத்தில் வழக்கைத் தாக்கல் செய்யலாம் என இன்ஸ்பெக்டருக்கு சந்தோஷம்.

அன்று அந்த பொலிஸ் ஜீப்பில் விடுதிக்கு வந்து சேர இரவு எட்டு மணிக்கு மேலாகி விட்டது.

## தேவதையின் அறிமுகம்

வெள்ளிக்கிழமையானதால் வேலையை சீக்கிரமாக முடித்துக் கொண்டு, கந்தோர் மோட்டர் சைக்கிளில் விடுதியை நோக்கி வந்து கொண்டிருந்தேன்.

தோளில் சாக்கு மூட்டையுடனும், கையில் பையுடனும் எதிரே சுப்பையா வந்து கொண்டிருந்தார். பாரத்தின் சுமை அவரது முகத்தில் தெரிந்தது.

'எங்கே போகிறீர்கள்? '

'யாழ்ப்பாணம். '

'தோளில் என்ன மூட்டை? '

'எலுமிச்சம்பழம். வீட்டை கொண்டு போகிறேன். '

'ஏறுங்கோ சைக்கிளிலை,' என்று கூறினேன்.

சுப்பையாவுடனும், அவருடைய எலுமிச்சை மூட்டையையும் ஏற்றிக்கொண்டு ரயில்வே ஸ்ரேஷனுக்குச்சென்றேன்.

நான் கேட்காமலே'இங்கு எலுமிச்சம்பழம் ஒன்று ஐந்து சதம். ' என்றார் சுப்பையா.

'இவ்வளவையும் என்ன செய்வீர்கள். வீட்டிலே ஊறுகாய் போடுவீர்களா? '

'கொஞ்சத்தை ஊறுகாய் போட்டு விட்டு மிச்சத்தை வீட்டுக்கு பக்கத்துக் கடைக்காரனிடம் கொடுத்தால் காய் ஒன்றுக்கு இருபது சதம் தருவான்.'

'நல்ல வியாபாரம் தான்' என சிரித்தேன்.

'உங்களுக்கென்ன இளந்தாரி குடும்பம் குட்டி இல்லை. '

அவரது குரலில் இருந்த அழுத்தம் உண்மையை உணர்த்தியது.

ஸ்ரேஷன் வாசலில் அவரையும், எலுமிச்சை மூட்டையையும் இறக்கி விட்டு மீண்டும் விடுதிக்குத்திரும்பினேன்.

விடுதிக்கு வந்தவுடன் ருக்மன்; 'இன்று வெள்ளிக்கிழமை ஊருக்கு போகவில்லையா? ' என்று கேட்டான்.

'இல்லை. ' என்று சன்னமாக பதிலளித்தேன்.

'நீங்கள் வித்தியாசமான யாழ்ப்பாணத்தவராக இருக்கிறீர்கள். என்ன செய்வதாக உத்தேசம். '

'கந்தோரில் ஒரு சின்ன வேலை கிடக்கிறது. '

'பதவியா போவோமா? அதுவும் உங்கள் நிர்வாகம்; உள்ள பகுதி தானே? '

'பதவியாவுக்கு வா, என்று அழைப்பதிலும் பார்க்க என் வீட்டை வாவென கூப்பிட்டிருக்கலாமே? ' என விளையாட்டாக கேட்டேன்.

ருக்மன்; சங்கடத்துடன் 'அப்படி கேட்கத்தான் முதலில் நினைத்தேன்;. ஆனாலும் எங்கள் சிறிய கிராமத்துக்கு வருவீர்களோ என்ற

அவநம்பிக்கையால்தான் அப்படி கேட்டேன் ' என்றான்.

'சரி நான் வருகிறேன். '

சனிக்கிழமை பத்து மணியளவில் ருக்மனுடன் மோட்டார் சைக்கிளில் புறப்பட்டேன்.

'பதவியா ரோட்டு நல்லா இல்லை. கவனமாக ஓட்டுங்கள்.'

'கவலைப்படாதே, நீ ஒழுங்காக வழியை காட்டு. '

'ருக்மன்;, எனக்கு பதவியா பற்றி அதிகம் தெரியாது '

' காடுகள் அழித்து, குடியேற்றங்கள் அமைத்துக் கழனிகள் கண்ட பிரதேசங்களிலே பதவியாப்பகுதியும் ஒன்று. காணியற்ற, வேலையற்ற இளைஞர்கள் இந்தப்பகுதியிலே குடியேற்றப்பட்டார்கள். தென்னிலங்கை மக்களே அதிகமாக குடியேற்றப்பட்டார்கள். நிலமற்ற கண்டியச்சிங்களவர் சிலரும் குடியேற்றப்பட்டார்கள். அவ்வாறு குடியேறிவர்களுள் ஒருவர் என் தந்தை. இலவச காணி மட்டும் அன்றி, அரிசி பருப்பு ஆகிய உலர் உணவுகளும் மூன்று ஆண்டுகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. ஆரம்பகாலத்தில் வந்தவர்கள்pல் என் தந்தையும் ஒருவர். ஆரம்பத்தில் இலவசமாக காணி கிடைத்தாலும் காட்டு பிரதேசமானதால் பலர் வரவில்லை. மேலும் மலேரியாவால் பலர் இறந்தனர். ஐந்து வயதுச்சிறுவனாக இருக்கும் போது எனது அண்ணன் மலேரியாவால் இறந்தானாம். நாங்கள் எல்லோரும் இங்குதான் பிறந்து வளர்ந்தோம். '

'அப்பா எந்த இடம்? '

'களுத்துறை. '

'குடும்பத்தில் எத்தனை பேர்? '

'அப்பா அம்மாவுடன், நானும், தங்கச்சியும் '

பேசிக்கொண்டே நாங்கள் பதவியா நீர் தேக்கத்திற்கு வந்து விட்டோம்.

பதவியா குளத்தை நோக்கிச்சென்றோம். குளம் ரோட்டில் இருந்து ஒதுங்கியதாக சிலமைல் தூரத்தில் உள்ளே இருந்தது.

பதவியாகுளம்  நியாயமான பெரிய குளம் கண்ணுக்கெட்டிய தூரம்வரை நீராகத் தெரிந்தது. குளத்தின் இக்கரைப்பகுதியில் பல பெண்கள் குளித்துக்கொண்டிருந்தார்கள். பலருக்கு ருக்மனை தெரியுமாதலால் கையைக் காட்டினார்கள்.

'பதவியா குளத்திற்கு ஒரு தமிழ் பெயர் உண்டு. தெரியுமா?' என கேட்டான். அவன் கூறியதை செவியில் ஏற்றுக்கொள்ளாது, அந்தகுளத்தின் அழகிலே சொக்கினேன். அவன் தொடர்ந்து பேசி என் ரசனையை கலைக்காது மௌனம் காத்தான்.

மீண்டும் பிரதான வழியே ருக்மனின் ஊரான சிறிபுராவுக்கு பயணித்தோம். அது மணற்பாதை. மேடும் பள்ளமுமாக இருந்தது.  ருக்மன்; வழிநெடுக பலருக்கு கை காட்டி அவர்களுடைய உறவை அங்கீகரித்த படியே வந்தான்.

பதவியா பகுதி மக்களுக்கும் மதவாச்சியில் உள்ளவர்களுக்கும் பல வேறுபாடுகள் தெரிந்தன. இங்கு குடியேறியவர்கள் பரம்பரை விவசாயிகள் அல்லாதபடியால் இவர்கள் வீடுகள் பெரிதாகவும் வீட்டு வளவுகள் வேலிகளினால் அடைக்கப்பட்டு, எல்லைகள் இடப்பட்டும் இருந்தன. வளவுகளுள் பழமரங்கள் நட்டப்பட்டு இருந்தன.

கடைசியில் சிறிபுரவில் அந்தலையிலிருந்த ஒருவீட்டைக்;காட்டி, அதுதான் எங்கள் வீடு என சொல்லி மோட்டார் சைக்கிளை நிறுத்தும் படி கூறினான். வீடு சிறிதாக இருந்தாலும் ஓடால் வேயப்பட்டு இருந்தது. முற்றத்தில் உள்ள பலாமரத்தின் கீழ் சைக்கிளை நிறுத்தினேன்.

வீட்டை நோக்கி நடந்தபோது நடுத்தர வயதுடைய ஒருவர் எதிர்ப்பட்டார். அவர் சேட் அணிந்திருக்கவில்லை. நெஞ்சிலே கற்றையாக மயிர் முளைத்திருந்தது.

'இது என் அப்பா' எனக்கூறி என்னை அறிமுகப்படுத்தினான்.

உள்ளே சென்று நாற்காலி ஒன்றைக் கொண்டு வந்து முற்றத்தில் போட்டு அமரச்செய்தான்.

ருக்மனின் அம்மாவையும் அறிமுகப்படுத்தினான். ருக்மனின் சாயல் அப்படியே தெரிந்தது.

ருக்மனின் அம்மா, ' மாத்தையா யாழ்ப்பாணமோ?' என்று கேட்டார்;.

'ஆம்' என்று கூறி நட்பான முறையில் சிரித்தேன்.

நான் எழுந்து ருக்மனின் வீட்டுக்குப்பின் புறமுள்ள பச்சை பசேலென்ற வயலைப் பார்த்து, 'என்ன சாதி நெல்?' என்று கேட்டேன்.

'ஐஆர்; எட்டு' என்று அப்பா பதில் சொன்னார்.

மதிய வெயிலுக்கு பச்சை பசேலென்ற வயல் கண்ணுக்கு இதமாக இருந்தது.

வயலைப்பார்த்துக்;கொண்டு நின்ற போது எனக்கு பின்னால் யாரோ நிற்பது போல உணர்ந்து திரும்பினேன்.

எனக்கு ஒரு கணம் மூச்சு நின்று விட்டது. என் முன்னால் நின்றவள் நிச்சயம் ஓர் அழகிதான். பேராதனையிலே படித்துக் கொண்டிருந்த காலத்தில் எத்தனை பெண்களைப்பார்த்திருக்கிறேன். 'சுழட்டலாமோ' என்கிற நினைவினை எழுப்பியவர்களும் இருக்கிறார்கள். கண்டியை அழகிகள் கூடிக் கலையும் நகரம் என்று சொல்லலாம். மலையிலிருந்து வெயில் படாத மேனியர் இறங்குவதாகத் தோன்றும்.. இவள் அவர்கள் எல்லோரிலும் வேறுபட்டவளாக ஒரு கணத்தில் நெஞ்சில் பாந்தமாக பதிந்தாள்.

தட்டில் பெரிய கிளாஸ் நிறைய பச்சைத் தண்ணீரும், தேநீர் கோப்பையும் ஏந்தியபடி  ஒரு தேவதையாக நிற்கிறாள்.

அவளுடைய ஒற்றைத் தலைப்பின்னல் முழங்கால் வரை சென்றது. அவளது விழி இமைகள் வண்ணத்திப்பூச்சியின் இறக்கைகளைப் போல் படபடத்தன.

என் நிதானத்தினைக் கைப்பற்றி சுதாகரித்துக் கொண்டு இரண்டு அடி வைத்து முன்னால் சென்றபோது ருக்மனின் குரல் பின்னால் இருந்து கேட்டது. 'இவள் என் தங்கை சித்ரா'.

என் தடுமாற்றத்தை என் முகத்தில் ருக்மன் பார்த்து விடுவானோ என்ற அச்சத்தில் திரும்பிய போது, ருக்மன்; இன்னும் எனக்குப்பின்னால் நின்றான்.

வலக் கையால் தண்ணீர் கிளாஸைத் தொட்டு விட்டு தேநீர் கப்பை கையில் எடுத்தேன்.

'சித்ரா என்ன செய்கிறாய்?'

'பதவியா மகா வித்தியாலயத்தில் ஆசிரியை.'

'என்ன பாடம் படிப்பிக்கிறாய்?'

'சயன்ஸ்தான், நான் வேலைக்கு போக தொடங்கி ஆறு மாதம் தான்.

' நீ பரவாயில்லை. நான் வேலை செய்யத் தொடங்கி ஆறு நாட்கள் தான்.'

அவள் சிரித்தாள். கடற் சோகிகளை குலுக்கிப்போட்டது மாதிரி அச்சிரிப்பிலே இலேசான ஒலி கலந்திருந்தது.

ருக்மன்; தன் தங்கையிடம்;, 'என்ன சாப்பாடு வைத்திருக்கிறாய்?. யாழ்ப்பாணம் போக இருந்தவரை போகவிடாமல் இங்கே கூட்டி வந்து இருக்கிறேன்.'

'உங்கள் எல்லாரையும் சந்தித்ததே சாப்பாடு சாப்பிட்டது போலத்தான் நீங்கள் கவலைப்படவேண்டாம்.'

'அழகாக பேசுகிறீர்கள்.' என்றாள் சித்ரா.

அவளுடைய பாராட்டுத்; தேன் துளியாக இனித்தது. ருக்மனின்; மாட்டுப்பட்டியருகே சென்று பார்த்தேன். சிறிய புள்ளி மான் குட்டி ஒன்றும் அங்கே நின்றது.

'காட்டில் ஆறுமாதங்களுக்கு முன் பிடித்தது. இப்போது மாடுகளுடன் வளருகிறது என்றான் ருக்மன்;. எனக்கு வியப்பாக இருந்தது.

நானும், ருக்மனும் பதவியா குளத்துக்கு சென்று குளித்து விட்டு வந்தோம். சித்ரா உணவு பரிமாறினாள். காட்டுப்பன்றி கறியுடன் ஒரு சம்பலும் பரிமாறப்பட்டது. என்ன சம்பல் என்று புலப்படவில்லை. நிச்சயமாக மாசிக் கருவாட்டு சம்பல் இல்லை. மற்றும் ஒன்று மரக்கறி போலத் தோன்றியது பிறகு அது என்ன என்ற நிதானித்து தெரிந்து கொண்டேன். அது 'புளோஸ் கறி' பிஞ்சு பலாக்காய் கறி. அதை கறியாக சமைப்பதற்கு சிங்கள சமையல் சிறந்த முறை. மிகவும் ருசியாக இருந்தது. 'என்ன சம்பல்' என்று கேட்டபோது சித்ரா, தாய், தந்தையார் எல்லோரும் சிரித்தனர்.

'இதுதான் முள்ளம்பன்றியின் சம்பல் என்றான்' ருக்மன்.

'எப்படி தயாரிப்பது?

'முள்ளம்பன்றியுpன் இறைச்சியை நெருப்பிலே உலர்த்திக் காயவைத்து தயாரிப்பது' என விளக்கம் அளித்தான்.

'நான் இவ்வளவு ருசியாக சாப்பிட்டது இல்லை' என ருக்மனுக்கு கூறினாலும், என் கண்கள் சித்ராவின் கண்களைத் தேடின. அவளுடைய கண்களின் இமைகளாக இரண்டு வண்ணத்திப்பூச்சிகள் ஒட்டப்பட்டிருக்குமோ? என நினைத்தேன். என் கற்பனைகள் இவ்வாறு கட்டறுத்து அலைவதை நினைத்த போது எனக்கு வெட்கமாக இருந்தது.

பதவியாவுக்கு உடனடியாக வண்ணத்திக்குளம் என பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என நினைத்தபடி ருக்மனிடமும், குடும்பத்தினரிடமும் விடை பெற்றேன்.

பதவியாவில் இருந்து வரும்போது சித்ராவின் எண்ணம் என் மனதை ஆக்கிரமித்துக் கொண்டிருந்ததால் பலமுறை மோட்டார் சைக்கிளின் வேகம் குறைந்து கூடியது. ஒரு இடத்தில் எருமை மாட்டுடன் மோதி சைக்கிள் நின்றது.

விடுதிக்கு வந்த போது அங்கு எவரும் இல்லை.

தேநீரை அருந்தி விட்டு எந்தநாளும் இல்லாமல் இரவு ஒன்பது மணிக்கே படுக்கைக்கு சென்று விட்டேன். சித்ராவின் சிரிப்பு அறை எங்கும் ஒலித்தது. பெண்ணின் நினைவாக மனம் இப்படி அலை மோதுவது வெட்கமாக இருந்தாலும் இன்பமான சுகம் உடலெங்கும் பரவியது.

கல்லூhயில் படித்த காலத்திலும், பல்கலைக்கழகத்திலும் பார்த்த எவரும் மனதில் இப்படி கோலம் போட்டது இல்லை. இதைத்தான் முதல் காதல் அனுபவம் என்பதோ என மனம் நினைத்தாலும்இ காதல் ஒரு நாளில் அதுவும் சடுதியாக மேலும் ஒரு தலைப்பட்சமாக ஏற்படுமா என அறிவு முந்திரிக்கொட்டை போல் விவாதித்தது.

காலை எழுந்து சமையல் அறைப்பக்கம் சென்றபோது காமினி தேநீர் தயாரித்துக் கொண்டு இருந்தான்.

'எப்படி பதவியா?'

'நன்றாக இருந்தது. ருக்மன்; வீட்டு சாப்பாடு மிக்க விசேடமானது.'

எனக்கு தேநீரை தயாரித்துத்தந்து விட்டு, 'நான் அநுராதபுரம் செல்கிறேன் வருகிறீர்களா,' என்று கேட்டான்.

'எனது துணிகளை தோய்த்து விட்டு மதியம் செல்வோமா' எனக் கேட்டேன். அவனும் சம்மதித்தான்.

இருவரும் அநுராதபுரத்தின் பழைய நகரப்பகுதியை சுற்றிப் பார்த்தோம். வெள்ளரசு மரத்தை முதன்முறையாக பார்த்தேன். தங்கவேலியால் சுற்றி அடைத்திருந்தார்கள். அதிகம் மக்கள் இருக்க வில்லை. ஆங்காங்கு பெண்கள் வெள்ளைச்சேலை உடுத்திக்கொண்டு நின்று கொண்டிருந்தது மனதில் அமைதியைக்கொடுத்தது.

'காமினி உனக்கு கடவுள் நம்பிக்கை இருக்கா?'

'ஏன் இப்படி கேட்கிறீர்கள்.?'

'பக்தியாக மக்கள் வழிபடும் இடத்திற்கு வந்து நாங்கள் இருவரும் சுற்றுலா பயணிகள் போல் நடந்து கொள்கிறோம். அதனால்தான் கேட்டேன் '

'எனக்கு கடவுள் நம்பிக்கை உண்டு. ஆனால் விகாரைகளிலும் கோவில்களிலும் பிரார்த்தனை செய்வது மட்டும்தான் இறை நம்பிக்கையின் வெளிப்பாடு என நான் நினைக்கவில்லை. '

காமினியின் கருத்தை ஆமோதித்தபடி மேலே நடந்து இடிந்த விகாரைகளை அடைந்தோம்.

'இந்த அடுக்கு மாடி கட்டிடம் புத்த குருமாருக்காக அரசனால் கட்டப்பட்டது. ஆனால், இந்தச் சிறு கட்டடத்தை பாருங்கள். இது தான் இராசாவின் மாளிகை' என காமினி காட்டினான்.

'அந்தக்காலத்திலும் புத்த குருமாருக்கு உயர்ந்த இடந் தான் அரசனால் அளிக்கப்பட்டுள்ளது. எனவே மொத்தத்தில் அந்தக்காலத்திற்கும், இந்தக்காலத்திற்கும் அவ்வளவு வித்தியாசம் இல்லை ' எனக் கூறிச் சிரித்தேன்.

நான் சொன்னதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட காமினி, 'மக்களை ஆளும் அரசாங்கமும் சரி, அரசனும் சரி ஒரே தந்திரத்தைத்தான் இரண்டாயிரம் வருடங்களாக கையாண்டு வருகிறார்கள் ' என்றான்.

இருவரும் இளநீர் குடித்து விட்டு மோட்டார் சைக்கிளில் ஏறிய போது, ஒரு நண்பனிடம் போக வேண்டும் எனக்கூறி வயல் கரை வழியாக சென்றான்.

சில நிமிடநேரத்தின் பின் சிறிய வைக்கோலால் வேய்ந்த வீட்டின் முன்னால் வண்டி நின்றது. இறங்கினோம்.

'சகோதரயா', என குரல் கொடுத்தான் காமினி.

'காமினி சகோதரயா', என்றபடி இருபத்தைந்து வயதுடைய இளைஞன் சிறுதாடியுடன் வெளியே வந்தான். ஓர் அடையாளச்சின்னம் போன்ற அவன் முகத்தில் குறுந்தாடி மிளிர்ந்தது. அந்த இளைஞன் பண்டாரா என அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டான். அறிமுகத்தின் பின் வீட்டின் உள்ளே சென்றோம்.

வீட்டின் நடுப்பகுதியிலிருந்த சுவரிலே ரோகண விஜயவீரவின் படம் தொங்கியது.

'மதவாச்சி எப்படி இருக்கு?' என்று என்னைக் கேட்டான் பண்டார.

'மிக நல்லா இருக்கு.'

'யாழ்ப்பாணப்பிரச்சனை எப்படி?'

'பிரச்சனை என்ற சொல் வந்தாலே பிரச்சனைதானே',

'புலி இயக்கத்திற்கு ஆதரவு எப்படி?'

'நான் இரண்டு நாள் தான் யாழ்ப்பாணத்தில் இருந்தேன். எனவே விபரமாக சொல்ல முடியாது. என்னைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு ஒரே வழி புலிகள் இயக்கத்திற்கு ஆதரவளிப்பதுதான் என நினைக்கிறார்கள்,' என நான் யதார்த்த நிலையைக் கூறினேன்.

'புலிகள் நாட்டைப் பிரிக்கக் கேட்கிறார்கள். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?' என பண்டாரா கேட்டான்.

'நாட்டை பிரிக்க முடியும், என்றோ நாட்டை பிரித்தால் தமிழர் பிரச்சனை தீரும் என்றோ நான் நினைக்கவில்லை. ஆனால் பண்டார, இந்த நாட்டை தொடர்ச்சியாக ஆண்டு வந்த சிங்கள கட்சிகள்தான் இன்றைய அவலங்கள் முழுவதற்கும் பொறுப்பேற்க வேண்டும்.'

'அது உண்மைதான்,' என்றான் காமினி.

'ஏன் தமிழர் எங்களுடன் சேர்ந்து அரசாங்கத்தை எதிர்க்கக் கூடாது', பண்டாரவின் கேள்வி.

'எங்களுடன் என்றால் யாருடன்,' விடை தெரிந்தாலும் பண்டாரவின் வாயின் மூலம் கூற வைக்க விரும்பினேன்.

'மக்கள் விடுதலை முன்னணி துஏP '

இது பெரிய கேள்விதான்! கடந்த கால வரலாற்றில் இந்தக் கேள்விக்கு பதில் இல்லை. எதிர்காலத்தில்; எப்படியோ எனக்குத் தெரியாது.

அத்துடன் அரசியல் பேசுவதை நிறுத்த விரும்பி, 'போவோமா', என்றான் காமினி.

மதவாச்சியை நோக்கி வரும் போது காமினி மன்னிப்புக் கேட்டான்.

'என்னை மன்னிக்க வேண்டும். நான் பண்டார அரசியல் பேசுவானென்று எதிர் பார்க்க வில்லை.'

'காமினி, இது நாட்டுப்பிரச்சனை, இதிலிருந்து எவருமே தப்ப முடியாது. நான் மற்றவர் கருத்தை கேட்பதும் என்னுடைய கருத்தை தெரிவிப்பதுந்தானே பேச்சு சுதந்திரம் எனப்படும் அடிப்படை ஜனநாயகம்.'

'நான் துஏP அங்கத்தவன் இல்லை. ஆனால் அவர்கள் கொள்கைகளில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இரண்டு மாதமளவில் ரோகண விஜயவீர சகோதரயா அநுராதபுரத்தில் பொதுக் கூட்டமொன்றிற்கு வருகிறார்.'

' நான் சந்திக்க விரும்புகிறேன்.'

'அதற்கென்ன, பண்டாரதான் மாவட்டச் செயலாளர், நாங்கள் ஒழுங்கு பண்ணுகிறோம்.'

விடுதிக்கு வந்தவுடன் இருவரும் ஒன்றாகவே உணவு அருந்திவிட்டு நித்திரைக்கு எங்களது அறைகளுக்குச் சென்றோம்.

கண்ணை மூடியபடி இருந்து சனி, ஞாயிறு நாட்களிலும் எனக்கு ஏற்பட்ட அநுபவத்தை, நன்றாகப் புல்லு மேய்ந்த மாடு இரை மீட்பது போல மனக்கண்ணில் ஓட விட்டேன்.

சித்ராவின் வட்டமுகமும், நீளவிழிகளும் சமவெளியில்

கரைகளைத்தழுவிக் கொண்டு சத்தமில்லாமல் ஓடும் ஆற்றின் ஓட்டத்தைப் போல் இருந்தது. அநுராதபுரத்தின் இடிந்த கட்டிடங்களும், பண்டாரவின் வேகமான அரசியல் நிலை பற்றிய கேள்விகளும் கற்பாறையில் விழுந்தெழும் அருவியாக தெறித்து மனதில் நீர்த்திரையை உருவாக்கியது.

**நீதிமன்றம்**

மேசையில் இருந்த கடிதங்களைத் திறந்தேன். முதலாவதாக இருந்த கடிதம் என்னை நீதிமன்றத்துக்கு வரும்படி அழைக்கும் அழைப்பாணை. வைத்தியர் ஒருவரிடம் இருந்து மருத்துவ சான்றிதழ் ஒன்ற எடுத்து அனுப்ப வேண்டும் என நினைத்துக் கொண்டேன்.

இரண்டாவது முறையாக நீதிமன்றம் செல்லாமல் உடல் நலக்குறைவு என பொய் சான்று அனுப்புவது மனத்தை உறுத்தியது.

சுமூகத்தில் சட்டமும் நீதிமன்றங்களும் மதிக்கப்பட வேண்டியவை. அதே நேரத்தில் நீதிமன்றம், சட்டம் என்பன சாதாரண மக்களின் உணர்வுகளையும் நியாயங்களையும் பிரதிபலிக்க வேண்டும். இதன் அடிப்படையில் தான் 'கொமன்லோ' என்ற சட்டம் வழக்கில் உள்ளது. முதன்முறையாக வாழ்க்கையில் நீதிமன்றம் ஏறியபோது எனக்கு கசப்பான அனுபவம் ஏற்பட்டது. அது அந்தக் கசப்பு மருந்துகள் விழுங்கிய பின்னும் நாக்கை விட்டு அகலாத விதமாக தொடர்கிறது.

மதவாச்சியில் வாழத்தொடங்கிய சில வாரங்களில் சமரசிங்க எனது அறைக்கு ஒருவரை அழைத்து வந்தார்.

'மாத்தையா, உங்களிடம் இவர் பேச வேண்டுமாம்' என அறிமுகப்படுத்தினார்.

'எனது பெயர் முகைதீன்;' என தமிழில் கூறியபோது சமரசிங்க அறைக்கதவை சாத்திக்கொண்டு வெளியே சென்றார்.

'என்னால் தங்களுக்கு என்ன ஆக வேண்டும்' என கூறிக்கொண்டு எதிரில் உள்ள நாற்காலியில் அமரும்படி சைகை காட்டினேன்.

தலையில் வெள்ளை லேஞ்சி கட்டி இருந்தார். வெள்ளைச் சட்டையும் கட்டம் போட்ட சாரமும் அணிந்திருந்தார்.

தமிழ் பேசும் முஸ்லிம் என மனதில் நினைத்துக்கொண்டேன்.

'நான் புல்லெவியாவில் இருக்கிறேன். மாடுகளை வியாபாரம் செய்கிறேன்.'

' அதென்ன மாடுகளை வியாபாரம் . . . ?'

' கொழும்புக்கு மாடுகளை ஏற்றுவது. . .'

இப்பொழுது தெளிவாகப் புரிந்து கொண்டேன்.

விவசாய பிரதேசங்களில் மாடுகளை வாங்கி கொழும்பிலே வாழ்வோருக்கு இறைச்சியாக கிடைக்க கொழும்புக்கு அனுப்பி வைத்தலாகும்.

' நான் என்ன செய்ய வேண்டும்.?'

'மாடுகளைப் பார்த்து, அவை நலமாக இருக்கின்றன என மருத்துவ சான்றிதழ் தரவேண்டும். இந்த சான்றிதழைக் காட்டித்தான் லொறிகளில் அவற்றை ஏற்ற அரசாங்க அதிபரிடம் அனுமதி பெற முடியும்.'

'அதற்கென்ன தருகிறேன். ஆனால் மாடுகளை நான் பரிசோதிக்க வேண்டும்.'

'ஒவ்வொரு மாடுகளும் வௌ;வேறு இடங்களில் உள்ளன.'

'அதுக்கென்ன' நான் கேட்டேன்.

இதேசமயம் முகைதீன் கையில் வைத்திருந்த தோல் பையில் இருந்து பச்சைநோட்டுக்களை எடுத்து என்னிடம் நீட்டினார்.

'ஏன்? எதற்கு?'

'மாடுகளைப் பார்ப்பதற்கு'.

'அது வேண்டாம் மாடுகளை பார்த்து விட்டு சான்றிதழ் தருகிறேன்.' என கூறியபடி ஆசனத்தை விட்டு எழுந்தேன்.

என் மனோநிலையை புரிந்து கொண்ட முகைதீன் எழுந்து வெளியே சென்றார்.

சில நிமிட நேரத்தில் சமரசிங்க உள்ளே வந்து, 'மாத்தையா, முன்னால் இருந்தவர்கள் எல்லோரும் காசைப் பெற்றுக் கொண்டு பத்திரம் கொடுப்பார்கள்.'

' நான் அப்படி இல்லை. மாடுகளைப் பார்ப்போம்.'

மதவாச்சி டவுனில் இருந்து பழைய காரொன்றை முகைதீன் கொண்டு வந்தார். நானும் சமரசிங்கவுடன் மாடுகளைத் தேடி முகைதீனுடன் புறப்பட்டோம்.

சிலமாடுகள் மதவாச்சிக்கு அருகே உள்ள கிராமங்களில் நின்றன. அவற்றைப் பார்வையிடுவதில் சிரமங்கள் இருக்கவில்லை. ஏனைய மாடுகளைத் தேடிச்சென்ற போது அவை மேயப் போய் விட்டன. சில இடங்களில் மாடுகளை முகைதீன் காட்டியபோது அவற்றின் சொந்தக்காரர்கள் இருக்கவில்லை. பகல் முழுக்க அலைந்து திரிந்து பன்னிரண்டு மாடுகள் பரிசோதிக்க வேண்டிய எனக்கு எட்டு மாடுகளை மட்டுமே பார்க்க முடிந்தது.

'முகைதீன், நான் மாடுகளைப் பார்க்காமல் அவைகளின் உடல்நலம் குறித்த சான்றிதழை எப்படித்தர முடியும்?'

'எல்லா மாடுகளுக்கும் பணம் கொடுத்து விட்டேன். ஐயா, போட்ட காசை எடுக்காவிட்டால், குடும்பத்திற்கு கஞ்சி ஊற்ற முடியாது'.

சமரசிங்க, 'மாத்தையா உடல் நலக்குறைவான மாட்டை ஒருவரும் வாங்க மாட்டார்கள். அப்படி வாங்கினாலும் லொறியில் ஏற்ற மாட்டார்கள். நீங்கள் பயப்படாமல் பத்திரத்தை கொடுங்கோ' என்று யதார்த்தமாக சொன்னான்.

சமரசிங்கவின் தர்க்கத்தில் உள்ள உண்மை புரிந்தது. ஆனாலும், அரைமனதுடன் பார்க்காத மாடுகளுக்கும் சேர்த்து சான்றிதழ் கொடுத்தேன்.

இதன் பின்னர் பலதடவை பத்திரம் கேட்டபோதும் கொடுத்தேன். முகைதீன் பத்திரத்தை பெற்றுக்கொண்டு போகும் வழியில் சமரசிங்கவிடம் பணம் கொடுத்து விட்டுப் போவார். சமரசிங்க அன்றைய தினம் கந்தோரில் எல்லோருக்கும் விசேடமான சாப்பாடு வாங்கி வருவார். . லஞ்சப்பணத்தில் வந்த சாப்பாடாக இருந்ததால் ஆரம்பத்தில் ஒருமாதிரி இருந்தது. பின்னர் அது பழகி விட்டது.

பசுக்களை மாமிசத்துக்கு கொலை செய்யக்கூடாது என சட்டம் இருந்தது. ஆண்மாடுகளுக்கு மட்டும் நான் கொடுத்த பத்திரத்துடன் பசுக்களையும் சேர்த்து லொறியில் ஏற்றிச் சென்ற போது முகைதீன் பொலிஸில் மாட்டிக் கொண்டாh.;

கெப்பித்திக்கெல்லாவை நீதி மன்றத்திலே இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அங்கு வந்து சாட்சியம் அளிக்கும்படி பிடி ஆணை எனக்கு வந்தது.

கெப்பித்திக்கெல்லாவை நீதிமன்றத்தின்; அருகே எனது மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு நீதிமன்ற கட்டிடத்தை பார்த்தேன். பழைய கட்டிடம். பல வருடங்களுக்கு முன் காவி அடித்திருக்க வேண்டும். மஞ்சள் கலருக்கு இடையில் வெள்ளை சுண்ணாம்பு சில இடங்களில் ஒரு இடத்தில் செங்கல் நிறமும் தெரிய அந்த சுவர் பல வர்ணமாகத் தெரிந்தது. கட்டிடத்தின் முன்பகுதியில் அரசாங்கப் பாடசாலை போல் அரைச்சுவர் எழுந்து நின்றது. அந்த சுவரிலே காகங்களும் புறாக்களும் தமது எச்சங்களை தாராளமாக தூவி இருந்தன. இந்தக் கட்டிடத்தில் மாதம் ஒரு முறையே நீதி மன்றம் நடைபெறும். இதனால் அரசினர் அந்தக்கட்டடத்திற்குப் பராமரிப்புத் தேவையில்லை என நினைத்து விட்டார்களோ? அல்லது பராமரிப்புக்கு ஒதுக்கப்பட்ட பணம் யாருடைய சட்டையில் உறவாடுகிறதோ?

வாழ்க்கையில் முதன் முறையாக நீதி மன்றம் ஏறும் போது சுத்தமான நீதிமன்றத்தில் ஏறுவதற்கு கொடுப்பனவு இல்லை என நினைத்துக் கொண்டேன்.

'பசு வைத்தியர் சூரியன்' என ஒருவன் உள்ளே இருந்து கூவியதும் அவசரமாக உள்ளே சென்றேன்.

நீதிமன்ற ஊழியர் ஒருவர் என்னை கூண்டில் ஏறும்படி கூறினார். கூண்டில் ஏறியதும் நீதிபதியின் முகத்தை ஏறிட்டு பார்த்தேன். அறுபது வயது மதிக்கத்தக்க ஒருவர் உயரமான மேசைக்கு அருகில் உள்ள கதிரை ஒன்றில் அமர்ந்திருந்தார். சினிமாப்படங்களில் மட்டும் நீதிமன்றக்காட்சிகளைப்பார்த்த எனக்கு அவரது தோற்றம் சப்பென்று இருந்தது.

நான் நீதிபதியை பார்த்ததும் உடனே முகத்தை திருப்பிக் கொண்டு நீதி மன்ற ஊழியரை தன்னருகே வரும் படி சைகை செய்தார். பின்னர் ஊழியரின் காதில் ஏதோ மெதுவாகக்கூறினார். ஊழியர் என்னை அணுகி 'அடுத்தமுறை நீதிமன்றம் வரும் போது உமது சேட்டின் கை நீளமாக இருக்க வேண்டும். இப்போது நீர் கூண்டை விட்டு இறங்கலாம். வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது' என்றார்.

அப்போது எனது கையைப் பார்த்தேன். மோட்டார் சைக்கிளை ஓட்டுவதற்கு வசதியாக சேட்டின் கை முழங்கை வரையில் மடிக்கப்பட்டிருந்தது.

அவமானத்துடனும் ஆத்திரத்துடனும் நீதிமன்றத்தை விட்டு வெளியேறினேன். நீதிமன்றத்தை சுத்தமாக வைத்திருக்க முடியவில்லை. எனது சேட்டின் கை மடிக்கப்பட்டதற்காக, வழக்கை ஒத்தி வைத்து எத்தனையோ பேரின் நேரத்தையும் அரசாங்கப்பணத்தையும் வீணாக்குகிறார்கள். மீண்டும் சாட்சி சொல்ல இங்கு வருவதில்லை என மனதில் நினைத்துக் கொண்டேன்.

இப்போது இரண்டாம் முறையாக மருத்துவ சான்று இதழ் அனுப்ப வேண்டிய சங்கடம் எனக்கு.

மீண்டும்  பதவியா

அலுவலகத்தில் அன்று வந்த கடிதங்களை படித்துக் கொண்டிருந்;தேன். ஒரு கடிதம் தனிச்சிங்களத்தில் எழுதப்பட்டதாக இருந்ததால் மெனிக்கேயிடம் கொடுத்து வாசிpக்கிச்சொன்னேன். மெனிக்கே படித்து விட்டு 'பதவியா மகாவித்தியாலயத்தில் கால் நடை விவசாயம் பற்றி இம்மாதம் பதினைந்தாம்; திகதி மாணவர்களுக்கிடையில் பேச முடியுமா என பாடசாலை அதிபர் கேட்டிருக்கிறார் ' என்றாள்.

பதவியா மகாவித்தியாலயத்தில்தான் சித்திரா வேலை செய்கிறாள் என்ற நினைப்பு வந்தவுடன் சந்தோஷத்தில் சிரித்து விட்டேன்.

'என்ன மாத்தையா சிரிக்கிறீர்கள்?', என்றாள் மெனிக்கே.

'இல்லை, நான் வருகிறேன், என்று சிங்களத்தில் எழுதிக் கொண்டு வா,' என அவளுக்கு கூறினேன்.

மெனிக்கே எழுதிக்கொண்டு வந்த கடிதத்தில் என் கையொப்பத்தை இட்டு என் கையாலேயே தபாலில் சேர்த்தேன்.

வெள்ளிக்கிழமை எப்போது வரும் என்று எதிர்பார்த்துpக்  கொண்டிருந்தேன். ருக்மனிடம், 'நான் பதவியா போவதாக இருக்கிறேன் நீயும் வருகிறாயா?' என கேட்டபோது, அவன் தனக்கு வேலை இருப்பதாகக்கூறினான். இது நான் எதிர்பார்த்தது தான்.

பதவியாவை நான்  சென்றடைய காலை பத்து மணியாகி விட்டது. நேரடியாக பாடசாலை அதிபரின் அறைக்குச்சென்றேன்.

அதிபர் ஜெயசிங்கா நடுத்தர வயது மனிதர். அவரது பேச்சு அவரை கண்டிச்சிங்களவராக காட்டியது. உயரமான தோற்றமும் வெள்ளை தேசிய உடையும் அவர் மீது மரியாதையை ஏற்படுத்தியது. பதவியா போன்ற விவசாய பிரதேசங்களில் ஆசிரியராக வேலை செய்வது இலகுவான விடயமல்ல. மேலும் மாணவர்களில் பலர் பொருளாதாரப்பிரச்சினைகளால் படிப்பில் அக்கறை காட்டுவதில்லை. இப்படியான இடங்களில் வேலை செய்வதற்குப் பொறுமையும் சேவை மனப்பான்மையும் கொண்டவர்களே வெளியூரில் இருந்து வரமுடியும். அரசியல்வாதிகள் தங்களுக்கு பிடிக்காதவர்களை பதவியா போன்ற இடங்களுக்கு இடமாற்றம் செய்வது உண்டு. ஜெயசிங்காவை பார்த்தால் அப்படி வந்தவராகத்தெரியவில்லை.

எனது கையை பிடித்தபடி, 'நாங்கள் அழைத்தவுடன் வந்தமைக்கு நன்றி', என அதிபர் ஜெயசிங்கா கூறினார்.

'நீங்கள் அழைத்ததற்கு நான் நன்றி சொல்ல வேண்டும்.'

'எங்கள் பாடசாலைக்கு உங்களைப் போன்ற படித்தவர்களை அழைத்து மாணவர்களிடம் பேச வைத்தல் மூலம் விஞ்ஞானத்தில் அவர்களுக்கு அக்கறை உண்டாகும் என நினைக்கிறோம். இந்தத் திட்டத்தின்கீழ் மாதம் ஒருவரை அழைத்து வருகிறோம். முக்கியமாக உயர்தர வகுப்பில் படிக்கும் மாணவர்கள்pடம் இது நல்ல பயனை உருவாக்கும் என நினைக்கிறோம் ' என அதிபர் கூறினார்.

'எனக்கு சிங்களம் அதிகம் பேச வராது' என்றேன். அவை அடக்கமல்ல. உண்மையும் அதுதான்.

'பரவாயில்லை உங்களால் முடிந்தவரை பேசுங்கள்' எனக்கூறினார்.

அதிபரின் அறையில் இருந்து வெளியே வந்த போது எதிரே சித்ரா வந்தாள்.

'எப்படி இருக்கிறீர்கள்'? என சித்ரா கேட்டுக்கொண்டே என் அருகில் வந்தாள்.

'நீங்கள் பேசுங்கள்', என கூறிவிட்டு அதிபர் ஜெயசிங்கா மீண்டும் தனது அறைக்குச்சென்றார்.

'இது எல்லாம் உன் வேலை தானே?' ஒத்துக் கொள்வது போல தலையைக் கவிழ்த்தாள்.

'மதவாச்சியில் இருந்து நீங்கள் வருவீர்களா? என அதிபர் கேட்டபோது நீங்கள் வருவீர்கள் ' என்று சொன்னேன்.

அவளுடைய சிவப்பு நிறச் சேலையும் அதே நிறத்தில் சட்டையும் அவள் கண்கள்தான் வண்ணத்துப்பூச்சிகளா, அல்லது அவளே ஒரு பென்னம் பெரிய வண்ணத்துப்பூச்சியா?

'இன்று நல்ல அழகாக இருக்கிறாய்.'

'நன்றி', என நாணித் தலை குனிந்தபோது.. இந்த நாணம் அவளுடைய கன்னங்களிலே எவ்வாறு குங்குமத்தை அள்ளிச் சொரிந்தது?

'கூட்டத்தை ஆரம்பிப்போம்', என அதிபரின் குரல் கேட்டு இருவரும் திரும்பினோம்.

பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களுமாக அந்த ஹோலில் கூடியிருந்தனர்.

இலங்கை போன்ற நாடுகளில் எப்படி கால்நடைகளிலிருந்து மொத்த நன்மைகள் பெறப்படுவதில்லை என்றும், அதிலும் பதவியா போன்ற இடங்களில் மாடுகளில் பால் கறக்கப்படுவதில்லை என்றும், அப்படி எடுக்கப் பட்டாலும் சந்தைப்படுத்தப் படுவதில்லை என என் பேச்சிலே குறிப்பிட்டேன். இறுதியாக இந்த விடயங்களை மக்கள் அரசியல்வாதிகளின் கவனத்துக்கு கொண்டு வர வேண்டும் என்று தட்டுத்தடுமாறி எனக்குத்தெரிந்த சிங்களத்தில் கூறினேன்.

சித்திராவும் அதிபரும் கால் நடை வைத்தியத்தைப்பற்றி சிறிது கூறும்படி கேட்டபோது ஆங்கிலத்தில் கூறினேன். நான் கூறியவற்றை அதிபரும் சித்திராவும்; மாணவர்களுக்கு புரியும் வகையில் சிங்களத்தில் கூறினார்கள்.

அதிபர் எனக்கு நன்றி கூறிவிட்டு மாணவர்களுக்கு இறுதிப்பரீட்சை பற்றி கூறத் தொடங்கிய போது நானும் சித்திராவும் ஹோலை விட்டு வெளியே வந்தோம்.

கட்டடத்தின் வெளியே உள்ள மாமரத்தின் கீழ் இருவரும் நின்றோம். 'சித்திரா! எப்போது மீண்டும் சந்திக்கலாம்?.'

'நீங்கள் எப்போதும் பதவியா வரலாம்?'

'நீ எப்பவாவது மதவாச்சி வரமாட்டாயா?' என ஆவலுடன் கேட்டேன்.

'அடுத்த வெள்ளிக்கிழமை வவனியாவுக்கு போக வேணும். எனக்கு ஒரு கடிகாரம் வாங்கினேன். ஆனால் அது பிடிக்கவில்லை. திருப்பிக்கொடுக்க வேணும்.'

'அடுத்த வெள்ளிக்கிழமை நானும் யாழ்ப்பாணம் போக வேணும். உனக்கு சம்மதமாகில் மதவாச்சியில் இருந்து உன்னோடு வவனியாவுக்கு வருகிறேன்.'

'எனக்கு சம்மதம்.'

அதிபர்; வெளியே வந்ததும் அவரிடமும் சித்ராவிடமும் விடை பெற்றுக் கொண்டு மதவாச்சி திரும்பினேன்.

விடுதியில் உடை மாற்றிக்கொண்டு மதவாச்சிக் கடை வீதிக்கு புறப்படத் தயாரானபோது ராகவனும் என்னுடன் சேர்ந்து கொண்டான்.

ராகவன் தனக்கு கட்டடத் திணைக்களத்தில் சனிக்கிழமை வேலை இருப்பதாக கூறினான். எனக்கு ராகவனின் அப்பாவித் தனமான சிரித்தமுகம் மிகவும் பிடித்திருந்தது.

வேலை முடிந்தால் விடுதியில் ராகவனை காணமுடியாது. இரவு பத்து மணிக்கு பின்புதான் மீண்டும் விடுதியில் காண முடியும்.

பலதடவைகள், 'நீ எங்கு போகிறாய்? என்னையும் கூட்டிக்கொண்டு போ', எனக்கேட்டிருக்கிறேன்.

'அது உங்களுக்கு சரி வராத இடம்', என சிரித்தபடி நழுவி விடுவது ராகவனின் வழக்கம்.

'நான் தலைமயிர் வெட்டவேண்டும். எங்கு வெட்டலாம்?'

'நம்மட யாழ்ப்பாணத்து ஆள் இங்கே சலூன் வைத்து இருக்கிறான். வாருங்கள் காட்டுகிறேன்.'

'தலை மயிர் வெட்டவும் நம்ம ஊர் ஆளிடமா வெட்டவேண்டும்?' என கேட்டபடி சலூனுக்குள் நுழைந்தோம்.

சுவரில் பெரிய அளவில் தமிழகஇ வடஇந்திய நாட்டு நடிகைகளின் முழு உருவப்படங்கள் சுவர்களை அலங்கரித்தன.

'எப்படி ஐயா, என்றபடி சலூனின் பின் பகுதியில் இருந்து வாட்டசாட்டமான ஒருவர் வந்தார். முன் தலையில் மயிர் உதிர்ந்து இருந்ததால் நெற்றி மட்டும் அல்ல தலையின் அரைபக்கத்திலும் திறுநீறு பூசி சைவப்பழமாக காட்சிதந்தார்.

'ஆறுமுகண்ணை, ஐயா நம்மடை ஆள் ஒருக்கா நல்லா தலையை வெட்டுங்கோ!' என ராகவன் கூறினான்.

'அதுக்கென்ன இருங்கோ '.

என் தலையில் கைவரிசை காட்டியபடி, 'ஐயா யாழ்ப்பாணத்தில் எந்த இடம் ..'?

'கொக்குவில்'

'எவ்வளவு காலம் மதவாச்சியில் வேலை செய்கிறீர்கள்?'

'இரண்டு கிழமை'

'எங்க தங்கி இருக்கிறியள்?'

'அரசாங்க விடுதியில்'

எனது தலைமயிரை வெட்டுவதை நிறுத்தி விட்டு ராகவனிடம் கோபமாக 'நீ தான் அங்கு தங்கி இருப்பதும் இல்லாமல் ஐயாவையும் சேகுவாராக்காரன்களோடு சேர்த்து விட்டாய்' என்றார்.

அவரது குரலில் இருந்த உண்மையான கோபம் என்னை வியப்பில் ஆழ்த்தியது.

'நான் தான் அங்கு போனேன். ராகவனுக்கும் இதில் எந்த சம்பந்தமும் இல்லை.' என்று நான் உண்மையை கூறினேன்.

'அது சரி, அங்கே இருப்பவர்களெல்லாம் துஏP காரர் என்பது பொலிசுக்குத் தெரியும். நீங்கள் அங்கு இருப்பது நல்லதில்லை. நாடு இருக்கிற நிலை சரியில்லை. என்மனதில் பட்டதைச்சொன்னேன்'.

ஆறுமுகத்திற்கு சிறிது தாரளமாகவே பணத்தை கொடுத்து விட்டு சலூனை விட்டு வெளியேறினேன்.

கண்டி வீதியில் நடக்கத் தொடங்கினேன். அந்த வீதியில் ஒரு நெசவுசாலை இருக்கிறது. அதன் எதிரில் மதவாச்சி வைத்தியசாலை அமைந்திருந்தது.

'ராகவன்' என பெண்குரல் ஒலித்தது. நானும் திரும்பிப் பார்த்தேன்.

நெசவுசாலைக்கு பக்கத்து வளவில் மாமரத்தின் கீழ் இரு பெண்கள்

தலை வாரியபடியே நின்று கொண்டிருந்தார்கள். நான் ராகவனை பார்த்த போது, ராகவன் 'நீங்கள் போங்கள் நான் பின்னால் வருகிறேன்', என்று கூறிவிட்டு பெண்களை நோக்கி நடந்தான்.

மாலை நேரத்தில் ராகவன் மறைவதற்கும் இது தான் காரணமாக இருக்க வேண்டும் என நினைத்தபடி விடுதியை நோக்கி நான் நடக்கலானேன்.

வவனியா தகனம்

சித்திரா வவனியாவுக்கு போவதாக சொன்ன வெள்ளிக்கிழமை காலையில் நான் சுறுசுறுப்பாக இயங்கினேன். அலுவலகத்தில் மெனிக்கவிடமும் சமரசிங்கவிடமும் அன்று செய்யவேண்டிய வேலைகளைக்; கூறி நான் யாழ்ப்பாணம் நோக்கிய பயணத்தைத்துவங்கினேன்.

நடந்து வரும் வழியில் ஒருவர் தன் நாய்குட்டிக்கு புழு கண்டிருப்பதாகவும் அதற்கு மருந்து வேண்டும் என கேட்டார்.

'நல்லவேளை நான் பஸ்ஸில் ஏற முதல் கேட்டீர்கள்'.

சுpறு துண்டில் புழுவுக்கான மருந்தை எழுதிக்கொடுத்து விட்டு மனதுக்குள் ஆத்திரம் வந்தாலும் சிரித்தபடியே அந்த மனிதருக்கு விடை கொடுத்தனுப்பி பஸ்நிலையத்தை நோக்கி வேகமாக நடந்தேன். நல்லவேளையாக பத்து மணிக்கு வரும் பஸ் வராதது ஆறுதலாக இருந்தது. பஸ்கள் பிந்தி ஓடுவது சிலவேளைகளில் உதவியாக இருக்கிறது.

பத்துமணி கழிந்து பத்து நிமிடம் ஆகியும் பஸ் வராததால் பரபரப்புடன் சுற்றி சுற்றி நடந்தேன். பஸ்நிலையத்துக்கு அருகில் உள்ள கடைக்குத் தேநீர் அருந்துவதற்குச்சென்றபோது, பதவியாவிலிருந்து அநுராதபுரம் செல்லும் பஸ் வருவது கண்டு மீண்டும் திரும்பி வந்தேன்.

பஸ்ஸின் கம்பிகளுக்கூடாக சித்ராவின் முகம் கண்டும் மனம் ஆறுதல் அடைந்தாலும், இதயத்தின் துடிப்பு கூடியது. பதவியா பாடசாலையில் அணிந்திருந்த அதே சிவப்பு சேலையும் சட்டையும் அணிந்திருந்தாள். அவள் சேலையை கண்டிச் சிங்களப் பெண்களின் மோஸ்தரிலே அணியாது யாழ்ப்பாணப் பெண்களின் பாணியில் அணிந்திருந்தாள்.

'சித்ரா, சிவப்பு சேலை அணிந்து வந்ததற்கு நன்றி'

பதில் சொல்லாமல் சிரித்தாள்.

அப்போது வவனியாவுக்கு செல்லும் பஸ் ஒன்று பஸ்நிலையத்தில் வந்து நின்றது. அதில் இருவரும் ஏறினோம்.

பஸ்ஸில் இருவர் இருக்கும் சீட் ஒன்றில்; யன்னல்கரையில் சித்ராவை அமரச்செய்து அடுத்தாற் போல் நான் அமர்ந்;தேன்.

'சித்ரா பாடசாலை மாணவர்களுக்கு நான் கூறியது புரிந்ததா?'.

'ஏன் அப்படி கேட்கிறீர்கள்?'

'சிறு சந்தேகம். அதுசரி, நீ அடிக்கடி வவனியா போவாயா?'

'அடிக்கடி இல்லை. எப்பவாவதுஇ நல்ல சாரி வாங்க வேண்டுமென்றால் செல்வேன். அநுராதபுரத்தில் நல்ல துணிக் கடைகள் கிடையாது.'

'இந்த சாரியும் வவனியாவில் வாங்கியதா?'

'ஆம்'.

'வவனியாவுக்கு வரும் போது மட்டுந் தான் இப்படி சாரி கட்டுவாய். அநுராதபுரத்துக்கு போகும் போது சிங்களப்பெண் போல் சாரி கட்டுவாயா?' என சிரித்தபடி அவளை சிறிது சீண்டினேன்.

ஆத்திரத்துடன் ஒரு முறைப்பு. பின் யன்னல் வழியாக வெளியே பார்த்தாள்.

எனக்கு ஒரு மாதிரி போய் விட்டது. எப்படி சமாதானப் படுத்துவது எனத் தெரியவில்லை.

' பிளீஸ் '

என்னை திரும்பிப் பார்க்கவில்லை. கண்இமைகள் படபடப்பிலும், முகம் சிவந்திருப்பதிலும் கோபம் உண்மையானதென்று தெரிந்தது.

'என்னை மன்னித்துக்கொள். விளையாட்டுக்குச் சொன்னேன்.'

இப்போது திரும்பிப்பார்த்தாள். கோபம் தணியவில்லை.

'பிளீஸ் சித்ரா!'

கரகரத்த குரலில் 'இதுதான் முதன்முறையாக நான் இப்படி சாரி கட்டினது. அதுவும் பக்கத்து வீட்டு நந்தாவிடம் கேட்டு தெரிந்து கட்டியது.. நான் இதை உடுத்த பட்ட பாடு' சிறிது தணிந்தாள்.

இப்போது இடது கண்ணின் கரையோரத்தில் ஒரு கண்ணீர்த் துளி விழுந்து விடவா, வேண்டாமா என என்னைப் பார்த்துக்கேட்டது போல் இருந்தது.

எனது லேஞ்சியை எடுத்து 'கண்ணை துடைத்துக் கொள். மற்றவர்கள் பார்த்து விடுவார்கள்' என கூறினேன். அவள் என் லேஞ்சியை பெற்றுக் கண்களை துடைத்துக் கொண்டாள். 'விளையாட்டுக்காக கூறியதை இவ்வளவு சீரியஸாக எடுத்துக் கொள்வாய் என நான் கனவிலும் நினைக்க வில்லை.'என உண்மையில் மனம் நெகிழ கூறினேன்.

அவள் முகம் பழைய நிலைக்கு வந்தது. பஸ்சும் வவனியா பஸ் நிலையத்தை வந்தடைந்து விட்டதற்கு அடையாளமாக புழுதிப்படலம் எழும்பி கண்ணை மறைத்தது.

பஸ்ஸால் இறங்கிய போது சித்ரா எனது லேஞ்சியை திருப்பித் தந்தாள். லேஞ்சியை நான் விரித்து வட்டமாக நனைந்த பகுதியை காட்டி 'கோபத்தின் அடையாளச்சின்னம்' என்றேன்.

அவள் களுக்கென்று சிரித்தாள்.

'அப்பாடி இப்பொழுதுதான் பழைய சித்ராவைப் பார்க்கிறேன்' என்றபடி கடிகாரக் கடைக்குள் சென்றோம்.

கடிகாரத்தை மாற்றிக்கொண்டு வரும் போது துணிக்கடை அருகில் சித்ராவின் நடையின் வேகம் குறைந்தது.

'என்ன சாரி பார்க்க வேணுமா'? என்றபடி துணிக் கடைக்குள் ஏறிய போது ஒரு துப்பாக்கிச்சூட்டுச் சத்தமும் பின்பு அதைத் தொடர்ந்து பல துப்பாக்கிச்சூட்டு சத்தங்களும் கேட்டன.

வெளியே வந்து பார்த்தோம். சிறிது தூரத்தில் வவனியா பொலிஸ் நிலையம் தெரிந்தது. அங்கு எதுவித நடமாட்டமும் தெரியவில்லை.

'ஏதோ பிரச்சனை போலிருக்கு'

துணிக்கடைக்காரர் எங்களை வெளியே செல்லும்;படி கை காட்டிவிட்டு வாசலின் இரும்புக்கதவை இழுத்து மூடினார்.

கார்களும் மற்றைய வாகனங்களும் பல்வேறு திசையில் தெறித்து சென்று கொண்டு இருந்தன. அவசரத்தில் சைக்கிளை ஓட்டிய ஒருவர் விழுந்து விட்டார். ஆனால், சைக்கிளை மீண்டும் நிமிர்த்தி ஏற முயற்சிக்காமல் சைக்கிளை இழுத்தபடியே ஓடினார்.

நான் சித்ராவைக் கூட்டிக்கொண்டு பஸ்நிலையம் நோக்கிச் சென்றேன்.

பெண்கள் சிங்களத்திலும், தமிழிலும் கத்தியபடி பிள்ளைகளை ஒருகையிலும், மூடைகளை தலையிலும் சுமந்தபடி ஓடினார்கள்.

வழியில் ஓடி வந்த ஒருவரிடம் 'என்ன நடந்தது என வினவினோம்.'

'விமானப்படை ஜீப்பை பொடியன்கள் தாக்கியதில் இரண்டு பேர் இறந்து விட்டார்கள்' என்று கூறியபடியே ஓடினார்.

சித்ராவிடம் 'எதுக்கும் பஸ் நிலையத்துக்கு சீக்கிரமாக போவோம் .' என்று கூறினேன்.

நாங்கள் பஸ் நிலையத்துக்கு வந்து சேர்ந்த போது சகல பஸ்களும் வெள;வேறு திசைகளில் ஓடின. மக்களும் திகில் அடைந்து ஓடிய பஸ்களிலும் வான்களிலும் ஏறினார்கள். மதவாச்சி பஸ் இல்லாத படியாலும், நான் யாழ்ப்பாணம் செல்ல விரும்பியதாலும் நாங்கள் இருவரும் பஸ் நிலையத்தில் நின்றோம்.

ஐந்து நிமிடங்களில் இரண்டு ஜீப்பிலும் இரு பெரிய டிரக்குகளிலும் தடதட என ஆகாயப்படையினர் வந்து இறங்கினர். வவனியா மெயின் கடைப்பகுதி கண்டி ரோட்டும், ஹொரவப்பத்தான ரோட்டும் சந்திக்கும் இடத்தில் அமைந்திருப்பதால் பெரிய அளவிலான ஆயுதப் படையினராலேயே முற்றுகையிட முடியும். அத்தகைய முற்றுகை ஒன்று உருவாகியது.ஆகாயப் படையினர் வந்து இறங்கின பின்புதான் பொலிசார் வந்து இறங்கி சேர்ந்து கொண்டார்கள்;.

ஒரு அம்புலன்ஸ் சத்தமிட்டபடியே சென்று காய்கறி மார்க்கட்டை நோக்கிச்சென்று மறைந்தது. சம்பவம் நடந்த இடம் அதுவாக இருக்க வேண்டும். சுpறிது நேரத்தில் மீண்டும் அம்புலன்ஸ் சத்தமிட்டபடி அநுராதபுரத்தை நோக்கிச் சென்றது.

இதுவரை நேரமும் கண்ணியமாகவும், கட்டுப்பாடாகவும் நடந்துகொண்ட ஆகாயப்படை வீரர்களில் ஒருவர் பொலிஸ் வேனுக்கு எதிரில் இருந்த பெற்றோல் பங்கில் இருந்து பெற்றோலை ஒரு தகரத்தில்

நிரப்பினான். பெற்றோல் பங்கில் எவருமே இருக்கவில்லை. எங்களுக்கு எதிரிலுள்ள துணிக்கடைக்கும் மற்றைய கடைகளுக்கும் பெற்றோலை ஊற்றி  சிகரெட்டைப் பற்ற வைப்பது போல தீ வைத்தான். வேறு ஒருவன் எதிரில் நின்ற கார்களுக்கு நெருப்பு வைத்தான். இந்த நேரத்தில் காய்கறி மாக்கெற் இருந்த பக்கத்தில் இருந்து வானளாவிய புகை வந்தது. பொதுமக்கள் அதிக அளவில் இல்லாதபடியால் பொதுமக்களுக்கு கண்எதிரில் எதுவும் நடக்கவில்லை. ஆனாலும் ஐயோ, என்கிற அலறல் சத்தங்களுடன்; குரல் கேட்டதால் சிலர்

தாக்குதலுக்குள்ளாகிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை ஊகிக்க கூடியதாக இருந்தது.

இவ்வளவு நடந்தும் பஸ் நிலையத்தில் உள்ள கடைகளுக்கு எதுவும் நடக்கவில்லை. மேலும் பஸ் நிலையத்தில் எங்களை விட பத்து பதினைந்து பேர் நின்றார்கள். எல்லோரும் மதவாச்சியை சேர்ந்த சிங்களவர்கள் என நினைத்தேன்.

நானும் சித்ராவும் எதுவும் பேசவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்தபடியும் சுற்றி நடக்கும் அக்கினித் தகனங்களை பார்த்துக் கொண்டும் பயத்துடன் நின்றோம்.

இரண்டு ஆகாயப்படையினர் எம்மை நோக்கி வந்தனர். நாங்கள் பின்னால் சில அடிகள் வைத்து மற்றையோரின் பின்னே சென்றோம். அவர்களை நோக்கி வந்தவர்களில் இருவர் கைகளில் இயந்திர துப்பாக்கி இருந்தது. முன்பாக நின்றவர்களை பார்த்து எங்கு போக நிற்கிறியள் என சிங்களத்தில் ஒரு படைவீரன் கேட்டபோது சகலரும் ஒரே குரலில் மதவாச்சி என கூறினார்கள்.

அவர்களது உடைகளிலும் முகங்களிலும் அவர்களை சிங்கள விவசாயிகளாக காட்டியது. அத்துடன் ஒவ்வொருவரும் பெரிய உரமூட்டையோ அல்லது நெல்லுக்கு அடிக்கும் பூச்சி மருந்துப் பொதியோ வைத்திருந்தார்கள்.

மற்றைய படைவீரர் எங்களை நோக்கி வந்தபடி'எங்கே போகிறாய்?'

'யாழ்ப்பாணம் '

'தெமலயோ' என்றபடி நெஞ்சில் சப்மெசின் துப்பாக்கி அழுத்தப்பட்டது.

அப்போது நான் எதிர் பார்க்காமல் சப்மெசின் துப்பாக்கியை கையால் பிடித்தபடி, 'மகே சுவாமி புருஷய' என கூறினாள் சித்ரா.

இந்தக்குரல்; விமானப் படைவீரனை அதிரச் செய்திருக்க வேண்டும்.

பக்கத்தில் இருந்த ஒருவர் சித்ராவிடம் சிங்களத்தியா? என கேட்டபோது சித்ரா 'நான் பதவியா, இவர் என் கணவன் ' என சிங்களத்தில் கூறினாள்.

இப்போது சித்ரா எனக்கும் விமானப்படை வீரனுக்கும் நடுவில் நின்றாள். ஆனால் கை சப்மெசின் துப்பாக்கியில் இருந்தது.

தனது துப்பாக்கியை அவளுடைய கைபடாது இழுத்தபடி கெட்ட வார்த்தையால் ஏசியபடி விலகினான்;. செல்லும் போது 'இந்த இடத்தை விட்டு ஓடிப்போங்கள் ' என எச்சரித்துக்கொண்டே சென்றான்.

'சித்ரா' என்றேன்.

என்னைப் பார்த்த அவளின்; கண்களிலே இருந்து கண்ணீர் அருவியாக கொட்டியது.

அவளுடைய தோளைப் பற்றி என்னை நோக்கி இழுத்தேன்.

என்னை அணைத்தபடி விக்கி விக்கி அழுதாள்;.

தாங்கமுடியாத உணர்ச்சிப்பெருக்கில் நானும் அழுது விட்டேன்.

சுற்றி நின்றவர்கள் எங்களை பாhர்த்துக்கொண்டு நின்றார்கள். எவரும் ஒரு வார்த்தையும் பேசவில்லை. மௌனமான மொழியால் கோபம், அதிர்ச்சி உணர்வுகள் எம்மிடையே பர்pமாறப்பட்டன. சுpறிது நேரத்தில் மதவாச்சியில் இருந்து வந்த பஸ்ஸில் ஏறி மீண்டும் மதவாச்சி சென்றோம். பஸ்ஸில் இருந்து வவனியாவை பார்த்தபோது வவனியா தீப்பிளம்பாகத் தெரிந்தது.

அந்தக் காலத்தில் ஒரு குரங்கு லங்காதகனம் செய்ததாக ஓர் இதிகாசம் சொல்கிறது. இப்போது எத்தனை மனிதவானரங்கள் தீ வைப்பதற்கு அலைந்து திரிகின்றன?

சுPத்ராவின் அழுகைச்சத்தம் நின்று விட்டாலும் கண்ணீர் நிற்கவில்லை. பஸ்ஸில் இறுக்கமாக அணைத்துக் கொள்வதைத் தவிர வேறுவிதத்தில் என்னால் அவளுடன் பேச இயலவில்லை.

மதவாச்சியில் இறங்கிய கையோடு கடையில் ஒரு பக்கெட் சிகரெட் வாங்கினேன். ஒரு சிகரெட்டை பற்ற வைத்த பின்னரே அமைதியாக யோசிக்க முடிந்தது.

'சித்ரா நாம் விடுதிக்கு போவோம். '

சித்ராவும் என்னை பின்தொடர்ந்தாள்.

விடுதியில் என்னையும் சித்ராவையும் பார்த்துவிட்டு ருக்மனும், காமினியும் வெளியே வந்தார்கள்.

'ருக்மன் சித்ராவை நான் வவனியாவில் தற்செயலாக சந்தித்தேன் ' என்று கூறிவிட்டு வவனியாவில் நடந்த சம்பவத்தைக் கூறினேன். 'உனது தங்கையால்தான் உயிர் தப்பினேன். ஆனாலும் இது அவளுக்கு அதிர்ச்சியை அளித்துள்ளது. என்னால் தனியாக பதவியாவுக்கு அனுப்ப முடியவில்லை. அதனால் இங்கே கூட்டி வந்தேன். '

'நான் தனியே போவேன் ' என்றாள் சித்ரா.

'ருக்மன்;, நீ புறப்பட்டு சித்ராவுடன் பதவியாவுக்கு போ. நான் டாக்டரை ரயில்வே ஸ்ரேசனுக்கு கொண்டு போகிறேன். இரயிலில் யாழ்ப்பாணம் போவது பிரச்சனையில்லை', என்றான் காமினி.

காமினி எதுவும் பேசாமல் மோட்டார் சைக்கிளில் இரயில்வே ஸ்ரேசனில் இறக்கி விட்டான்.

ரயில் வரும் போது 'கவலைப்படாமல் போய் வாருங்கள் ' என்றான் காமினி.

நான் கவலைப்படவில்லை. ஆனால் இப்படி நடக்கும் என எதிர்பார்க்கவில்லை.

'இவை நடக்கின்றன என்பது தான் உண்மை. '

'நாட்டில் நடக்கும் அரசியல் பிரச்சனையிலிருந்தோ, இப்படியான சம்பவங்களில் இருந்தோ நாம் தப்ப முடியாது. ஆனாலும் எமக்கு நடக்கும் போது அதிர்ச்சியளிக்கிறது' என்று கூறியபடி இரயிலில் ஏறினேன்.

சனிக்கிழமை எழும்ப பத்து மணியாகி விட்டது அம்மா தந்த முட்டைக்கோப்பியை குடித்து காலைக் கடன்களை முடித்து சைக்கிளில் வெளியே போகப் புறப்பட்டேன்.

'புட்டை சாப்பிட்டு விட்டு போ' என்றார் அம்மா.

'பசியில்லை. சங்கர் வீட்டை போய்விட்டு வருகிறேன் '

'ஆமிக்காரன்கள் அலைகிறான்கள். கவனமாய் போ'.

தலையாட்டிவிட்டு குச்சு ஒழுங்கைகள் வழியாக சங்கரின் வீட்டை அடைந்தேன்.

பின்னர் சங்கரும் நானுமாக ஆனைக்கோட்டைக்குச் சென்றோம். ஒன்றாக படித்தவர்கள்pல் சங்கர் மட்டுந்தான் யாழ்ப்பாணத்தில் இருக்கிறான். மற்றவர்கள் வேலைக்காகவோ, படிப்புக்காகவோ என வெளியேறிவிட்டார்கள். யாழ்ப்பாணத்தின் பிரதான ஏற்றுமதிப் பொருள் என்ன என்று கேட்டால் 'மனிதர்கள்' என்று தான் பதில் சொல்ல வேண்டும். காலம் காலமாக இலங்கையின் மற்ற பகுதிக்கு ஏற்றுமதி செய்வோம் பின் கலவரங்கள் ஆரம்பித்தபின் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி என்று ஏற்றுமதி செய்கிறோம்.

சங்கரும் நானும் பாடசாலை காலங்களிலிருந்து ஆனைக் கோட்டை முத்தண்ணனின் கள்ளை ருசி பார்த்திருக்கிறோம். அவருடைய கள்ளுக்கு எப்போதும் தனி ருசி. முத்தண்ணையின் பிள்ளைகள் நல்லா இருந்தாலும் தொழிலை மட்டும் விடவேயில்லை.

வாசலில் எங்களை கண்டவுடன் 'தம்பி எப்ப வந்தது.' என்று அன்புடன் கேட்டார்.

'நேற்றுதான் அண்ணை. '

'எப்படி தம்பி சிங்கள ஊர் புதினம் ' என்று கேட்டவாறு சிவப்பு முட்டி நிறையக் கள்ளுடன் எங்களிடம் வந்தார்.

'எல்லாம் அப்படித்தான். எங்கே மகன் ராசா? '

'அவன் ஜேர்மனிக்கு போய் விட்டான் 'என்று கூறிய முத்தண்ணை தன் மனைவியிடம், 'அந்த மீன்பொரியலை இங்கு கொண்டு வந்து வையெணை' என்றார்.

'என்ன, சூரியன் வந்தால் மட்டும் விசேசமாக இருக்குது,' என்று சங்கர் கேட்டான்.

'அதில்லை; தம்பி எப்பவாவது இருந்து விட்டுத்தானே வருகிறது. ' என்று சமாதானம் கூறினார்.

முத்தண்ணையின் மனைவி வைத்த மீன் பொரியலுடன் கள்ளை குடித்து முடித்தோம்.

முத்தண்ணர் வீட்டை விட்டு வெளியே வரும் போது சிறிது போதையும் ஏறியிருந்தது. வரும்வழியிலே சித்திராவுடன் ஏற்பட்ட தொடர்புகளை முழுமையாகச் சங்கரிடம் கூறினேன். அத்துடன் என் நெஞ்சில் அரும்பியுள்ள காதலை நான் மறைக்கவும் இல்லை.

'சிங்களத்தியை கல்யாணம் முடிக்கப் போகிறாயா? ' என ஆத்திரமாகக் கேட்டான் சங்கர்.

'மற்ற எல்லாம் சரி. இனம்தான் பிரச்சனை என்று நினைக்கிறாயா? ' என்று அப்பாவித்தனமாக கேட்டேன்.

'உன் மூளையில் சுகமில்லை தம்பி! நீ யாழ்ப்பாணத்திலும் இருக்க ஏலாது. மதவாச்சியிலும் இருக்க இயலாது ' சங்கரின் எச்சரிக்கையில்; உண்மையிருந்ததால் மௌனமாகினேன்.

'ஏய் உனக்கு மட்டும் தான் சொன்னேன். சித்ராவுக்கு கூட நான் இப்படி நினைப்பது தெரியாது. '

'ஏதோ மூளையை பாவிச்சு நட. ' என்று சொல்லித் தனது வீடு நோக்கிச் சென்றான்.

நான் வீடு நோக்கி ஓட்டுமடவீதியால் வந்து கொண்டிருந்த போது ஒரு பச்சை ஜீப்பை கண்டு சிறிய ஒரு ஒழுங்கைக்குள் சைக்கிளை விட்டேன். திரும்பி ஜீப்பை பார்த்தபோது விவசாயத் திணைக்களம் என எழுதப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் மாற்றம் தெளிவாகத் தெரிந்தது. எழுபதாம்; ஆண்டுகளிலே இரவுநேரங்களில் சுதந்திரமாக எங்கும் திரியமுடியும். இரண்டாம் இரவு சினிமா ஷோ பார்த்து விட்டு ஒரு மணிக்கு யாழ்ப்பாண ரோட்டுகளால் ஏராளமான வண்டிகள் போகும். எண்பதுகளில் இரண்டாவது சினிமாக்காட்சி இல்லாமல் போய் விட்டது. தேர்தல் காலங்களில் மட்டுமே பேசப்பட்ட அரசியல் இப்பொழுது எல்லா நாள்;களிலும் பேசப்பட்டது. எங்கும் பதற்ற நிலை உருவாகியது. இப்படியான நிலை உருவாகியதற்கு தொடர்ச்சியாக ஆட்சி புரிந்த அரசாங்கங்களே காரணமாகும். இளைஞர்கள் பொதுவாக வன்முறைப் போராட்டத்தை விட வேறு வழியில்லை என்றார்கள். இவர்களிடம் அரசியல் போராட்டத்திற்கு மக்கள் பலத்தை விட சக்தி வாய்ந்த ஆயுதங்களில் அதிகம் நம்பிக்கை வைத்து பேசினார்கள். எதிர்க்கருத்துகள் எதுவும் இருக்கக் கூடாது. அவை ஒற்றுமையை குலைக்கும் என்று ஆணித்தரமாக கூறப்பட்டது. இவை எனக்கு கவலையைத் தந்தது.

செவ்வாய் கிழமையன்று பதவியா விவசாயத் திணைக்களத்தில் வேலை இருந்த காரணத்தால், அதை முடித்துக் கொண்டு சிரிபுர சென்றேன்.

வாசலில் இறங்கியபோதே சித்ராவின் தந்தை வந்து 'எப்படி மாத்தையா' என்றார்.

'நல்ல சுகம் '.

'யாழ்ப்பாணத்தில் பிரச்சனை எப்படி? '

'பிரச்சனைகள் தான.;  சித்ரா எங்கே?'

' குளிக்கப் போய்விட்டாள். இப்போது வரும் நேரந்தான் '.

'வெள்ளிக்கிழமை நடந்த விஷயத்தை மகள் உங்களிடம் கூறினாளா? '

'ஆம், நல்ல வேளை கடவுள் தான் உங்களை காப்பாற்றினார். '

எதிரில் சித்ரா சிரித்தபடியே வருவது தெரிந்தது. ஈரமான கூந்தல் நாலுமணி வெய்யிலில் பளிச்சிட்டது. 'உடுப்பு மாற்றிவிட்டு வருகிறேன.;'

என்று சொல்லி விட்டு உள்ளே சென்றாள்.

தந்தையார் வயலில் கட்டப்பட்டிருக்கும் காளை மாட்டை நோக்கிச் சென்றார்.

சிறிது நேரம் காத்திருந்த எனக்கு அவள் அவசரக்கோலத்தில் தரிசனம் தந்தாள். அள்ளி முடிந்த கொண்டையில் ஒரு துணியும் சேர்ந்து இருந்தது. சேலையையும் அவள் அள்ளிச்சொருகியபடி வந்தாள்.

'சித்ரா நான் திரும்ப மதவாச்சி போகவேண்டும். அதற்கு முதல் அவசரமாக உன்னிடம் ஒரு விஷயம் பேச வந்தேன்;. '

'என்ன விஷயம் '.

'எங்கே உன் அம்மா'.

'பதவியா போய் இருக்கிறார். '

அவள் தந்தை இப்போது காளையை வயலின் மறுகரைக்கு ஓட்டிச் செல்வது தெரிந்தது.

மோட்டார் சைக்கிளில் சாய்ந்தபடியே 'கிட்ட வா' என்றேன்.

'ஏன் டொக்டர் '

'டொக்டர் எனக் கூற வேண்டாம் ' என்றேன் அழுத்தமாக.

'அப்படி சொல்லாவிடில் எப்படி சொல்வது.இதைச் சொல்லவா, அம்மா எங்கே என வினவினீர்கள் '

'நான் ஒன்று சொல்ல நினைக்கிறேன். உனக்கு பிடிக்குமோ தெரியாது. ஆனால் என்னால் சொல்லாமல் இருக்கவும் முடியாது. '

'அப்படி என்ன விஷயம் '

'சுவாமி புருஷயா என்றால் சிங்களத்தில் என்ன அர்த்தம்?. '

முகம் சிவந்து தலைகுனிந்தபடி இரண்டு எட்டு நகர்ந்தாள்.

'சித்ரா எனக்கு அதன் அர்த்தம் தெரியும். நீ என்னை காப்பாற்றுவதற்கு சொன்னது. உனக்கு சம்மதமானால் அதற்கு உண்மையான அர்த்தத்தை அளிக்க விரும்புகிறேன். '

என்னை நிமிர்ந்து பார்த்தாள்.

'உனக்கு சம்மதமானால் இன்றே உன் தாய்தந்தையுடன் பேசுகிறேன். '

அதற்கும் மீண்டும் மௌனமே பதிலாக வந்தது.

'உன் கைகளை நீட்டு'.

இரண்டு கைகளையும் நீட்டினாள்.

எனது இரண்டு கைகளால் பிடித்தபடி 'என்னை நம்பு' என்றேன். என் குரல் தளதளத்ததை நானே உணர்ந்தேன்.

அரும்பிய கண்ணீருடன் ஆம் என தலையசைத்தாள்.

'உன் தாய்தந்தையருடன் நான் பேசவா? அல்லது நீ பேசுகிறாயா? '

'நான் பேசுகிறேன் '

சித்ராவின் கை இப்போது என் கைகளை இறுக்கமாக பிடித்தது. பூப்போன்ற கைகளுக்கு எப்படி இவ்வளவு பலம் வந்தது என நினைத்தபடி என் கன்னத்தில் வைத்தேன். சித்ராவின் தந்தையார்; வருவது தெரிந்ததும், 'நான் பிறகு சந்திக்கிறேன் ' என கூறிவிட்டு அவள் தந்தைக்கு கை அசைத்து விட்டு புறப்பட்டேன்.

பண்டார அன்று மதியம் ஒருவன் மூலமாக எனக்கு கடிதம் எழுதி அனுப்பி இருந்தார். திறந்து பார்த்தபோது அதிர்;ச்சியாக இருந்தது. ரோகண விஜயவீர அநுராதபுரம் வருவதாகவும் விருப்பமானால் காமினியுடன் அநுராதபுரத்துக்கு வரும்படியும் அந்தக் கடிதம் செய்தி சொன்னது.

எனக்குப் புது அனுபவமாக இருந்தது. எந்தக்காலத்திலும் நான் அரசியல்வாதிகளை சந்தித்ததோ, பேசியதோ கிடையாது. பேராதனை பல்கலைக்கழகத்தில் சக மாணவர்களிடம் பேசிய அரசியல் மட்டும் தான். யாழ்ப்பாணத்தில் அரசியல் கூட்டங்களுக்கு சிறுவயதில் சென்ற போது அவர்கள் பேச்சுக்களை கேட்டு இருக்கிறேன். வயது வந்ததும் அந்த பேச்சுக்களின் போலித் தனங்கள், சந்தர்ப்பவாதங்களும் புரிந்தபின் நல்ல அபிப்பிராயம் ஏற்படவில்லை. ஆனால் என்னால் அரசியலை வெறுக்க முடியவில்லை. இதைவிட மிகவும் கவனமாக உள்நாட்டு, வெளிநாட்டு அரசியலை கவனித்து வந்தேன். என்னோடு படித்த பலருக்கு இலங்கை எந்த வருடம் சுதந்திரம் அடைந்தது என்று கூட சரியாகத் தெரியாது.

மாலை ஆறு மணிக்கு பகிரங்கக் கூட்டம். ஆனபடியால் நானும் காமினியும் ஐந்து மணிக்கே அநுராதபுரம் போய்ச் சேர்ந்து விட்டோம். கூட்டம் அநுராதபுர கச்சேரிக்கு அருகில் உள்ள வெளியில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. நாங்கள் போன போதே பெருமளவில் மக்கள் கூடியிருந்தார்கள். பெரும்பாலானவர்கள் இளைஞர்களும் இளம்பெண்களும் ஆவர். பெரும்பாலானவர்கள் தலைகளில் சிவப்புத் துணி கட்டியிருந்தார்கள். சிவப்புத்துணி கட்டியவர்கள் ஜனதா விமுக்திப் பெரமுனை அங்கத்தவர்கள் என காமினி மூலம் அறிந்து கொண்டேன். கூட்டம் நடக்கும்; இடத்தில் இருந்து சிறிது தூரத்தில் உள்ள மரத்தடியில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு வந்த போது 'டொக்டர்' என குரல் கேட்டது. திரும்பிப்பார்த்த போது ருக்மன்; தலையில் சிவப்புத் துண்டு கட்டியபடியே எம்மைப் பார்த்து சிரித்தான்.

எனக்கு சிறு அதிர்ச்சியாக இருந்தது. ருக்மன்; ஜே.வி.பி யில் அங்கத்தவர் ஆக இருப்பான் என நினைக்க வில்லை. என் வியப்பைக் காட்டாமல் 'ருக்மன் எப்போது கூட்டம் ?' என கேட்டேன்.

'இப்போது துவங்கும். '

மணிக்கூட்டைப் பார்த்தபோது மணி ஆறு காட்டியது.

'நான் யாழ்ப்பாணம் கூட்டம் தான் இப்படி தாமதம் ஆகும் என இதுவரை காலமும் நினைத்திருந்தேன். '

'இல்லை, தோழர் விஜயவீர இன்னமும் வரவில்லை' கவலை தோய்ந்த முகத்தோடு ருக்மன்; மேடையை பார்த்தபோது மேடைக்கு அருகில் ஒரு கார் வந்து நின்றது. காரில் இருந்து இருவர் இறங்கினர். அதில் உயரமாகத் தாடியுடன் இருந்தவர் பண்டார என என்னால் அடையாளம் காண முடிந்தது.

காமினி என் கைகளைப் பிடித்து 'அவர்தான் விஜயவீர' என்றான்.

சராசரி உடலும் குறைவான உயரத்தோடும் கண்ணாடி அணிந்து தாடியுடன் இருந்தார். கறுப்பு காற்சட்டையும், சிவப்பு சேட்டும் அணிந்திருந்தார்.

விஜயவீர மேடைக்குச் சென்று அமரும் போது 'விஜயவீரவுக்கு ஜெயவேவ ' என மக்கள் கோஷம் எழுப்பினர்.

பண்டார கூட்டத்திற்கு தலைமை வகித்தார். கூட்டத்தில் மூன்று ஆண்களும் இரண்டு பெண்களும் பேசியபின் விஜயவீர பேசினார்.

விஜயவீரவின் பேச்சு பெருமளவில் எனக்கு புரியாவிட்டாலும் அதில் மயக்கும் தொனி இருந்தது. பேச்சில் சரித்திர கால துட்ட கைமுனுவை நினைவு படுத்திப் பேசிய போது இளைஞர்களைஇ ஆவேசம் கொள்ள வைத்து மேலும் அரசாங்கம் இலங்கையை வெளிநாட்டுக்கு அடைவு வைப்பதாகப் பேசிய போது கரகோசம் எழும்பியது. விஜயவீர தன்னை சிங்கள விவசாயிகளில் ஒருவராக காட்டிக்கொண்டு பண்டைய மன்னர்களின் மேன்மையை எடுத்துக் கூறினார். நான் இடைக்கிடை ருக்மனை பார்த்தபோது முகத்தில் இருந்த தீவிரமும் கண்கள் இமைகளை அசைக்காமல் மேடையை பார்த்தபடி இருக்கும் உணர்ச்சிகரமான இளைஞன் விஜயவீராவால் ஆட்கொள்ளப்பட்டிருப்பது புரிந்தது. கூட்டம் இரவு பத்து மணியளவில் முடிந்த போது ருக்மன்; வேறு திசையில் செல்ல நானும் காமினியும் பண்டார வீட்டை நோக்கிச் சென்றோம்.

சைக்கிளில் செல்லும் போது, ஏன் நான் விஜயவீரவை சந்திக்க விரும்பினேன் என என்னை பலமுறை கேட்டுக்கொண்டேன். மேலும் இந்த சந்திப்பு மதவாச்சியில் யாருக்கும் தெரிந்தால், விசேடமாக பொலிசாருக்கு தெரிந்தால் வீண் பிரச்சனை என நினைத்தேன். ஜே.வி.பி அந்தக் காலத்தில் சட்டபூர்வமாக இயங்கினாலும் அரசாங்கத்தினதும் காவல் துறையினதும் கண்கள் அவர்கள் மேலேயே இருந்தது. தலைமயிர் வெட்டும்போது ஆறுமுகம் அண்ணை கூறியது நினைவுக்கு வந்தது.

மனதில் பல கேள்விகளுடன் மோட்டார் சைக்கிளை பண்டாராவின் வீட்டுக்கு முன் நிறுத்தி விட்டு இறங்கினோம்.

'சகோதரயா' என்றான் காமினி.

பண்டார சிவப்பு சேட்டுடன் வருவது தெரிந்தது. 'வாங்கோ' என உள்ளே அழைத்துச் சென்றான்.

பெரும்பாலும் இருட்டாக இருந்த இடத்தில் ஒரு மண்ணெண்;ணை விளக்கு எரிந்தது. மேசைக்கு பக்கத்தில் விஜேவீர இருப்பது தெரிந்தது.

சிவப்பு சட்டையும் பளிச்சென்ற கண்கள் கண்ணாடியையும் மீறி என்னை துளாவியது.

பண்டார என்னை அறிமுகப்படுத்தி நாற்காலியில் அமருமாறு கூறினான்.

'எப்படி கூட்டம் இருந்தது ' என்றார் விஜயவீர.

'நன்றாக இருந்தது. '

'உங்களுக்கு எதாவது கேள்வி இருந்தால் தோழரிடம் கேளுங்கள் ' என்றான் பண்டார.

நான் சிரித்தபடி 'என்னை பிரச்சனையில் மாட்டுவது என்ற திட்டமோ?' என்று கேட்டு என்னை சுதாகரித்துக் கொண்டேன்.

' அப்படி பிரச்சனை ஒன்றுமில்லை. கேளுங்கள் ' என்றார் விஜயவீர.

'தமிழர்களின் இனப்பிரச்சனை பற்றி ஜே.வி.பி என்ன நினைக்கிறது.'?

'தமிழர்கள் பிரச்சனை ஐக்கிய தேசியக்கட்சிக்கு பின்பு சுதந்திர கட்சியால் உருவாக்கப்பட்டது. சாதாரண சிங்களவர்களுக்கும் சாதாரண தமிழர்களுக்கும் பிரச்சனைகள் ஒன்றே. அது இலங்கையில் வர்க்க பேதமற்ற அரசாங்கம் வரும் போது இல்லாமல் போய்விடும். இதற்காகவே ஜே.வி.பி பாடுபடுகிறது. '

' நீங்கள் இந்திய எதிர்ப்பு வாதத்தையும் பேசி சிங்கள தேசிய வாதத்தையும் பேசிய போது நீங்கள் ஒரு இனவாத இயக்கம் என தமிழர்களை நம்ப வைக்கும். '

இந்தப் பேச்சை விஜயவீர எதிர்பார்க்கவில்லை. சிரிப்புடன் இருந்த முகத்தில் கடுமை தெரிந்தது.

'நாங்கள் இந்திய எகாதிபத்திய எதிரியை பற்றி பேசும் போது இலங்கை தமிழர்கள் தங்களை எதிர்ப்பதாக ஏன் கருத வேண்டும்?'

இலங்கையின் பண்டைய கால இராஜதானியான ராஜரட்டைதான் இந்திய மன்னர்கள் படை எடுத்து கைப்பற்றும் போது சிங்கள மன்னர்கள் இயற்கையில் மலைகளும் குகைகளும் நிறைந்த தென் இலங்கையில் தமது இராசதானியை அமைப்பார்கள். இந்த பிரதேசம் ரோகண எனப்படும். தென் இலங்கையில் பிறந்ததால் ரோகண என தன் புனைபெயரை சூடிக்கொண்டார். விஜயவீரவின் இயற்பெயர் டொன் நந்தசிறி விஜயவீரவாகும். மார்க்சீக கொள்கைளை ஏற்று கொண்டு இயக்கத்தை வழி நடத்தும் விஜயவீர அந்தக்கால சிங்கள மன்னர்களின் கீர்த்தனைகளை உயர்த்தி பேசியது அவரது அரசியல் தன்மையை காட்டியது.

'பெரும்பான்மை இனத்தை சிறுபான்மை இனம் சந்தேகத்துடன் பார்ப்பது தவிர்க்க முடியாது. '

'அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். மேலும் நாங்கள் முடிந்தவரை தமிழர்களுக்கு புரிய வைக்க முயல்கிறோம். '

இத்துடன் இந்த சம்பாஷனையை முடிக்க எண்ணி 'நான் உங்களை சந்திக்க வேண்டும் என காமினியிடம் கேட்ட போது உண்மையில் சந்திப்பேன் என எதிர்பார்க்கவில்லை. இந்த சந்திப்பு எனக்கு என்றுமே மறக்கமுடியாதது' எனக் கூறி விஜேவீரவிடம் விடைபெற்றேன்.

பண்டார வெளியே வந்து வழியனுப்பிய போது பண்டாரவிற்கு நன்றி சொன்னேன்.

மோட்டார் சைக்கிளில் வரும் போது காமினியிடம் சொன்னேன்,

'இன்னும் பல கேள்விகள் உண்டு. ஆனால் விஜேவீரவிடம் இளைஞர்களுக்கு ஏன் இவ்வளவு பற்று என புரிந்தது. '

**பன்றி வேட்டை**

காமினியும் நானும் வெள்ளி இரவு வேட்டைக்குச் செல்ல தீர்மானித்தோம். காமினி நண்பனின் காரையும் இரண்டு துப்பாக்கிகளையும் இரவலாகப் பெற்று வந்தான்.

செட்டிகுளத்துக்கு அருகில் உள்ள ராமன் குளம் என்னும் இடத்தில் பெரும்பாலும் முஸ்லிம் மக்கள் வாழ்கிறார்கள். அந்த கிராமத்தினை சுற்றி அடர்ந்த காடு உண்டு. இந்த காடுகளும் வில்பத்து வனவிலங்கு சரணாலயத்தின் எல்லை வரை செல்வதால் பல மிருகங்கள் அதிக அளவில் வரும். காட்டுப் பன்றிகள் கிராமத்தில் பயிர்களை அழித்து விடும். முஸ்லிம் விவசாயிகள் காட்டுப்பன்றிகளைச்சுட விரும்பாததால் பக்கத்து கிராமங்களில் உள்ளவர்கள் சுடுவதை வரவேற்பார்கள். இந்த காரணத்தால் ராமன் குளத்தை வேட்டைக்கு தெரிவு செய்தோம்.

இரவு எட்டு மணியளவில் ராமன் குளத்தை அடைந்து எமக்கு பரிச்சயமான லத்தீப்பின் வீட்டுக்குச் சென்றோம். லத்தீப் இரண்டு ஓலைப் பாய்களை எமக்கு தந்தார். லத்தீப்பின் சிறிய குடிசை வீட்டின் முற்றத்தில் படுத்திருந்து விட்டு இரவு ஒரு மணிக்கு வேட்டைக்குப் போவது என தீர்மானித்தேன். எனக்கு வேட்டை, காடு என்பன புதுமையாக இருந்ததால் காமினியையே தற்காலிகமாக குருவாக வைத்துக்கொண்டேன்.

முற்றத்தைச் சுற்றி வாழை மரங்கள் நின்றாலும் சிறிது தூரத்தில் பற்றைக்காடுகள் உள்ளன. இருட்டில் சத்தங்கள் கேட்டன.

'காமினி என்ன சத்தம் '.

'பெரும்பாலும் மயில்களாக இருக்கும். '.

'புலி ஏதாவது இருக்காதா? '

'யாழ்ப்பாண புலி இருந்தால் தான் ' என சொல்லி சிரித்தான்.

'காமினி நான் வேட்டைக்கு வந்தது ஒரு விடயத்தை பற்றி பேசுவதற்கு. '

'என்ன பிரச்சனை'

'இது எனது தனிப்பட்ட பிரச்சனை. ஆனாலும் காமினியின் அபிப்பிராயத்தைக் கேட்க விரும்புகிறேன். '

'கேளுங்கள் '

'நான் சித்ராவை விரும்புகிறேன். அவளும் என்னை விரும்புகிறாள். '

'அப்ப என்ன பிரச்சனை. எப்போது எங்களுக்கு விருந்து? ' எனக் கூறிக்கொண்டு எழுந்து நின்றான்.

'விருந்து கிடக்கட்டும். நான் சித்ராவின் பெற்றோரிடம் பேச வேண்டும். அத்துடன் ருக்மன்; என்ன நினைக்கிறானோ தெரியவில்லை'.

'அது எல்லாம் வெல்லலாம். நான் ஏதாவது உதவி செய்யவேண்டுமா? '

'இந்த விஷயத்தை சித்ராவின் பெற்றோரிடமும், ருக்மனிடமும் பேசுவதற்கு உதவி செய்ய வேண்டும். '

'நான் உதவி செய்கிறேன். ஆனால் உங்கள் வீட்டில் எப்படி?

'அப்பா ஆத்திரப்படுவார். அம்மா கவலைப்படுவார். கடைசியில் சமாளிக்கலாம் என நினைக்கிறேன். '

நடுநிசிக்கு மேல் ஆகிவிட்டதால் படுத்த ஓலைப்பாயை சுருட்டி வைத்துவிட்டு இருவரும் துப்பாக்கியை எடுத்துக் கொண்டோம். காமினியின் கைகளில் ஐந்து பட்டரி டோர்ச் லைட் இருந்தது.

சாரத்தை முழங்காலுக்கு மேல் கட்டிக்கொண்டு காமினிக்கு பின்னால் நடந்தேன். காலில் செருப்பு அணிந்தால்; மிருகங்களுக்கு அந்தச் சத்தம் கேட்டு ஓடிவிடும் என்றதால் வெறுங்காலோடு நடந்தோம். முட்செடிகள் தொடை வரை கீறின. வாழைத்தோட்டத்தின் அருகில் உள்ள சிறுகொட்டிலுக்கு வந்தோம். அங்கிருந்து மிக அடர்த்தியான காடு உள்ளது. காட்டுப்பகுதியில் இருந்து வாழைத்தோட்டத்துக்கு வரும் பன்றிகளுக்காக காவல் இருந்தோம். சிலமணி நேரத்தின் பின் எதுவும் வராதபடியால் காட்டின் ஓரமாக நடந்தோம். எப்பொழுதாவது தான் டோர்ச் லைட் பாவிக்க வேண்டும் என்பதால் கஷ்டமாகவும் பயமாகவும் இருந்தது. பல தடவை 'பாம்பு இந்த பக்கமாக வருமா ' என காமினியிடம் கேட்டேன். காமினியும் பயப்படவேண்டாம் என ஒப்புக்கு சொல்லி வைப்பான்.

சிறிது தூரம் நடந்த போது எதிரே ஒரு சத்தம் கேட்டது. காமினி 'பன்றி, சுடுங்கள் ' என்றான். சத்தம் வந்த இடத்தை நோக்கி சுட்டேன். காமினியின் துப்பாக்கியிலிருந்தும் சத்தம் வந்தது. எதுவும் கண்ணுக்கு தெரியவில்லை. ஆனால் சிதறி ஓடும் சத்தம் கேட்டது.

'காமினி லைட்டை அடி' என்றேன்.

பிரகாசமான வெளிச்சத்தில் காட்டுப்பகுதி நன்றாகத் தெரிந்தது. ஆனால் பன்றி எதுவும் காணவில்லை.

நான் ஏமாற்றத்துடன் 'இருவர் சுட்டும் பிரயோசனம் இல்லை', என்றேன்.

காமினி பதில் பேசாமல் லைட் வெளிச்சத்தில் பரவலாக தேடி இலை ஒன்றை எடுத்து என்னிடம் காட்டினான்.

'இது இரத்தம் ' என்றேன்.

'பன்றி சுடுபட்டு இங்கு பக்கத்தில் கிடக்கவேண்டும். தேடுவோம். '

இருவரும் தேடினோம். கிடைக்கவில்லை. கடிகாரம் நான்கு மணி காட்டியது.

'நாங்கள் கொட்டிலுக்கு போய்விட்டு ஐந்து மணிக்கு திரும்பி வருவோம். அப்போது வெளிச்சத்தில் தெரியும் ' என்றான் காமினி.

கொட்டிலுக்குப் போய் குளிருக்கு இதமாக இருக்க நெருப்பு மூட்டினோம். இது எனது முதல் வேட்டை அநுபவம். எனக்குள்ளேயே அசை போட்டுக் கொண்டேன். காமினி ஒரு குட்டித் தூக்கம் போட்டான்.

சொல்லி வைத்தாற்; போல் ஐந்து மணிக்கு வெளிச்சம் வந்தது. விடியும் காலை நேரம் மிகவும் அழகாக இருந்தது. இருட்டைப் பார்த்துக் கொண்டிருந்த கண்களுக்கு மென்மையான வெளிச்சம் இதமாக இருந்தது. இளம்தென்றல் உடலை தொட்டுத் தழுவிக்கொண்டு சென்றது. நாட்டுப்புறத்தில் கோழி கூவுவது போல் இங்கு பல பறவைகள் வித்தியாசமான தொனியில் கதம்ப இசை தொகுத்து வாசித்தன. ஆண் மயில்கள் மரங்களை விட்டு இறங்கி வந்து தோகையை விரித்து ஆடின. பெண்மயில்கள் மரங்களிலும், நிலத்திலும் இறங்கி வந்து ஆண்மயில்களின் ஆட்டத்தை ரசித்தன. மனதை விட்டு அகல முடியாத காட்சி.

நாங்கள் கொட்டிலில் இருந்து திரும்பவும் பன்றிகளைச் சுட்ட இடத்திற்கு வந்து இரத்ததுளிகளைப் பின்தொடர்ந்தோம். மிகவும் நெருக்கமான காடு. அங்கு நிமிர்ந்து நடக்க முடியாது. முட்பற்றைகளும், மரங்களும் சிறிதும் இடைவெளி இல்லாமல் இருந்தபடியால் துப்பாக்கியால் விலத்தியபடி நடந்தோம். பல இடங்களில் முழங்காலில் தவழ்ந்து சென்றோம். இப்படி பல நூறு யார் தூரம் சென்றபோது ஆண்பன்றி ஒன்று இறந்து கிடந்தது.

காமினி சந்தோஷத்துடன் பின் காலை பிடிக்கும்படி கூறி விட்டு முன்கால்களை தானே தூக்கினான்;.

மரத்தின் கொப்பில் பன்றியை கட்டி தூக்கp விட்டு கீழே நெருப்பைக் கொழுத்தி பன்றியின் ரோமங்களை பொசுக்கினோம். காமினி தன்னிடம் இருந்த கத்தியால் குடலை வெட்டி எறிந்து விட்டு நாங்கள் ஏற்கனவே கொண்டு வந்திருந்த பொலித்தீன் பைகளில் கட்டி காரில் ஏற்றி விட்டு மீண்டும் லத்தீப்பின் குடிசைக்குச் சென்றோம்.

லத்தீப் இருவருக்கும் தேநீர் தந்ததால் குடித்து விட்டு, பத்து ரூபாயை லத்தீப்பிடம் கொடுத்தோம். ஆரம்பத்தில் மறுத்தாலும் பின்பு வாங்கிக்கொண்டார்.

பன்றி வேட்டை வெற்றியில் முடிந்த சந்தோஷத்தில் மன்னார் வீதியால் மீண்டும் மதவாச்சி வந்து சேர்ந்தோம்.

காலவாய்க்கரையில்

நான் வெகுவாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த கடிதம்  வந்திருந்தது. அது சித்திராவின் கடிதம். அந்தக்கடிதத்தை மட்டும் சட்டைப்பையில் வைத்து விட்டு மற்றைய கடிதங்களை விரைவாக வாசித்து முடித்தேன். சின்னவயதில் 'மஞ்சி' பிஸ்கட் பெட்டியில் முக்கோண வடிவமான பிஸ்கட் எனக்கு பிடிக்கும். ஆகவே அதைத் தனியாக எடுத்து வைத்து விட்டு வட்டமான, நீளமான பிஸ்கட்டுகளை முதலில் சாப்பிடுவேன். சுpன்ன வயது நினைவுக்கு வந்தது.

என் பிடித்தமான கடிதத்தை வாசிப்பதற்கு முன் கதவை மூடி விட்டு வந்தேன். முன்னறையில் யாருமில்லை எனினும் யாரும் எதிர்பாராமல் வந்து எனது வாசிப்பைக் கெடுப்பதை நான் விரும்பவில்லை.

சித்ரா ஆங்கிலத்தில் எழுத்துக்களை தொடுக்காமல் எழுதியிருந்தாள். ஆங்கிலம் நான் நினைத்ததை விட நன்றாக இருந்தது. எனது பெயரை விளித்து எழுதி இருந்தது மனதுக்கு இதமாக இருந்தாலும் 'உண்மையுள்ள' என முடிக்காமல்  'அன்புள்ள' முடித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என நினைத்துக் கொண்டேன்.

என்னை சனிக்கிழமை வீட்டுக்கு வரும்படி எழுதியிருந்தாள். காமினியிடம் மட்டும் சனிக்கிழமை பதவியா போவதாக சொல்லி இருந்தேன். ஏற்கனவே காமினி எனது வேண்டுகோளுக்கு இணங்கி சித்திராவின் பெற்றோரிடம் பேசியுள்ளான். ருக்மன்; வேலைக்கு விடுப்பு எடுத்துக் கொண்டு பதவியாவில் அரசியல் வேலை செய்வதாகக் கேள்விப்பட்டேன்.

அன்று அதிகாலை எழுந்து விட்டேன் என கூறுவதை விட நித்திரை கொள்ளவில்லை என கூறுவதே உண்மையாகும். கண்களை மூடியபடி பலமணி நேரம் படுக்கையில் கிடந்திருப்பேன். கண்ணைத் திறந்தால் யன்னல் ஊடாக தெரியும் நிலா வெளிச்சம் கவனத்தை ஈர்த்து சித்திராவின் நினைவை மனதில் இருந்து தற்காலிகமாக இல்லாமல் செய்வதை விரும்ப வில்லை. ஊண்மையில் வளரிளம் பருவத்துக் காதலின் மனேபாவத்துன் நான் நடந்து கொள்வதாக நினைத்து வெட்கப்படவும் செய்தேன்.

அதிகாலை எழுந்தவுடன் எனது தோல்பைக்குள் இருந்த சிவப்பு சேலையை மெதுவாக எடுத்துப்பார்த்தேன். இந்த சேலையில் என் சித்திரா எப்படி இருப்பாள் என மனதுக்குள் நினைத்துப்பார்த்தேன். நெஞ்சுக்குள் மீண்டும் வண்ணத்திப்பூச்சிகள் சிறகடிக்கலாயின.

இந்தச் சேலையை யாழ்ப்பாணம் நியூ மாக்கட்டில் வாங்கினேன். என்னுடன் படித்த துரைதான் கடையின் சொந்தக்காரன்.

'சேலை வேணும். அதுவும் இந்திய சேலை' என்றவுடன் 'எப்படா கல்யாணம் 'என்றான்.

'எனக்கு இல்லை என் நண்பனுக்கு, அவன் வவனியாவில் இருக்கிறான் என கஷ்டப்பட்டு பொய் சொன்னது நினைவிற்கு வந்தது. அந்தப்பொய்யை அவனும் நம்பவில்லை. மேலும் வீட்டில் அம்மாவுக்கு தெரியாமல் அந்தச் சேலையை வைப்பதற்கு மிக கஷ்டப்பட்டேன்.

மோட்டார் சைக்கிளில் பதவியாவுக்கு கிளம்பிய போது பிற்பகல் மூன்;று மணி இருக்கும். ஆனாலும் வெயில் குறையவில்லை. வெயிலின் அகோரம் தெருவில் கானல்நீராக தெரிந்தது. ஆடி மாதமானதால் தெரு ஓரத்தில் எந்த வித பச்சைத் தன்மையுமில்லை. புல்லுகளும், செடிகளும் இருந்த இடங்களில் கம்பும் கட்டையுமாக இருந்தன. கண்ணுக்கு எரிவை கொடுக்கும் புழுதியும் வெக்கையும் அடித்தாலும் உள்ளத்தில் மட்டும் சித்ராவின் நினைப்பு வெள்ளரிக்காய் உள்புறம் கோடையில் குளிர்வது போல் இருந்தது.

பதவியா நகரத்தில் இருந்து சிறிபுர செல்லும் தெரு சிறிது குளிர்மையாக இருந்தது. தெருவுக்கு அருக்pலே பதவியா குளத்தின் தண்ணீர் வாய்க்கால் வழியாக சிறிபுர செல்கிறது. கால்வாயில் அதிக தண்ணீர் ஓடாவிட்டாலும் புற்கள் கரையோரங்களில் பசுமையாக இருந்தன. இதை விடப் பெண்கள் குறுக்கு கட்டு சேலையுடன் மார்பை பாதி மூடியும், மூடாமலும் குளிக்கும் காட்சி.. 'பாலைவனத்தில் சோலை' என்பது இதுதான் என எண்ண வைத்தது. இதைத்தான் 'ஓடையில் பூத்த மலர்கள்' என்பதோ? சித்ராவை பார்க்க போகும் போது இப்படி மனதை அலைய விடக்கூடாது என நினைத்துக்கொண்டு அக்சிலேட்டரை வேகமாக திருகினேன்.

மோட்டார் சைக்கிளின் சத்தம் கேட்டவுடன் உள்ளே இருந்து சித்ரா வாசலுக்கு வெளியே வந்தாள். மஞ்சள் கலர் சேலையும் அதே நிறத்தில் ரவிக்கையும்; அணிந்திருந்தாள். வழமைக்கு விட அன்று அலங்காரம் கூடுதலாக இருந்தது. கண்ணுக்கு மை தீட்டியிருந்ததால் வழக்கமான பெரிய கண்கள் இப்போது காதளவு ஓடிய கண்களைப் போலத் தோன்றின.

அவளைப் பார்த்து, 'உண்மையில் நீ அழகிதான் ' என்றேன்.

'சும்மா போங்கள் ' என பொய்யாக சிணுங்கினாள்.

'அப்பா அம்மா இருக்கிறார்களா? '

'ஆம், எனகூறியபடி 'தாத்தே' என்று உள்ளே திரும்பி அழைத்தாள்.

'ஏன் அப்பாவை கூப்பிடுகிறாய்? அவர் இல்லாமல் இருந்தால் நல்லது' என செல்லமாக என் மேலுதட்டை ஈரப்படுத்திக் கொண்;டேன். தந்தை உள்ளேயிருந்து வந்தார். பின்னால் தாயும் வந்தார்.

தந்தையார் வழக்கத்துக்கு மாறாக சேட் அணிந்திருந்தார்.

'போமஸ்துதி; மாத்தயா'.

பதில் வணக்கம் கூறிவிட்டு 'ருக்மன் எங்கே? ' என்று கேட்டேன்.

ருக்மன்; வரும் திசையை காட்டினாள்.

எல்லோருமாக வீட்டின் உள் சென்றோம்.

நானும் ருக்மனும் கதிரைகளில் அமர்ந்தோம். சித்ரா குசினிக்குள் சென்று விட்டாள்.

'ருக்மன், ஏன் வேலைக்கு வரவில்லை? ' என்றேன்.

'சின்ன வேலை இருந்தது' என்றான் சிரித்தபடி.

'உங்கள் அம்மா அப்பா சுகமா' என சித்ராவின் தகப்பனார் வினவினார்.

'நல்ல சுகம் '.

அப்பொழுது குசினியிலிருந்து தேநீர் வந்தது. எல்லோரும் மௌனமாக தேநீர் பருகினோம். மௌனமே உலகெங்கும் ஒரு மொழியாக இருந்தால் பல பிரச்சனைகள் குறையுமே என யோசித்தேன்.

எப்படி என்ன பேசுவது என தெரியவில்லை. பேசிமுடிக்கும் கல்யாணத்தில் இந்த உபத்திரவம் இருப்பதில்லை. எந்த சங்கடமும் இல்லாமல் காசு பணத்தில் எவ்வளவு இலகுவாக ஆரம்பிப்பார்;கள்.

இந்த மௌன நாடகத்தில் பொறுமை இழந்து சித்ரா மீண்டும் குசினிக்குள் போய்விட்டாள். இனி தாங்காது என நினைத்தபடிஇ

'காமினி உங்களுக்கு ஏதாவது கூறினாரா? ' என்றேன்.

'ஆம் மாத்தையா' என்றார் சித்திராவின் தாயார் மிகவும் வெட்கத்துடன்.

நானும் சித்ராவும் ஒருவரை ஒருவர் விரும்புகிறோம். திருமணம் முடிக்கவும் எண்ணியுள்ளோம் என பாடசாலை மாணவன் போல ஒப்புவித்தேன்.

'தங்களது வீட்டில் சம்மதிப்பார்களா', என்றார் தாயார்.

'உங்களிடம் பேசிய பின் அவர்களிடம் பேச விரும்புகிறேன். எனது தாய் தகப்பனார் விரும்பா விட்டாலும் குறுக்கே நிற்க மாட்டார்கள்' என்று என் தரப்பினைச் சொன்னேன்.

'உங்களைத் திருமணம் செய்ய சித்ரா கொடுத்து வைத்தவள்'. என்றார் தந்தையார்.

'அப்பே வாசனாவ' என தாயாhர் கூறினார்.

'அப்படி சொல்லவேண்டாம். நான் தான் அதிஷ்டசாலி. சித்ராவை விடஇ' என்றேன்.

குசினி கதவோரம் சித்ரா தன்னுடைய கண்களை துடைப்பது தெரிந்தது. இது நிச்சயமாக ஆனந்த கண்ணீராக இருக்கும் என நினைத்து நானும் ஆனந்தித்தேன்;.

ருக்மன்; எதுவும் பேசாமல் இருப்பதைக் கண்டு 'ஏன் ருக்மன்; பேசவில்லை' என்றேன்.

'தங்கச்சிக்கு சந்தோசம் என்றால் எனக்கும் சந்தோசம். மேலும் உங்களைப் போல் நல்ல மனிதர் கிடைப்பது அரிது ' என்றான்.

'என்னைப் புகழ்ந்து பேசி என்னை சங்கடப்படுத்தாதே ' எனக்கூறி சித்திராவின் தந்தையாரை பார்த்து 'மாச நடுப்பகுதியில் பதிவுத் திருமணம் செய்ய நினைக்கிறோம் ' என முடித்தேன்.

' எங்களுக்குப் பூரண சம்மதம். ' என ஒரே குரலில் எல்லோரும் கூறினார்கள். அவர்களது குரலில் ஒருவித அதிர்ச்சி இளையோடியிருந்தது.

'நான் அடுத்த கிழமை யாழ்ப்பாணம் சென்று என் பெற்றோரிடம் பேசுகிறேன். எப்படியும் பிரச்சனை இருக்கும். ஆனால் சமாளிக்கலாம்' என கூறியபடி வெளியே நடந்தேன்.

சித்ராவின் பெற்றோருக்கு விருப்பமாக இருந்தாலும் நான் கேட்டவிதமும் பதிவு திருமணம் எனப் பிரேரித்ததும்; பெரிய அதிர்ச்சியை கொடுத்திருப்பது அவர்கள் முகங்களில் தெரிந்தது. அவர்கள் தங்களுக்குள் பேசுவதன் மூலம் இந்த அதிர்ச்சியை போக்குவார்கள் என நினைத்துக்கொண்டேன்.

வெளியே நின்ற போது ருக்மன்; வந்து 'நான் உங்களோடு பேசாததற்கு மன்னிக்க வேண்டும். எனக்கு வார்த்தை வரவில்லை..'

'நீ என்னை சாப்பாட்டுக்கு அழைத்திராவிட்டால் நான் சித்ராவை சந்தித்திருக்க முடியாது. எனவே நான் தான் உனக்கு நன்றி சொல்ல வேண்டும். '

'என்ன அண்ணா சொல்கிறார் ' என்றபடி சித்ரா வந்தாள்.

'ருக்மன்; என்னை சாப்பாட்டுக்கு அழைத்து முள்ளம் பன்றிச்சம்பலுடன் உணவு அளித்ததற்கு நன்றி கூறுகிறேன்.' எல்லோரும் சிரித்தோம்.

ருக்மன்; கடைக்குப் போவதாகக் கூறி விட்டுச் சென்றான்.

'சித்ரா நான் உனக்கு வாங்கி வந்தது' எனத் தோல் பைக்குள் இருந்த சேலையைக் கொடுத்தேன்.

'மிகவும் நன்றாக இருக்கிறது. எங்க வாங்கினீர்கள்? '

'யாழ்ப்பாணத்தில். ஆனால் இது ஜெய்ப்பூர் சேலை' என்றேன் பெருமையுடன்.

சேலையை தன் மார்புகளின் மீது போட்டுப் பார்த்தாள்.

அவளுடைய மஞ்சள் சேலை மேல் அந்த சிவப்பு சேலை சந்தனக் கிண்ணத்தில் தற்செயலாக சிந்திய குங்கமமாகக் காட்சி கொடுத்தது.

'இங்கே கிட்டவா' என கையைப் பிடித்து இழுத்தேன்.

'அம்மா பார்;க்கிறா' என விலகினாள். உண்மையில் தாயார் வருவது தெரிந்தது.

'சேலையை உள்ளே வைத்து விட்டு வா, வயற்கரைப்பக்கம் சிறிது நேரம் நடந்து வருவோம்... '

புள்ளி மானாக ஓடிச்சென்று தாயாரிடம் சேலையை கொடுத்து விட்டு வந்தாள். வீட்டின் பின்புறத்தில் வயல் வரப்போடு நடந்தோம்.

ஆறுமணியானதால் சிறிய வெளிச்சம் மட்டும் இருந்தது. வயல் முடிந்த இடத்தில் பதவியா குளத்தை வயலுடன் இணைக்கும் வாய்க்கால் இருந்தது. அங்கு சீமெந்தினால் கட்டப்பட்ட பாலத்தில் இருவரும் அமர்ந்தோம்.

'சித்ரா உன்னைக் கண்டது, பேசியது எல்லாம் ஒரு கனவு போல் இருக்கிறது' என கூறி இழுத்து அணைத்தேன்.

'எனக்கும் அப்படியே' என கூறியபடி மடியில் விழுந்தாள்.

அவளது கழுத்துக்குள் கையை கொடுத்து தலையை உயர்த்தி என்னருகே வைத்து பார்த்தபோது சித்ரா கண்ணை மூடிவிட்டாள்.

'சித்ரா' என்றேன் மெதுவாக.

'இம் '

மேலும் என் முகத்தருகே அவள் முகத்தைக் கொண்டு வந்தேன்.

இம்முறை கண்களை திறந்தாள். அவள் உதட்டில் என் உதட்டை பதித்தேன். மீண்டும் கண்ணை மூடிவிட்டாள். ஆனால் என் கழுத்தை அவளது கைகள் கொடி என படர்ந்து இறுக்கியது. எனக்கு மூச்சு திணறினாலும் இவ்வளவு பலம் அவளுக்கு எங்கிருந்து வந்தது என நினைத்தபடி, அவள் இடையை என் கைகளால் வளைத்தேன். இப்போது இந்த உலகத்தை பார்ப்பது நல்லதல்ல என நானும் கண்களை மூடினேன்.

'கிளுக்' கென சத்தம் கேட்டு இருவரும் கண் விழித்தோம். எதிரில் எதுவும் தெரியாதபடி இருட்டாகி விட்டது. மீண்டும் 'கிளுக்' என்ற சத்தம் கேட்டது.

கால்வாய் கரையில் ஒரு எருமை மாடு போய்க் கொண்டிருந்தது.

'ஐயோ அம்மாவுக்கென்ன பதில் சொல்வது.? '

'எருமை மாடு எழுப்பி விட்டதென போய் உன் அம்மாவுக்கு சொல்லு.'

'போங்கள் எப்போதும் பகிடிதான் '

வீடு வந்து சேர்ந்த போது தாய்தந்தையர் வாசலிலே நிற்பது தெரிந்தது.

'வயல்கரையோரமாக நடந்த போது இருட்டாகி விட்டது' என்று ஏதோ முணுமுணுத்தாள்.

'இந்தப் பக்கம் பாம்பு அதிகம். இருட்டில் நடப்பது நல்லதல்ல' என்று அவளுடைய தந்தையார் சகஜமாக கூறினார்.

'அப்படியா! ' என மனப்பாரம் நீங்கியவனாக கதிரையில் அமர்ந்தேன்.

**வியாபாரிமூலை**

விடுதியில் சமையல் என் பொறுப்பானதால் குசினிக்குச் சென்று அரிசியை அளந்தபோது குணதாச எதிரில் வந்தார்.

'இன்றைக்கு எத்தனை பேர் சாப்பாட்டுக்கு'? என்றேன்.

'ஜே.வி.பி காரர் வராவிட்டால் ஆறு பேர் எதற்கும் இரண்டு பேருக்குச் சேர்த்து போடுங்கள்' என கூறியபடி குணதாச சிகரெட்டை பற்ற வைத்தார்.

எங்கள் விடுதியில் சுப்பையாவுக்கு அடுத்ததாக வயதில் மூத்தவர். இவரது குடும்பம் கம்பளையில் வசிக்கிறார்கள். இவர் மேல் எல்லோருக்கும் மரியாதை உண்டு.

'அதுசரி ஏன் சுப்பையா மாத்தையா வேலைக்கு வரவில்லை? இன்றைக்கு புதன்கிழமை ஆகிவிட்டது ' என்று ஏதோ யோசித்தவாறு குணதாச கேட்டார்.

'ஏதாவது வேலையாயிருக்கும் குடும்பகாரர் ' என்றேன்.

'உங்களுக்குத் தெரியாதா? நீங்களும் யாழ்ப்பாணம் தானே? '

' நான் கொக்குவில் அவர் வியாபாரிமூலை. இரண்டுக்கும் இடையில் இருபது மைல் தூரம். '

'இருபது மைல் தானே' என வழமையான சிரிப்புடன்

'அந்த இருபது மைலுக்கிடையில் ஐந்து லட்சம் மக்கள் இருக்கிறார்கள். '

'டொக்டர்' என்றபடி ராகவன் வாசலருகே வந்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். முகத்தில் திகில் படர்ந்திருந்தது. இதைத்தான் பேயடித்தது என்பார்களோ என அவன் முகம் என்னை நினைக்கத் தூண்டியது.

'என்ன ராகவன். '

'சுப்பையா மாத்தையாவை பொலிஸ் பிடித்துக்கொண்டு போய் பருத்தித்துறை பொலிஸ் ஸ்ரேசனில் வைத்திருக்கிறார்களாம் என்று ராகவன் சொன்னான்.

'ஏன் ' என குணதாச அதிர்ச்சியுடன் கேட்டார்.

'யார் சொன்னது' என நான் கேட்டேன்.

'சலூன்கார ஆறுமுகம் சொன்னார், ஆனால் அவருக்கு சரியான காரணம் தெரியாது. ஆனாலும் சுப்பபையாவின் மகன் புலியில் சேர்ந்துவிட்டபடியால் தகப்பனை பிடித்திருக்கவேண்டும் ' என கூறினான் ராகவன்.

'அப்படி முடியுமா? தகப்பன் என்ன செய்வது? ' என அப்பாவித் தனமாக குணதாச கேட்டார்.

'மகன் புலியில் சேர்ந்தால் முழுக் குடும்பத்தையும் ராணுவம் அள்ளிக்கொண்டு போவது வழக்கமான நடைமுறை. மகன் சரணடைந்தால் குடும்பத்ினரை விடுவோம் என அறிவிப்பார்கள். சுpல வேளைகளில் குடும்பத்தினர் அனைவரும் அப்படியே கொல்லப்பட்டதும் உண்டு. எனவே சுப்பையா மாத்தையாவை பொறுத்தவரை அதிஷ்டசாலி' என விரக்த்pயுடன் கூறினேன்.

'இது மிககொடுமை' என்றார் குணதாச கரகரத்த குரலில்.

அன்று அரிசியை மட்டும் போட்டு வடித்தேன். எவரும் விடுதியில் சாப்பிடவில்லை.

சுப்பையா எங்களுடன் சாப்பிடுவதில்லை. வீட்டில் இருந்து கொண்டுவரும் புளிச்சோற்றை வைத்தே கிழமை முழுவதும் சமாளித்து விடுவார். அவரது அறையில் எந்த உடைமைகளும் இராது. பாய் தலையணை என எதுவும் இல்லாமல் பழைய பத்திரிகையை நிலத்தில் விரித்து தோல்பையை தலைக்கு வைத்து தூங்குவது அவரது வழக்கம். எங்களோடு சமைத்தால் தனக்கு பணசெலவு என கூறியதால் நாங்கள் வற்புறுத்தவில்லை.

சிலவேளைகளில் சிறிது கேலி செய்வோம். 'இப்படி மிச்சம் பிடித்து என்ன செய்யப்போகிறீர்கள்?' என்றால் 'நீங்கள் இளம் பிள்ளைகள். காசு பற்றி கவலை இல்லை. ' என்று சிரித்தபடியே கூறிவிட்டு போய்விடுவார்.

சுப்பையாவுக்கு மூத்தவர்கள் இருவரும் பெண்கள். கடைசியாக மகன். கடந்த கிழமை மகனது படிப்பு பற்றி பெருமையாக கூறினார். அப்;பொழுது காமினி சுப்பையா மாத்தையாவின் மகளை தான் திருமணம் செய்யபோவதாகவும் தனக்கு அதிக சீதனம் கிடைக்கும் என சீண்டியதும் நினைவுக்கு வந்தது.

வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் செல்ல ஏற்கனவே தீர்மானித் திருந்தேன். அம்மாவுக்கு சித்ரா சம்பந்தமான விஷயத்தை சொல்ல வேண்டும். அப்பு முறுகுவார். அம்மா அழுவா இவை நான் எதிர்பார்த்தவை. இதைவிட சுப்பையாவின் வீட்டுக்கும் போய் ஆறுதல் சொல்லவேண்டும்; இவ்வாறெல்லாம் நினைத்தபடியால் மாலை ரயிலில் யாழ்ப்பாணம் சென்றேன்.

கொக்குவில் ரயில்வே ஸ்ரேஷனில் இறங்கி ஸ்ரேசன் ரோட்டால் போவதுதான் இலகுவான பாதை. ஆனால் அந்த வீதியால் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் போய்வருவதால் இரவில் அடிக்கடி இராணுவம் போகும் என நினைத்து, சிறிய ஒழுங்கையால் இறங்கி நடந்தேன். நாய்களின் வரவேற்பு அதிகமாக இருந்தாலும் இராணுவத்தை விட நாய்கள் பரவாயில்லை என நினைத்து நடந்தேன். லைட் இல்லாத ஒழுங்கைகளில் மனமதிப்பீட்டில் கால் பதித்து நடந்து வீடு சேர்ந்தபோது இரவு பத்து மணியாகி விட்டது. முன் மாமரத்தின் கீழ் இருந்து வந்த சுருட்டுப் புகை அப்புவை அடையாளம் காட்டியது.

'ஏன்டா தம்பி இருட்டில் வருகிறாய்? ' கொஞ்சம் வேளைக்கு வரக்கூடாதா' என்று என் கையை பிடித்துத் தனக்கருகில் இழுத்தாள் அம்மா.   'எனக்காக யாழ்தேவி நேரத்தோடு வருமோ?'என்று கேட்டாலும் அம்மாவின் அர்த்தமில்லாத கேள்வியில் இருந்த பாசத்தை உணர்ந்து நின்றேன். நான் எப்பொழுது லேட்டாக வந்தாலும்; என்னை திட்டியபடியே முத்தமிடுவது அம்மாவின் வழக்கம். நான் உயரமாக வளர்ந்தபின் கையையோ தோளையோ முத்தமிடுவாள். நான் இழுத்தபடியே உள்ளே செல்வேன். ஆனால் இன்று அம்மா முத்தமிட்டு முடிக்கும் மட்டும் நின்றேன். எனக்குள் இருந்த குற்ற உணர்வு இதற்குக் காரணமாக இருக்கலாம்.

'அவனைக் கூட்டிக்கொண்டு போய் சாப்பாடு கொடு' என அப்பு சொல்லிக் கொண்டு இருக்கும்போது, தம்;பி ரவி சைக்கிளில் வந்து இறங்கினான்.

'என்னடா பத்து மணிவரை ஊர் சுத்திப்போட்டு வருகிறாய்? ' மீண்டும் அப்பு சுருட்டின் கசப்பை மீண்டும் காறி துப்பியவாறே கேட்டார்.

'இப்பதான் ரியுசன் முடிந்தது. அண்ணை, நீ எப்ப வந்தனி?'.

'இப்பத்தான். நீ எப்படி படிக்கிறாய்? '

'ஏதோ ரிசல்ட் வந்தால் தெரியும்தானே? ' என்று அப்புதான் பதில் சொன்னார்.

குளித்துவிட்டு குசினிக்கு போனபோது அம்மா மீன்குழம்புடனும், சம்பலுடனும் புட்டு வைத்திருந்தார். 'வழமையான வெள்ளிக்கிழமை மரக்கறி சாப்பாடுதான். அண்ணை வந்தால் எனக்கும் மீன் குழம்பு கிடைக்கிறது' என்றபடி பக்கத்தில் வந்து அமர்ந்தான் தம்பி ரவி.

மௌனமாக சாப்பிட்டு விட்டு பாயை வாசலுக்கு அருகில் போட்டு படுத்தேன். அம்மா சிறிது நேரத்தில் நெற்றியில் திறுநீறை பூசிவிட்டு சென்றாள். இது எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் நடக்கும் விஷயம். இதைப் பற்றி கேட்டபோது 'திருநீறு பூசினால் கெட்ட கனவுகள் வராது' என பதில் வந்தது. நான் கோயிலுக்கு போய் பல வருடங்கள் ஆகிவிட்டது நான் திருநீறு பூசாவிட்டாலும், அம்மா என் நெற்றியிலே பாசத்துடன் திருநீறு பூசும் பொழுது, அதைத் தடுக்க எனக்கு மனம் வருவதில்லை.

நித்திரையால் விழித்தபோது ஒன்பது மணிக்கு மேலாகி விட்டது.

அம்மா கோப்பியுடன் வந்த போது 'எங்கே அப்பு' என்றேன்.

'சந்தைக்கு போய்விட்டார் '

'ரவி எங்கே? '

'ரியுசனுக்கு'

'சரி கோப்பியை வைத்து விட்டு எனக்கு பக்கத்தில் இரு ஒரு சங்கதி சொல்லப் போகிறேன். '

'என்ன புதிர் போடுகிறாய்? '

'நான் ஒரு பெட்டையை விரும்புகிறேன். அவளைக் கல்யாணம் கட்ட தீர்மானித்திருக்கிறேன். '

'யார் பெட்டை? உன்னோடு பல்கலைக்கழகத்தில் படித்தவளா? '

'இல்லை சிங்களப்பெட்டை. மதவாச்சியை சேர்ந்தவள். '

'துலைவானே, உங்கப்பனிடம் அடிவாங்கி சாகப்போகிறாய். நீ வேலை பார்த்தது போதும். வேலையை விட்டுவிட்டு ஊருக்கு வா'.

'விசர்க்கதை பேசாமல் நான் சொல்வதைக் கேள். அவள் ஆசிரியராக வேலை பார்க்கிறாள். '

'சிங்களத்தியை கல்யாணம் கட்டிக்கொண்டு யாழ்ப்பாணத்திலும் இருக்கமுடியாது. அந்த மதவாச்சியிலும் நீ இருக்க முடியாது. ' எனக் கூறிய அம்மா என்னை பரிதாபமாகப் பார்த்தாள்.

' நான் சிங்களப்பெட்டையை தேடித் திரியவில்லை. சந்தர்ப்பவசமாக அப்படி அமைந்தது ' என்று முன்னுரை கூறி வவனியாவில் என்னைக் காப்பாற்றிய கதையையும் கூறினேன். அம்மாவின் முகத்தில் சிறிது இணக்கம் வந்தது. தனது மகனை காப்பாற்றியதால் ஏற்பட்ட நன்றி உணர்வை உடனே பயன் படுத்த விரும்பினேன்.

'நீ தான் அப்புவிடம் சொல்ல வேண்டும். '

'எனக்கு தெரியாது நீயும் உன் அப்பனும் பட்டது பாடு' என எச்சரிக்கை உணர்வுடன் கழன்று கொள்ளப்பார்த்தாள்.

'உன்னைத்தான் நம்பி இருக்கிறேன். 'எனக் கூறியபடியே அம்மாவைக் கட்டி முத்தம் கொடுத்தேன்.

'டேய் போய் முகத்தைக் கழுவு' எனத் தள்ளி விட்டாள்.

'நான் பருத்தித்துறைக்கு போக வேண்டியிருக்கிறது. '

'ஏன் என்ன விடயம் '

'என்னுடன் விடுதியில் இருப்பவருக்கு உடம்பு சுகமில்லை' என கூறினேன். உண்மையை சொல்லி இருந்தால், 'இது ஆமி பொலிஸ் விடயம் நீ போகாதே' என தடுத்திருப்பா.

பக்கத்து வீட்டு மாஸ்டரிடம் மோட்டார் சைக்கிளை இரவல் பெற்றுக்; கொண்டு நல்லூர்கோவில் அருகில் பருத்தித்துறை வீதியை அடைந்த போது எதிரில் வந்த ராணுவ ஜீப்புக்கு இடம் கொடுத்து விலகி நின்றேன். எதிரில் ராணுவ ஜீப் வந்த போது பயம் ஏற்பட்டு என்னை கடந்த போது வெறுப்பு ஏற்பட்டது. இப்படியான உணர்வு வவனியாவுக்கு தெற்கால் ஏற்படுவதில்லை. யாழ்ப்பாணம் எனது பிரதேசம். இங்கு நாங்கள் அடங்கி வாழ்கிறோம் என்ற நினைப்பு மனதில் ஏற்பட்டதாலே இந்த உணர்வு வந்து போகிறது என நினைத்துக்கொண்டேன்.

மனதில் பல நினைவுகள் அலை மோதியதால் வழியை கவனிக்க வில்லை என நினைத்து பாதையை கவனித்தபோது நெல்லியடி வந்து விட்டதை உணர்ந்தேன். கடைவீதியை கடந்து போகும் போது எதிரில் ஒரு மாடு வந்ததும் சடுதியாக பிரேக்கை பிடித்தேன். மோட்டார் சைக்கிள் மாட்டில் மெதுவாக மோதி நின்றது. மாடு வேலியில் நீளக்கயிற்றில் கட்டப்பட்டு இருந்தது. தங்கள் பக்கத்து புல்லை மட்டும் அல்ல அடுத்த வளவில் வளரும் புல்லையும் தின்ன வேண்டும் என்ற தாராள மனப்பான்மை கொண்ட வடமராட்சிக்காரரை மனதில் திட்டடியபடி வியாபாரி மூலையை நோக்கிச் சென்றேன்.

சுப்பையாவின் வீட்டுக்கு எதிரில் நிறுத்திவிட்டு படலையை தட்டியபடி 'யார் வீட்டில் '? என சத்தம் கொடுத்தேன்.

புது பெயின்ரின் வாசனை வந்தது. சிறிது சிறிதாக பணம் சேர்த்து கட்டிய வீடு என நினைத்தேன்.

'யார் வேணும் ' என ஒரு பெண் குரல் கிணற்றுப்பக்கமாக இருந்து வந்தது.

' நான் சுப்பையாவை பார்க்கவேணும் அவரோடு மதவாச்சியில் வேலை செய்கிறேன். '

'உள்ளே வாருங்கள். '

படலையைத் திறந்து கொண்டு உள்ளே சென்ற போது எதிரில் இரட்டைச் சடைப்பின்னலுடன் நெற்றியில் திருநீறுடன் இருபது வயது மதிக்கத்தக்க இளம் பெண் வந்தாள். சிரிப்பில் சுப்பையாவின் சாயல் தெரிந்தது.

'அப்பா வருவார் இருங்கோ' என கதிரையைக் காட்டினாள்.

சுப்பையாவுக்கு இவ்வளவு அழகான பெண்பிள்ளை இருக்கும்போது சீதனம் சேமிக்க வேண்டிய தேவையில்லை. வரிசையில் ஆண்கள் மணம் முடிக்க தயாராக இருப்பார்கள் என எண்ணினேன்.

சுப்பையா தலையில் கட்டுடன் உடல் மெலிந்தவராக வந்தார்.

'என்ன இப்படி இருக்கிறீர்கள்?' என்றேன்.

'அரசாங்கத்தின் பரிசுதான். ' என புன்முறுவல் பூத்தார்.

'இப்ப எப்படி? '

'நேற்றுத்தான் பொலிஸ் நிலையத்தில் இருந்து விடுதலை செய்தார்கள். பத்து நாளில் மகனை கொண்டு வரவேண்டும் என நிபந்தனை விதித்து இருக்கிறார்கள்.

தேனீர் கோப்பையுடன் வந்த மகளை 'இது சுமதி எனது மூத்த மகள் ' என அறிமுகப்படுத்தினார்.

சுமதியின் சிரிப்பில் வேதனை இழையோடியது.

'அம்மாவும் தங்கச்சியும் செல்லச்சன்னதி கோயிலுக்குப் போய் இருக்கிறார்கள். '

சுப்பையாவை பார்த்து 'மகனைப்பற்றி ஏதாவது தெரியுமா' எனக் கேட்டேன்.

'திட்டமாக எதுவும் தெரியாது. இந்தியாவுக்கு ஆயுதப் பயிற்சிக்கு போனதாக சிநேகிதப்பொடியள் கதைக்கிறார்கள். ' அவர் கண்ணில் நீர் கரை கட்டியது.

'என்ன செய்ய உத்தேசம் '.

'என்ன செய்வது கடவுள் விட்டவழி.  அடுத்தகிழமை வேலைக்கு வரவேண்டும்.'

'ஏன் கொஞ்ச நாட்கள் லீவு எடுத்தால் என்ன'?

'போனவனை விட இருக்கிறவர்கள் சாப்பிட வேண்டும் ' என்றார் விரக்தியாக.

என்னுடைய கண்கள் கலங்கி விட்டன.

நான் எழுந்து 'மனதைத் தைரியப்படுத்தி கொள்ளுங்கள் ' என ஆறுதல் கூறிவிட்டு வந்தேன். என் ஆறுதல் வார்த்தைகளுக்கு அர்த்தம் இல்லை என்பது எனக்குத் தெரியும். கனத்த நெஞ்சத்துடன் கையசைத்து விடைபெற்றேன்.

வீட்டை அடைந்த போது பின்னேரம் மூன்று மணிக்கு மேலாகி விட்டது. இரவல் வாங்கிய மோட்டார் சைக்கிளை திருப்பிக்கொடுத்து விட்டு வரும் போது அம்மா வாசலில் குந்தி இருந்தாள். அம்மாவின் கண் சிவந்திருந்தது.

'என்ன பிரச்சனை' என அம்மாவை நெருங்கி போனபோது 'எல்லா பிரச்சனையும் உன்னால் தான்' என கூறினாள்.

கண்களில் இருந்து கண்ணீர் அருவி போல கொட்டியது.

'எங்கே அப்பு'

'முன் கடைக்கு போய் இருக்கிறார். '

'சரி நான் அவரோடு பேசுகிறேன். இப்ப எனக்கு பசிக்கிறது. சாப்பாடு போடு'.

சாப்பாட்டை உண்ணும் போது நெஞ்சு கனத்தது. சுப்பையாவின் நிலைமை என்னில் ஏற்படுத்திய தாக்கம் போகவில்லை. இத்துடன் அம்மாவின் பாசமும் அப்புவின் பிடிவாதமும் மனதைக் குடைந்தன.

சாப்பாடு முடித்து எழுந்தபோது அப்பு வந்தார். அவரது முகத்தை பார்க்க தைரியம் இல்லாததால் அடுத்த பக்கம் பார்த்தேன்.

'அம்மா சொல்லுவது உண்மையா' என அப்புவின் குரல் கேட்டு திரும்பினேன்.

'என்ன சொல்வது?' அப்புவின் கண்கள் சிவந்திருந்தன.

'உனக்கும் ஒரு பெட்டைக்கும் பழக்கமா......?' என்று நேரடியாக கேட்டார்.

'ஆம் '.

'எங்களை எல்லாம் விட்டுப்போக தீர்மானித்து விட்டாயா? '

'அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் ?'

'தமிழரும், சிங்களவரும் ஒருவரை ஒருவர் கொலை செய்யும் இந்தக்க காலத்தில் சிங்களப்பெட்டையை கல்யாணம் செய்து விட்டு எங்களுடன் இருக்கலாம் என நினைக்கிறாயா? '

'சிங்களவர் தமிழர் பிரச்சனைக்கும் இருவர் திருமணம் செய்வதற்கும் என்ன சம்பந்தம் '? என்றேன் எரிச்சலுடன்.

'சம்பந்தம் இருக்கடா, படிச்ச முட்டாள்! நான் மற்ற தகப்பன் மாதிரி சீதனம் வேண்டும் என்றோ குறைந்த பட்சமாக நாங்கள் பார்த்துப் பேசிய பெண்ணைத்தான் நீ மணக்க வேண்டும் என்றோ எதிர்பார்க்கவில்லை. எதிர்காலத்தில் நீ நிம்மதியாக இருக்க வேண்டும் என்பது தான் எங்கள் விருப்பம். '

அப்புவுக்கு எந்த பதிலும் சொல்லவில்லை. முரட்டுத்தனமான பிடிவாதத்தில் உள்ளுக்குள் ஆழமான அன்பு பலாப்பழத்தின் சுளை போல் இனித்தது.

அப்பு இவ்வளவு சுலபமாக சம்மதிப்பார் என எதிர்பார்க்கவில்லை. பிடிவாதமும், முரட்டுத்தனமும் உங்கப்பனுடன் கூடப்பிறந்தது என அம்மா அடிக்கடி கூறுவது வழக்கம். பாடசாலையில் படிக்கும் போது ஆசிரியருடன் சண்டை இட்டுக்கொண்டு புத்தகத்தை நயினாதீவுக்குளம் ஒன்றில் வீசிவிட்டு பிரித்தானிய படையில் சேர்ந்தார் என்றும் பின்னர் எகிப்துக்கு போகும்படி சொன்ன ராணுவக் கட்டளையை மீறி

சிங்கப்பூரில் இருந்து இலங்கை வந்ததுமான விடயத்தை மாமி மூலம் கேட்டிருக்கிறேன். மூன்று வருட இராணுவச் சேவையின் அடையாளமாக யுனிபோம் ஒன்றை மட்டுமே நான் கண்டிருக்கிறேன்.

இப்படியான பல கதைகளின் மூலம் அப்புவை சுற்றி அம்மாவும் எனது உறவினர்களும் ஒரு முள்வேலி போட்டிருந்தபடியால் நானோ எனது தம்பியோ அவரது உள்ளத்தை புரிந்து கொள்ளவில்லையோ என பலமுறை எண்ணியுள்ளேன்.

சிறிது நேரத்தின் பின் கூறினேன். ' அப்பு நான் சித்ராவை காண முன்பு பல பெண்களை சந்தித்தும் பேசிப்பழகியும் இருக்கிறேன். என் மனதில் எந்த எண்ணமும் எழவேயில்லை. மதவாச்சி போன்ற இடத்தில் ஒரு பெண்ணை சந்திப்பேன் என நான் கூட எதிர்பார்க்க வில்லை. மேலும் அவளை ஒரு பெண்ணாக தான் பார்த்தேன். அதற்காக நீங்கள் சொல்லும் பிரச்சனைகள் என்னை பாதிக்காது என்றோ எங்கள் காதல் தெய்வீக காதல் என்ற கற்பனையிலோ நான் இல்லை. கட்டிடங்கள் பாலங்கள் கட்டுவதைப் போன்று மனித வாழ்க்கையை திட்டமிட்டு செயல்படுத்த முடியாது. மனங்களில் ஏற்படும் எண்ணங்கள் தான் மனித வாழ்க்கையை தீர்மானிக்கின்றன என்பதை நான் உண்மையில் நம்புகிறேன். என்னால் சித்திராவை கல்யாணம் செய்து வாழமுடியும் என உறுதியாக

நம்புகிறேன் '.

'தம்பி நீ வளர்ந்து விட்டாய்' உனக்குத் தெரியும் உனது செயல்களினதும் அதன் விளைவுகளுக்கும் நீயே பொறுப்பு என்பது. நாங்கள் சொல்வதை சொல்லி விட்டோம் 'என எங்களுடைய உரையாடலுக்கு முற்றுப்புள்ளி வைத்து எழுந்தார்.

பாயையும் தலகணியையும் முற்றத்து மாமரத்தின் கீழ் விரித்துப் போட்டுவிட்டு ஆகாயத்தைப் பார்த்தபடி படுத்தேன்.

வட்டப்;பாறை

யாழ்ப்பாணத்தில் இருந்து வந்ததும் என்னுடைய அப்பா அம்மா திருமணத்துக்கு சம்மதித்த செய்தியைச் சித்ராவிடம் சொல்ல வேண்டும் என துடித்தேன். தொடர்ந்து கந்தோரில் வேலை இருந்தது. மதவாச்சி பிரதேசத்து மாடுகளுக்கு மழைகாலம் வரும்முன்பு தடுப்பூசி போட வேண்டுமென்பதால் இரவு பகலாக வேலை செய்ய வேண்டியிருந்தது. மனதுக்குள் திட்டியபடியே வேலையை முடித்துவிட்டு சனிக்கிழமை பதவியா சென்றேன்.

நான் போகும் போது வாசலில் என்னை எதிர்பார்த்து அவள் காத்து நின்றாள். பூப்போட்ட சட்டையும் அதன் கீழ் பூப்போட்ட துணியும் அணிந்திருந்ததால் ஒரு பூங்கொத்தாக காட்சியளித்தாள்.

நான் அவள் கைகளைப் பிடித்துக்கொண்டு 'எங்கள் வீட்டில் சம்மதித்து விட்டார்கள் ' என்றேன்.

கண்களை அகல விரித்தபடி 'உண்மையாகவா? '

அவள் என்னை நம்பவில்லை என தெரிந்தது. 'சத்தியமாக' எனக்கூறி அவள் தலையில் அடித்தேன்.

'நோகிறது' என சிணுங்கினாள்.

'என் ராசாத்தி' என கூறியபடி அணைத்தபோது 'அம்மா வருகிறார்'; என விலகினாள்.

'எப்படி மாத்தையா' என சித்ராவின் தாயார் கேட்டார்.

என் பெற்றோர் சம்மதம் தெரிவித்ததை கூறியதும், மகிழ்ச்சியுடன் 'கடவுளுக்கு புண்ணியம் ' என கூறினார். பின்னர் எதையோ நினைத்துக் கொண்டவரைப் போல, 'எல்லோரும் சுகமா? ' என வழமையான கேள்வியையும் கேட்டு வைத்தார்.

'பதவியாவுக்கு வருகிறாயா? ' என சித்ராவிடம் கேட்டேன்.

அவள் தாயைப் பார்த்தாள்.

'கவனமாக போய்வா' என விடை கொடுத்ததும் வீட்டுக்குள் சென்று உடனே உடுத்தியிருந்த துணியை கழற்றிப் போட்டு விட்டு அரைப் பாவாடையோடு வந்தது ஆச்சரியமாகவும் கவர்ச்சியாகவும் இருந்தது. முழங்காலுக்கு மேல் சிறிய கச்சித உடையிலே அவள் பாடசாலை ஆசிரியர் போல் அல்லாது மாணவி போலத் தோன்றினாள். சித்ராவின் கால்களை முதன்முறை பார்ப்பது இதயத்தில் ஒரு கிளுகிளுப்பை ஊட்டியது.

சித்ரா மோட்டார் சைக்கிளில் ஏறி பின் பக்கத்தில் அமர்ந்ததும் என் இடுப்பை பிடித்தபடி தாயாருக்கு கையசைத்தாள்.

சிறிது தூரம் சென்றதும் 'இவ்வளவு அழகான கால்கள் இருக்குமென்றால் சேலை வாங்கித் தந்திருக்க மாட்டேன் 'என்று குசும்பு செய்தேன.;

'அடிப்பேன்' என கூறியபடி கைகளால் தன் கால்களை மூடினாள். மோட்டார் சைக்கிளின் வேகம் எனக்கு சார்பாக இருந்ததால் பாவாடை மேலும் உயர்ந்தது.

'இனிமேல் அரை பாவாடைகள் தான் என் பரிசுப்பொருட்கள்'

'இப்படி என்றால் நான் இனி அரை பாவாடை போடமாட்டேன் '

'சரி சரி நான் அப்படி சொல்லவில்லை. '

பதவியாவின் குளக்கரையை அடைந்தோம். மதிய வெயிலில் பதவியா குளத்தண்ணீர் பொன்னை உருக்கி வார்த்தது போலத் தெரிந்தது. இடையிடை தெரிந்த மெல்லிய நீரலைகள் மட்டுமே தண்ணீர் என்கிற வாஸ்தவத்தை நினைவு படுத்தின. மோட்டார் சைக்கிளை விட்டு குளக்கரையோடு நடந்தோம்.

படிக்கட்டு இருந்த இடத்தில் பலர் குளித்தனர். 'எனக்கு தெரிந்தவர்கள் பலர் இருக்கிறார்கள்' என்று கூறி சித்ரா என்னை வேறு வழிக்கு இழுத்தாள்.

'தெரிந்தால் என்ன? '

'எனது மாணவர்கள் கூட இருக்கலாம்.'

அடுத்த பகுதியில் குளத்தின் ஆழமான பகுதி இருந்தது. அங்கு எவரும் இல்லை. கரையில் வட்டமான பெரிய பாறையும் அதன் பக்கத்தில் பெரிய ஆலமரமும் இருந்தது. பாறையில் நாங்கள் இருந்ததும் குளத்து நீர் மட்டும் தெரிந்தது. மற்றைய பக்கங்களைச் செடிகளும் ஆலமரமும் மறைத்தன.

'சித்ரா இந்த இடம் எவ்வளவு குளிர்மையாக இருக்கிறது.'

'ஆமாம் ' என கூறிய படி சுற்றி சுற்றி பார்த்தாள்.

'என்ன சுற்றிப்பார்க்கிறாய்? '

'இல்லை இங்கு யாராவது எங்களைப் பார்த்தால் என்ன நினைப்பார்கள்?'

'சரி' என இழுத்து எனக்கு அருகில் இருத்தினேன்.

ஆலமரத்தின் நிழலும், கிணற்று நீரும் கோடையில் குளிராகவும் குளிர்காலத்தில் சூடாகவும் இருக்கும் என்பது உனக்குத் தெரியுமா? '

'யார் சொன்னது? '

'பழைய தமிழ் இலக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கிறது'

'வேறு என்ன இருக்கு உங்கள் இலக்கியத்தில் ?'

'வேறு ஒரு இடமும் குளிர்காலத்தில் சூடாகவும் கோடைகாலத்தில் குளிராகவும் இருக்கும். '

'அது என்ன'?

'இங்கு கிட்ட வா' என அவளை இழுத்து அவளுடைய மார்புகளிpல் என்; தலையை புதைத்தபடிஇ 'இதுதான் ' என்றேன்.

'நீங்களும் உங்கள் இலக்கியமும் நல்லா இல்லை'.

'ஏய் என்னை நல்லா இல்லை என்றாலும் எங்கள் தமிழ் இலக்கியத்தை குறை கூறாதே. '

சித்ரா மௌனமாக என் தலையைத் தடவினாள்.

'சித்ரா திருக்குறள் என்னும் தமிழ் நூலைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறாயா? '

'கேள்விப்பட்டிருக்கிறேன். '

'அங்கு ஒரு பாடலில் அழகிய பெண்ணின் உமிழ்நீர் பாலும் தேனையும் கலந்தது போலச் சுவை இருக்கும் என கூறப்பட்டிருக்கிறது. '

'என்ன உங்களுக்கு இன்று இலக்கியம் அதிகமாக வருகிறது?'

'உன் போன்ற அழகிய பெண் அருகில் இருப்பதுதான் காரணம். ' என கூறியபடி அவள் மடியில் சாய்ந்தேன்.

'வீட்டில் என்ன சொன்னார்கள். '

'சிங்களத்தியைக் கல்யாணம் முடித்தால் யாழ்ப்பாணம் வரமுடியாது. 'கலவரம் வரும் போது சிங்கள நாட்டில் சீவிக்க முடியாது. இதை யோசித்து விட்டு திருமணம் செய்' என்று தந்தையார் கூறினார். அம்மா 'நீ சந்தோஷமாக இருந்தால் சரி' என கூறினார். மொத்தத்தில் அம்மாவின் இதயபூர்வமான சம்மதமும் அப்புவின் அறிவுபூர்வமான எச்சரிக்கையுடன் கூடிய சம்மதமும் கிடைத்தன.'

'நீங்கள் என்ன சொன்னீர்கள். '

'சிங்களத்து குயில் என் இதயத்தை கொத்தி எடுத்து விட்டது என்றேன் '

'சீரியஸாக கதையுங்கள். உங்களது பகிடிகளைப் பின்பு வைத்துக் கொள்ளலாம்.'

'என்ன சொல்லி இருப்பேன். சித்ரா என்ற பெண்ணைத் தான் பார்த்தேன். மொழி இனம் மற்றும் சமயத்தை நான் பார்க்கவில்லை. அவள் உள்ளத்திலே அன்பு சுரந்து கொண்டிருக்கிறது..' என்று கூறினேன்.

'உண்மையில் அப்படி கூறினீர்களா? ' என கேட்டபோது இரு கண்ணிலும் இரண்டுதுளிகள் கண்ணீர் கீழ் நோக்கி உருண்;டோடின.

'ஏய் அழுகுணி'இ என கூறியபடி தலையை கைகளால் அணைத்து உதட்டில் முத்தம் கொடுத்து விட்டு 'திருவள்ளுவர் அநுபவசாலி' என்றேன்.

அழகான சிரிப்பு பதிலாக வந்தது.

'சித்ரா அடுத்தமாதம் மூன்றாம்; திகதி பதிவுத் திருமணம் செய்வோம். '

'என்ன, என்ன? 'என்று கேட்டுத் திடுக்கிட்டாள்.

' அது மதவாச்சியில் நடக்கும். '

'இன்னும் இரண்டு கிழமைதான் இருக்கு. ஏன் அவசரம் ?'

'நான் பலமுறை யோசித்து விட்டுத்தான் முடிவு செய்தேன். யாழ்ப்பாணத்தில் நிலைமை சரியில்லை. எப்போதும் பிரச்சனை வரலாம். புதிவுத் திருமணம் செய்தபின் நீ என்னோடு வந்து யாழ்ப்பாணம் வந்து பெற்றோரை பார்க்கலாம். பிரச்சனை தீர்ந்தபின் கல்யாணத்தை எல்லோருக்கும் சொல்லி நடத்தலாம்.'

'உங்களது விருப்பம் எதுவோ அது எனக்கு சம்மதம். பதவியாவில் என் வேலையை என்ன செய்வது? '

'மூன்று மாத லீவு எடு. அதற்குள் மதவாச்சிக்கு மாற்றம் எடுத்து விடலாம்;.'

'அம்மா தேடுவா' போவோம்.

வட்டபாறையை விட்டு வர மனமில்லாமல் எழுந்து நடந்தேன்.

சித்ராவின் வீட்டை அடைந்த போது ருக்மனும் பண்டாரவும் முற்றத்தில் நிற்பது தெரிந்தது.

அவள் வீட்டினுள் ஓடினாள்.

'எப்படி சுகம் பண்டார'?

ருக்மனை நோக்கி கிண்டலாக 'நல்ல சுகம். ஆனால்; மச்சான்தான் நல்லா இல்லை' என்றான்

எப்படி அரசியல் நிலை இருக்கிறது. '?

'பெரும்பாலான தொழிலாளர்கள் இளைஞர்கள் எங்கள் பக்கம். '

'சிங்களத் தொழிலாளர் ' என சிறிது அழுத்தமாக கூறினேன்.

'தமிழ்த் தொழிலாளரும் எங்கள் பக்கம் வருவார்கள் '

'பத்து லட்சம் மலையக தொழிலாளர்களை மறந்து விட்டீர்களா? '

'தொண்டமானும் ஐக்கிய தேசியக்கட்சியும் தங்களை ஏமாற்றுகிறார்கள் என தெரிந்தால் அவர்கள் எங்கள் பக்கம் வருவார்கள் '.

'இலங்கையின் பொருளாதாரத்தில் முதுகெலும்பை போன்றவர்கள் மலையகத் தொழிலாளர்கள். அவர்கள் இல்லாமல் எந்தப் புரட்சியும் இலங்கையில் நடக்காது என்பது இலங்கை அரசாங்கத்துக்கு நன்றாகத் தெரியும்.'

'அதற்கு நாங்கள் என்ன செய்யலாம்' என்றான் ருக்மன்;.

உங்கள் 'அடிப்படை கொள்கையில் மாற்றம் வேண்டும் அந்த தொழிலாளர்களுக்கு பிரசா உரிமை வேண்டும்' என்ற போது எவரும் வாய் திறக்கவில்லை. எல்லோருமாக சேர்ந்து இந்தியாவுக்கு அனுப்பப் பார்த்தார்கள். சிங்கள இடதுசாரிகள் மட்டுமல்ல இந்த விடயத்தில் வடக்கு, கிழக்கு தமிழர்களும் ஈடுபட்டார்கள், இதன் மூலம் இலங்கையின் சிங்களத்தொழிலாளர்கள் தங்களது சகோதர

தொழிலாளர்கள்pன் பலத்தை இழந்தார்கள். வடக்கு கிழக்கு தமிழர்கள் தமிழ் பேசும் சகோதரர்களை இழந்தார்கள்.'

'நீங்கள் சொல்வதில் உண்மை இருக்கு' என்றான் பண்டார.

பண்டார விடை பெற்று சென்றபின் எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தோம்.

பாதி சாப்பாடு சாப்பிடும் போது வெளியே வாகன சத்தம் கேட்டது.

சாப்பாடு பரிமாறிக் கொண்டிருந்த சித்ரா வெளியே ஓடிச்சென்று விட்டு மீண்டும் வந்த போது முகத்தில் கலவரம் தெரிந்தது.

'என்ன சித்ரா'

'பொலிஸ் வந்திருக்கு'

ருக்மனும்; நானும் கையைக் கழுவி விட்டு வெளியே வந்தோம்.

பதவியா பொலிஸ் இன்ஸ்பெக்டரும் அவருடன் நாலு கான்ஸ்டபிள்களும் நின்றார்கள். இன்ஸ்பெக்டர் சந்திரசிறி பதவியா காட்டில் யானையை பிரேத பரிசோதனை செய்;த போதும் பின்பு சட்டவிரோதமாக மாடு கடத்தல் வழக்கிலும் எனக்கு அறிமுகமானவர்.

என்னைக் கண்டவுடன், 'என்ன டொக்டர் இந்தப் பக்கம்' என்றார்.

'மாடுகளுக்கு தடுப்பூசி போடுவதற்காக வந்தேன்.' என சிறு பொய்யை கூறி வைத்தேன்.

'இந்தப் பகுதி உங்களுக்கு நல்ல பழக்கமாகி விட்டது போலும்.'

'ஆமாம், நீங்கள் என்ன இந்த பக்கம்? '

'ருக்மனுடன்; பேச வேண்டும்,' என கூறிவிட்டு 'ருக்மன்; இந்தப்பக்கம் வர முடியுமா?' என்று ஜீப்பின் அருகே கூட்டிச் சென்று சில நிமிடங்கள் பேசினார்.

சந்திரசிறி என்னருகே வந்து விடைபெற்றுச் சென்றார்.

'என்ன விடயம் ருக்மன்; என்றேன் '

'ஒன்றுமில்லை. '

'ஒன்றுமில்லாமல் ஏன் பொலிஸ் வருகிறது? 'என்று சித்ரா பேச்சிலே குறுக்கிட்டாள்.

ருக்மனின் முகத்தில் உள்ள சஞ்சலம் புரிந்தபடியால்; 'சரி எல்லோரும் உள்ளே சென்று சாப்பிடலாம்' என கூறியபடி உள்ளே சென்றேன். என்னைத் தொடர்ந்து மேசையை சுற்றி ருக்மனும், சித்ராவும் அமர்ந்தனர்.

'என்ன விஷயம் அண்ணா? ' என சித்ரா மீண்டும் கேட்டாள்.

'என்னை அரசியல் வேலையில் ஈடுபடவேண்டாம். ஈடுபட்டால் கைது செய்ய வேண்டி வரும் ' என்றார்.

'தற்போது ஜே.வி.பி தடைசெய்யப்படவில்லை தானே'?என்றேன.;

'அரசாங்கம் ஜேவிபியுடன் இரட்டை வேஷம் போடுகிறது. வெளிநாடுகளில் இந்த அரசாங்கம் கடன் வேண்டுவதற்காக செய்தது. தெல்தெனியாவில் இரண்டு தோழர்களை பொலிஸ் கடந்த மாதம் கைது செய்தது. அதில் ஒருவரை சுட்டுக்கொன்று விட்டதாக ஏற்கனவே தகவல் வந்துள்ளது.' என ருக்மன்; வெறுப்புடன் பதிலளித்தான்.

'சரி என்ன செய்வதாக உத்தேசம். '

'அரசாங்கத்துக்குப் பயந்து அரசியல் வேலையை நிறுத்த முடியாது. நாங்கள் அமைதியான முறையில் தான் செய்து வருகிறோம்.'

'எதற்கும் கவனமாக நடக்க வேண்டும்.'

'எனக்குப் பயமாக இருக்குது' என்று கூறி சித்ரா குரல் உடைந்தாள்.

அவளின்; தாய் தந்தையர் குசினியுள் நின்றதால் இந்த சம்பாஷனைகள் கேட்கவில்லை. சித்ராவின் தந்தையார் அப்பாவித்தனமாக, 'பொலிஸ் என்னவாம் ' என்றார்.

அதற்கு ருக்மன்; 'இந்தப்பக்கம் வந்தார்கள். அது தான் விசாரித்து விட்டு போகிறார்கள்' என்று சொன்னான்.

இரவு பத்துமணி வரை எங்;களுடன் இருந்து விட்டு ருக்மன்; நண்பனை சந்திக்க வேண்டும் என கூறிச் சென்றான்.

சித்ரா எனக்கு ஒரு பாயும் தலையணையும் கொண்டு வந்து முன் விறாந்தையில் வைத்தாள். சித்திரா வீட்டில் ஒரு அறை மட்டும் இருந்தது. அது அவளின் உபயோகத்திற்காக இருந்தது. முன்புறத்தை அவளின் பெற்றோர்கள் பாவித்து வந்தார்கள். அவர்கள் இன்று குசினிப்பக்கம் போய் விட்டார்கள்.

'என்ன வெளியில் படுக்க வைக்கிறாய்? என்ன நோக்கம் ' என்றேன் சித்திராவிடம்.

'நல்ல நோக்கம் தான் ' என கூறி படுக்கையை விரித்தாள்.

'சரி நீ எங்கே படுக்கிறாய்? '

'அறைக்குள் '.

'உனது அறைக்குள் நான் உடை மாற்றலாமா? '

'தாராளமாக. '

உள்ளே சென்று உடுப்பு மாற்றி  வந்து நான் சித்ராவிடம் தண்ணீர் கேட்டேன்.

சிறிது நேரத்தில் கோப்பையுடன் வந்தவளை கோப்பையுடன் சேர்த்து இழுத்தேன்.

' எனக்குத் தெரியும் இது நடக்கும் என்று. '

'அப்போ நீயும் எதிர்பார்த்தாய் அல்லவா? '

பதில் பேசவில்லை.

'சித்ரா குஞ்சு ஏன் பதில் பேசவில்லை.'

'நீங்கள் வந்ததில் சந்தோஷமாக இருந்தேன். ஆனால் ருக்மன்; அண்ணாவின் விடயம் இப்போது பயமாக இருக்கிறது.'

'உனது பயம் எனக்குப் புரிகிறது. மேலும் ருக்மன்; நான் சொல்லியோ நீ சொல்லியோ கேட்கப் போவதில்லை. உனக்கு கடவுள் நம்பிக்கை இருக்கிறதல்லவா? பிரார்த்தனை செய்வதே நீ செய்யக் கூடிய விடயம். '

'நீங்கள் இலகுவாக சொல்லி விட்டீர்கள். '

'அநுபவத்தால் சொல்கிறேன். யாழ்ப்பாணத்தில் பல விடயங்களை பார்த்திருக்கிறேன். அண்ணாவை தற்காலிகமாக மறந்து விட்டு என்னை கொஞ்சம் நினை என்று கூறி அவளை அணைத்தேன். மடியில் விழுந்த வேகத்தில் அண்ணனை மறந்து விட்டாள் என்பது புரிந்தது.

முன்னிரவில் அவள் வீட்டிற்கு பின்னால் செழித்திருந்த நெல் வயலின் ஊடாக வரும் குளிர்காற்று இதமாக இருந்தது. நெற்கதிர்;கள்pன் சலசலப்பு ஒர அபூர்வ ராகமாக ஒலித்தது. ஆனால் தவளைகளின் ஒலி இன்ஸ்பெக்டர் சந்திரசிறியைப் போல் அமைதியை கலைத்தது.

மடியில் கிடந்த சித்ராவை 'என்ன நித்திரையோ' என உலுப்பினேன்.

'இல்லை நீங்கள்தானே இழுத்தீர்கள். '.

'அம்மாவிடம் அடுத்தமாதம் கல்யாணம் என்று கூறினாயா? '

'சொன்ன போது ஏன் அவசரப்படுகிறார் என்று கேட்டார்; '.

'நீ என்ன சொன்னாய்? '

'ஆளே அவசரக்காரர்தான் என்றேன். '

'முத்துக்குளிக்க கடலில் இறங்கியவன் அவசரமாக முத்து எடுத்துவிட்டு திரும்பி விடுவான். எதற்கும் எனக்கு முத்தம் கொடு. நான் அவசரக்காரன்' என இழுத்து முத்தமிட்டேன். பதில் சொல்ல முயல்வது உதடுகள் அசைவதில் இருந்து தெரிந்தது. வாயாடி பெண்களின் வாயை அடைப்பதற்குத்தான் மேல் நாட்டில் அடிக்கடி முத்தம் இடும் வழக்கம் வந்திருக்க வேண்டும் என்று நினைத்தபடி அவளை என்னுடன் நீக்கமற இறுக அணைத்தேன்.

சித்ரா தேநீரோடு எழுப்பிய போதுதான் சுற்றிப்பார்த்தேன். நன்றாக விடிந்திருந்தது. தலையணைக்கு அடியில் வைத்திருந்த கைக்கடிகாரம் மணி ஒன்பது எனக் காட்டியது.

'என்ன விடிய விடிய நித்திரை' குறுஞ்சிரிப்புடன் கேட்டாள் சித்ரா.

'இரவில் நித்திரை கொள்ள நீ விடவில்லை. '

'மெதுவாக' என்று சுற்றிப்பார்த்தாள்.

'உண்மையை தான் சொன்னேன் நீ எப்ப எழும்பினாய்? '

நாலுமணிக்கு அறைக்குள் சென்று படுத்து விட்டேன்.

'கெட்டிக்காரிதான். அதுசரி வெறும் தேநீர் கொண்டு வந்திருக்கிறாய்? எங்கள் ஊரில் இப்படியான நாட்களில் முட்டை கோப்பி கொடுப்பதுதான் மனைவிமாரின் வழக்கம். '

'முட்டைக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் ' என்றாள் வெகுளியாக.

' திருமணம் முடிந்த பின் ஆறுதலாக விளக்கம் தருகிறேன். ருக்மன்; வந்து விட்டானா? '

'அண்ணா வந்து இப்போது தான் குளிக்கிறார்.'

'நானும் குளித்து விட்டு மதவாச்சி போகவேண்டும்.'

' அடுத்தகிழமை யாழ்ப்பாணம் போகிறேன். அங்கு தான் சேலையும் ஏனைய பொருட்களும் வாங்க வேண்டும். அம்மாவுக்கு காட்ட உன் புகைப்படம் ஒன்று தரவேண்டும்'.

குளித்து விட்டு மதவாச்சிக்கு புறப்பட்டேன்.

அன்று ஞாயிற்றுக்கிழமை ஆகையால் விடுதியில் ஒருவரும் இல்லை. தலைமயிர் வெட்டும் நோக்கில் ஆறுமுகண்ணையின் கடைக்குள் சென்றேன்.

'தலைமயிர் வெட்டவோ', என்றார் ஆறுமுகம். தலைமயிர் வெட்டும் போது சலூனில் தொங்கும் சினிமா நடிகைகளின் உருவப்படங்களை பார்ப்பதும், ரசிப்பதும் சின்னவயதில் இருந்து வந்த பழக்கம்.

'உங்களது சலூனில் தான் சம உரிமை தெரிகிறது. '

'ஏன் அப்படி சொல்கிறியள்? '

தமிழ் சினிமா நடிகைகள் மட்டுமல்லாமல் மாலினி பொன்சேகாவுக்கும் இடம் அளித்திருக்கிறீர்கள். அதுதான் சொல்கிறேன். '

'ஓ அதுவா' என பெரிதாக சிரித்தார். இருவரும் சேர்ந்து சிரித்தோம்.

'அது சரி, ஐயாவுக்கு ஊர் புதினம் தெரியுமா? '

நான் ஊர் பக்கம் போய் நாளாகிறது. நீங்கள் தான் சொல்லவேண்டும்.'

'ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தை அடித்து விட்டார்களாம். போனகிழமை நல்ல அடி. ''பொடியள் கெட்டிக்காரர் தான். '

'யார் செய்தது. '

புலிகள் என்று சிலர். புலிகளில் இருந்து பிரிந்தவர்கள்; என்றும் சிலர் பேசுகிறார்கள். யாரென்றாலும் நல்லா செய்திருக்கிறார்கள். '

'அப்படியா'?

'என்ன ஒரு மாதிரி சொல்கிறியள்? அரசாங்கத்துக்கு நல்லபாடம் படிப்பிக்க வேணும். '

'ஆறுமுகத்தண்ணைஇ நீங்க சொன்ன செய்தியில் பொலிஸ் ஸ்ரேசனை அடித்தது நல்ல விடயம். ஆனால் ஏதோ பிரிந்தவர்கள் என்றியளோ அதுதான் என்னைச் சிந்திக்க வைத்தது. ஆயுதம் ஏந்துவது என தமிழ் சமுதாயம் முடிவு செய்து விட்டது. ஆனால் இப்படி பிரிந்து ஏந்தினால் கொல்லப்படுவது அரசாங்கத்தின் பாதுகாப்பு படைகளை விட தமிழர்களே அதிகமாக இருக்கும் என நினைக்கிறேன். இது எங்களுக்கு புதிய விஷயம் அல்ல. தமிழ்க் காங்கிரசுக்கட்சியும், தமிழரசுக் கட்சியும் ஒருவரை ஒருவர் எதிர்த்த போது அதிக ஆள் சேதமில்லை. ஒருவரது கூட்டத்துக்கு கல்லெறிந்து குழப்புவது. துரோகிகள் என வாயால் திட்டுவதும்தான். ஆனால் ஆயுதங்களை ஏந்தியவர்கள் பிளவுபடும் போது நிலைமை மோசமடையும். '

'நாம் என்ன செய்வது? நடப்பது நடக்கட்டும். ஆனாலும் ஐயா நான் ஒரு கதை கேள்விப்பட்டேன் பிழை என்றால் மன்னியுங்கள். '

'கேளுங்கோ ஆறுமுகமண்ணை. உங்கள்pடம் என் தலையை தந்து விட்டேன். '

'உங்களுக்கு பதவியாவில் ஒரு சின்ன தொடுசல் இருக்குதெண்டு கேள்விப் பட்டேன்.'

' உங்களுக்கு யார் சொன்னது'?.

'சும்மா காற்று வாக்கில் கேள்விப்பட்டேன். '

'உங்களுக்கு ருக்மனை தெரியுமா? '

'ஜே.வி.பி ருக்மன்; தானே? '

'ருக்மனின் தங்கை. அவளை நான் கல்யாணம் கட்டப் போகிறேன். '

ஆறுமுகம் என் தலையை வெட்டுவதை விட்டுவிட்டு 'என்ன ஐயாவுக்கு விசரா? நான் அப்பவே சொன்னேன். அந்த விடுதியில் தங்கவேண்டாம் என்று. ' நான் ஏதோ ஆபத்திலே மாட்டியுள்ளதாக அவர் அவதிப்பட்டார்.

'சரி, இப்ப என்ன நடந்து விட்டது. என் தலைமயிரை வெட்டி முடியுங்கள். '

'அதில்லை. உங்கள் வீட்டில் சம்மதமா? '

'இல்லை. '

'நான் சொல்கிறேன் நீங்கள் இடமாற்றம் எடுத்துக்கொண்டு யாழ்ப்பாணம் போங்கள் '.

'நான் விரும்பித்தானே கல்யாணம் செய்யப்போகிறேன் ' என கேட்டபடி காசை கொடுத்தேன்.

'சரி நீங்கள் படித்தவர் ' என காசைப்பெற்று லாச்சியிலே வைத்தார்.

'நீங்கள் கல்யாணத்துக்கு வர வேண்டும். '

'ஐயாவின் கல்யாணம் நான் இல்லாமலா? 'என சிரித்தார்.

திங்கட்கிழமை அதிக வேலைப்பழுவினால் விடுதி செல்ல மாலை ஆறு மணியாகி விட்டது. அங்கு எனக்கு ஆச்சரியம் காத்திருந்தது. சுப்பையா அங்கிருந்தார்.

'எப்படி சுகம் ' என விசாரித்த போது பரவாயில்லை எனச் சிரித்தபடியே கூறினார். உடல் மெலிந்திருந்தாலும் சிரிப்பு அப்படியே இருந்தது.

குணதாச வழமையான கிண்டலுடன் 'பொலிஸ் ஸ்ரேசனில் சாப்பாடு கிடைத்ததா? ' என்றான்.

'அடி உதையையோ, சோறு கறியையோ கேட்கிறீர்கள். '

குணதாசவின் முகத்தில் அசடு வழிந்தது.

குணதாசவிடம் 'சுப்பையா மாத்தையா ஜெயிலிலிருந்து வந்ததை கொண்டாட வேண்டும். ஆளுக்கு ஐந்து ரூபா போடுங்க' என்றேன். எல்லோருமாக நூறு ரூபா சேர்த்து இரண்டு கிலோ இறைச்சியும் ஏளுமுயு போத்தலும் வாங்கி வரும்படி ராகவனிடம் கொடுத்தோம்.

'ஐயா சுப்பையா மாத்தையாவிடம் மற்ற புதினம் சொல்லவில்லை.' என்றான் ராகவன்.

'அது என்ன' என்றேன்.

'ருக்மனின் நங்கியை கல்யாணம் கட்டுவது'

'உண்மையாகவா' - சுப்பையா.

'ஆம்'

'எனது நல்வாழ்த்துக்கள்.'

'அதற்கு நாங்கள் பிளக் அன்ட் வைட் விஸ்கிதான் குடிப்பதாக முடிவு செய்திருக்கிறோம்'.  குணதாச.

அன்று எங்கள் விடுதியில் சந்தோஷமான நாள். ருக்மன்;;; மட்டும் எதுவும் குடிக்கவில்லை. நாங்களும் வற்புறுத்தவில்லை. ஜே.வி.பி அங்கத்தவர்கள் குடிக்கக் கூடாது என கட்டுப்பாடு இருப்பதாக குணதாச சொன்னதாக நினைவு. ராகவனின் சமையலை எல்லோரும் ரசித்து சாப்பிட்டோம்.

நாச்சிமார்கோயில் எரிப்பு

பதிவுத்திருமணத்தை சனிக்கிழமை மதவாச்சியில் நடத்துவதென்று நிச்சயம் செய்தபடியால் வெள்ளிக்கிழமை விடுப்பு எடுத்துக் கொண்டு யாழ்ப்பாணம் சென்றேன். யாழ்தேவியில் கூட்டம் அதிகமில்லாதபடியால் மூலை ஆசனம் கிடைத்தது. கண்ணை மூடிக்கொண்டு சித்திராவை நினைத்தேன். மனதை நினைவுகள் சுகமாக வருடின. யாழ்தேவி வவனியாவில் நின்றபோது சிறிது கூட்டம் ஏறினாலும் எனது கனவுகள் கலைக்கப்படவில்லை.

ஏழு மணியளவில் சிறிது பசியெடுத்ததும் எனது கனவுகளை நிறுத்திவிட்டு நாளை நடப்பதை யோசிப்பது என முடிவு செய்தேன். அம்மாவையாவது மதவாச்சிக்கு கூட்டிக் கொண்டு வர வேணும். அப்பு வர மறுக்கலாம். இதைவிட எனக்கு மச்சாள் முறையான பார்வதியிடம் எல்லாவற்றையும் சொல்ல வேண்டும். மச்சாள் என்றாலும் அக்கா என்று தான் கூப்பிடுவேன். அவருக்கும் எனக்கும் எட்டு வயது வித்தியாசம். எனக்குப் பன்னிரண்டு வயதாக இருக்கும் போது பார்வதி அக்காவுக்கு திருமணம் பேசினார்கள். சொந்த மச்சான். கொழும்பில் கடை முதலாளி. ஆனால் ஆள் அட்டைக்கரி. அத்துடன் ஆரம்பப் பாடசாலைக்கு மேல் போனதில்லை. பார்வதி அக்கா உயர்தர வகுப்பு படித்தவர் அல்லாவிட்டாலும்; கல்கியையும் ஜெயகாந்தனையும் விமர்சிக்கும் அளவு அறிவு உள்ளவள்.

சொல்லப்போனால் இலக்கியத்தில் பார்வதி அக்காவே எனக்கு ஒரு விதத்தில் குருமாதிரி என்று கூடச்சொல்லலாம்.

இன்றும் அந்த சம்பவம் பசுமையாக இருக்கிறது. நான் பார்வதி அக்காவின் தம்பி ரமணனுடன் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தேன்.

வீட்டுக்குப் பின்னால் குப்பை அள்ளிக் கொண்டிருந்த அக்கா என்னை 'டேய் தம்பி' என அழைத்தாள்.

'என்னக்கா', என பின்பக்கம் சென்றேன். முகத்தில் கவலையின் ரேகை படர்ந்திருந்தது.

'உனக்கு விசேஷம் தெரியுமா?'

'என்ன', என்றேன் ஆவலுடன்.

'எனக்கு கல்யாணம் பேசி இருக்கு. யார் தெரியுமா?'

'யாரு'

'மணியத்தார். உனக்குத் தெரியாது. அட்டைகரி நிறம். சொந்தம்தான் ஆனால் எட்டாம்; வகுப்போடை கொழும்பில் கடை வைத்திருக்கிறார்.'

'சரி அக்கா. குணம் எப்படி? மேலும் உன்னில் அவருக்கு விருப்பமா?' என பெரிய மனித தோரணையில் கேட்டேன்.

'டேய் குணம் யாருக்குத் தெரியும்.? அவர்கள் சீதனம் வேண்டாம். எல்லாச் செலவும் தாங்கள் செய்வதாக கூறியிருக்கிறார்கள்.'

'குடிவெறி எப்படி?'

'அந்தப்பழக்கம் இல்லை என்றுதான் கேள்விப்பட்டேன்'.

'அக்கா பிறகென்ன. நீ விரும்பும் குதிரையை விட உன்னை விரும்பும் கழுதை மேலானது என சொல்வார்களே'.

'அதுசரி, அவர்கள் தெற்கத்தையார்'

'அதென்ன தெற்கத்தையர்?'

'அது உனக்குத்தெரியாது. பெரிய கதை. அந்தக்காலத்தில் வடக்கு பக்கத்தில் உள்ள பெண்ணை சோனகர் ஒருவர் முடித்து அதன்பின் தெற்குப் பக்கத்தில் இருந்ததால் நாங்கள் தெற்கு பக்கத்தில் வசிப்பவர்கள் எல்லோரையும் சோனகர் என்று கூறுவோம்.'

'இதை நீ பெரிதாக நினைக்கிறாயா?'

'எனக்கு இது பெரிய விடயம் இல்லை. ஆனாலும் யாருக்கும் சொல்லி ஆற வேண்டும் என்று நினைத்தேன்.'

'அப்ப கல்யாணத்துக்கு ஓம் சொல்லு'.

'சரி'

இந்த உரையாடல் என் மனதில் இன்றும் பசுமையாக வருகிறது. என்னை மதித்து என்னோடு முதன்முதல் பேசிய ஆள் பார்வதி அக்காதான். எனக்கு ஒரு கெப்புறு, பார்வதி அக்காவின் கல்யாணம் நடந்ததற்கு நான் தான் காரணம் என்று. இதற்கு இன்னும் ஒரு காரணம் உண்டு.

பார்வதி அக்காவிற்கு கல்யாணம் நடக்க நிச்சயித்த முதல்நாள் அக்காவின் தங்கச்சி கலாவுக்கு வயித்தாலே அடியும் சத்தியும். நயினாதீவு ஆஸ்பத்திரியில் அனுமதித்து விட்டார்கள். முதல் நாள் இரவு அவளோடு மாமி இருந்தாள். கல்யாணத்தன்று பார்வதி அக்காவின் தம்பி ரமணன் அல்லது நான் நிற்க வேண்டும். ரமணன் மாப்பிள்ளை தோழன் ஆனபடியால் அன்று இரவு கலாவுக்கு நர்ஸாக நான் மாற வேண்டியிருந்தது.

அந்தக்கல்யாணம் நான் பார்க்க இருந்த முதல் கல்யாணம். எனக்கு நினைவு தெரிந்த பின் நடக்கும் முதல் கல்யாணம். பல கற்பனைகள் என் மனதில் இருந்தன. கல்யாண வீட்டில் கட்டிய பலூன்களை உடைக்கவும், வண்ண வண்ண கலர் காகிதங்களை இழுக்கவும் வேண்டும். எனக்கு பிடித்தமான சினிமா ரெக்கோட்டுகளை போடும்படி கேட்கவேண்டும் என ஏராளமான திட்டங்கள் வைத்திருந்தேன். எல்லா திட்டங்களையும் சுக்கு நூறாக்கிய கலாவை அன்று இரவு திட்டியபடியே இருந்தேன். கலாவுக்கு 'அவியல்' என பட்டப்பெயர் உண்டு. அதை ஆயிரம் தடவையாவது சொல்லி இருப்பேன். ஏழு வயதானாலும் வாய்க்காரியானவள். அன்று இரவு வயித்தால் அடித்ததால் ஒன்றும் பேசாமல் திருதிருவென முழித்ததை நினைத்தால் இன்றும் சிரிப்பு வருகிறது.

இந்த காரணத்தால் அக்காவுக்கு என்னிடம் வாரப்பாடு. தன் கல்யாணம் நடக்க நான் தான் காரணம் எனப் பலதடவை சொல்லி இருக்கிறாள்.

இப்படி பழைய நினைவுகளை இரைமீட்டிக் கொண்டு இருந்த போது கொக்குவில் ஸ்ரேஷன் வந்துவிட்டது. இறங்கியபோது எனக்காக தம்பி ரவி காத்துக்கொண்டு இருந்தான். அம்மா கஷ்டப்படுத்தி அனுப்பியிருக்க வேண்டும். ஒரு முறை பல்கலைக்கழக புகுமுக வகுப்பு பரீட்சை எடுத்து சித்தியடையவில்லை. மீண்டும் எடுக்கும்படி வற்புறுத்தினால் தரப்படுத்தலையும் மாவட்ட அடிப்படை தேர்வையும் கடந்து தான் பல்கலைக்கழகம் போகமுடியாது என்றும் வெளிநாடு போவதாக சொல்லிக்கொண்டு படு பிஸியாக ஊர் சுத்துவான். நான் பல்கலைக்கழகம் போனது இந்த தடைகளை கடந்து தானே என்றால் அது ஐந்து வருடத்துக்கு முன் என்பது அவன் பதில்.

ரவியின் சைக்கிளில் ஏறி அவனது பாரில் இருந்து கொண்டு 'என்ன செய்கிறாய்' என்றேன்.

'குதிரை ஓடுகிறேன்.'

'என்னடா குதிரை.'

'எனது நண்பனுக்காக பு.ஊ.நு எடுக்கிறேன். ஐந்து கிரெடிட்டிற்கு மேல் எடுத்தால் நாலாயிரம் ரூபாய் தருவான். இதை வைத்துக் கொண்டு வெளிநாடு போவேன்.'

'பிடிபட்டால் என்ன செய்வாய்?'

'பிடிபட மாட்டேன்.'

'அப்புவிற்கு தெரியுமா? தெரிந்தால் உதைபடுவாய்,'

'நாலாயிரம் ரூபாய்க்காக உதைபடலாம்', என்றான் யதார்த்தமாக.

'உதை ஒருபுறம். நீ அரசாங்கத்தை ஏமாற்றுகிறாய்.'

'அரசாங்கம் முழு இனத்தையும் ஏமாற்றுகிறது. ஏன் உங்களை ஏமாற்றவில்லையா? உன்னிலும் குறைந்த மார்க் வாங்கியவர்கள் மருத்துவம் படிக்க போனபோது நீ மிருக வைத்தியம் படித்தாயே? அது உன்னை ஏமாற்றிய விடயம் இல்லையா?'

'சரி, சரி அதை விடு. நீ உன்னை ஏமாற்றுகிறாய்.'

'இல்லை நான் ரிஸ்க் எடுத்து உதவி செய்கிறேன்.'

'அப்படியா? உனது ஐந்து கிரடிட்டுக்களை வைத்து அவன் என்ன செய்யப்போகிறான்.?'

'பாங்கில் வேலை எடுப்பான்.'

'அப்ப பாங்க் நல்லாத்தான் வரும்.' எனக் கூறியபடி சைக்கிளை விட்டு இறங்கி வீட்டுக்குள் சென்றேன்.

அம்மாவின் கொஞ்சும் படலம் முடிந்து சாப்பாட்டிற்கு முன்பு குளிப்பதற்கு கிணற்றுக்கு சென்றேன்.

இரவு ஒன்பது மணிக்கு மேல் ஆனதால் தண்ணீர் குளிராக இருந்தது. இரயில் பயணத்தில் வேர்த்த உடலுக்கு அந்தநீர் இதமாக இருந்தது. ஒவ்வொரு வாளி தண்ணீரும் தலையில் இருந்து பின் தோளில் தழுவி உடலில் விழும்போது அழகிய பெண்ணின் அரவணைப்புக்கு சமனாக இருந்தது. இரயில் பிரயாணத்தின் பின் குளிப்பது மசாஜ் செய்வது போன்ற அநுபவம். இது யாழ்ப்பாணத்துக்கு மட்டும் பிரத்தியேகமான வசதியாகும். வேறு எங்கும் நான் இவ்வளவு கிணறுகளை கண்டதில்லை.

சாப்பாட்டுக்கு புட்டுடன் நண்டுக்குழம்பு இருந்தது. அம்மாவுக்கு தெரியும் நண்டு எனக்கு விருப்பமானது என்று. அமாவாசைக் காலம் நண்டு சாப்பிடுவதற்கு நல்ல சதையுடன் சினையுடனும்

இருக்கும். அந்த சினையை உடைத்து புட்டுடன் கலந்து சாப்பிடுவேன். இன்று நண்டுக்கறியும் முருங்கக்காய் வதக்கலும் எனக்கு பிடித்தமாகையால் வயிறு நிரம்ப ஒரு பிடி பிடித்தேன். நண்டுக்கோதை துப்பியபடி 'அம்மா நான் உனக்கு ஒன்று சொல்ல வேண்டும் ' என்றேன்.

'என்ன?'

'நண்டுக்கறியும், முருங்கக்காயும் நன்றாக இருக்கு.'

'அதைவிடு. விஷயத்தைச் சொல்லு.'

'நான் றெஜிஸ்டர் பண்ண இருக்கிறேன். பின்பு கல்யாணத்தை வசதி போல் செய்யலாம்'.

'எனக்கு சொல்லாதே. அப்புவிடம் சொல்லு.'

அப்பு வெளியே இருந்தபடி ' என்ன சொல்லுறது.? அவன் நினைத்தபடி செய்கிறான். செய்யட்டும்' என்றார் சுருட்டுப் புகையை விட்டபடி.

அவரோடு வாதம் செய்ய விரும்பாத படியால் நண்டு கோதை சூப்பி விட்டு முருங்கக்காயை சப்பி துப்பினேன்.

சாப்பிட்டதும் சிறிது நேரம் யோசித்தேன். பின்னர் அப்புவிடம் சென்று, 'அப்பு' என அழைத்தேன்.

'ம்ம்' என மீண்டும் புகை விட்டார்.

'நாளை றெஜிஸ்ரேசன் மதவாச்சியில். நீங்களும் அம்மாவும் வரமுடியுமா?'

அப்பு திடுக்கிட்டபடி, 'என்ன' அவர் குரலிலே இலேசான நடுக்கம் இருந்தது.

'மதவாச்சிக்கு நாங்கள் எப்படி வருவது?'

'இந்த விஷயத்தை கொஞ்சம் ஆறுதலாக கேளுங்கோவன் ' என்றார் அம்மா.

'நீங்கள் பத்திரமாக வந்து மதவாச்சியில் நிற்கலாம். என்னால் அதற்கு உத்தரவாதம் தரமுடியும் யாழ்ப்பாணத்தில் சித்திராவின் தாய்தந்தையருக்கு என்னால் உத்தரவாதம் கொடுக்க முடியாது. அதுவும் இப்படியான தேர்தல் காலங்களில்.'

அம்மாவும், அப்புவும் மௌனமாக இருந்தார்கள்.

இவ்வளவு நேரமும் அறைக்குள் இருந்த ரவி, 'அண்ணை சொல்வதிலும் பொயின்ஸ் இருக்கு' என்றான்.

'உன்னை கேட்கவில்லை. உன்ர பொயின்சும் நீயும்.' என அம்மா எரிந்து விழுந்தாள்.

நான் சிறிது நேரத்தில் 'பார்வதி அக்கா வீட்டை போய் வாறன்' என ரவியின் சைக்கிளை எடுத்தேன்.

'இப்ப இந்த நேரத்தில்' - அம்மா.

'நீங்கள் படுங்கள். நான் வருகிறேன்.'

பார்வதி அக்காவின் படலையை திறந்து கொண்டு போன போது 'யார்' எனக் குரல் கேட்டது.

'நான் தான்'

'என்ன இப்ப வாறாய்?, எப்ப வந்தனி மதவாச்சியிலிருந்து.'

'இப்பதான்.'

பார்வதி அக்கா குடும்பகாரி. நாலு பிள்ளைகள். இரண்டு ஆண்கள். இரண்டு பெண்கள். அக்காதான் இங்கு குடும்பத்தைப்; பார்க்கிறது. கணவர் கொழும்பில்.

'அக்கா குருமான்கள் எல்லாம் நித்திரை போலும். சத்தத்தை காணவில்லை?.'

'எல்லாம் படுத்து விட்டது. நானும் படுக்கத் தயார்.'

'இப்பதானே பத்து மணி'

'நாலுக்கும் சாப்பாடு சமைச்சு போடவே உடம்பு களைக்கிறது.
மேலும் உன்னைப் பற்றி விஷேசம் கேள்விப்பட்டேன். உண்மையா?'

'என்ன விஷேசம்?'

'உனக்கும் ஒரு சிங்கள பெட்டைக்கும் கல்யாணம் என்டுதான்.'

'யார் சொன்னது?'

'மலிஞ்சா சந்தைக்கு வரும் தானே' என்றார் நமுட்டுச்சிரிப்புடன்.

அதே நேரம் அக்காவின் குட்டிப்பூனை விசேடமான குரலில் கத்தியது.

'என்னக்கா, குட்டி இப்படி கத்துகிறது?'

'அதை விடு. இது சினைக்காலம். குட்;டி மாப்பிள்ளை தேடுது.'

'குட்டிக்கு எத்தனை வயது.'

'எட்டு மாதம் ஆகிறது'

' அக்கா எனக்கு இருபத்தைந்து வயதாகிறது,' என சிரித்தேன்.

'பூனைகளையும் நாய்களையும் வைத்தியம் பார்த்து பார்த்து இப்ப அதுதான் உனக்கு கதையாக போச்சுது.'

'அதுதானே எனக்கு சாப்பாடு போடுகிறது.'

'சரி பெட்டைக்கு என்ன பெயர்?'

'சித்ரா. ஒரு மாதத்தின் பெயர்.'

'எப்படி வடிவா? என்றவள் மீண்டும் 'வடிவில்லாவிட்டால் நீ எப்படி விழுவாய்.? மாமா என்னவாம். குதிப்பாரே. எப்படி சமாளிக்கப் போகிறாய்?'

'யாழ்ப்பாணத்தில் குடித்தனம் நடத்தமுடியாது என அப்பு சொல்கிறார். ஆனால் அவருக்கு தெரியவில்லை யாழ்ப்பாணத்தில் இருந்த சனம் எல்லாம் வெளிநாடுதான் போகிறது. நான் தமிழ் பெட்டையை முடித்தாலும் இங்கே சீவிக்கலாம் என்று நினைக்கவில்லை. இங்கு வேலை வெட்டி இல்லாமல் கிடக்கிற காலமா இது. எதற்கும் அப்புவுக்கு எடுத்து சொல்லு. நான் நாளைக்கு பதவியாவில் ரிஜிஸ்டர் பண்ணுகிறேன். நேரம் காலம் சரியா வந்தா பின்பு முறைப்படி கல்யாணம் செய்யலாம்.'

'ஏன் அவசரப்படுகிறாய்.?'

'எனக்கு அவசரமில்லை. அவளுடன் மதவாச்சியில் பேசிப் பழகுவதைச் சிலபேர் அசிங்கமாக பேச இடம் கொடுக்கக் கூடாது என்று தான். மேலும் சிக்கல் உள்ள விஷயத்தை பின் போட்டால் மேலும் சிக்கலாகும் என்பது என் கருத்து.'

'யாழ்ப்பாணத்தில் இருந்து யாரையாவது எதிர் பார்க்கிறாயா?'

'இல்லை. இந்த சூழலில் நான் எதிர்பார்க்கவில்லை. நீதான் எடுத்து சொல்ல வேண்டும்.'

'நான் சொல்லிப் பார்க்கிறேன். உனக்கு ஏதாவது காசு தேவையா?'

'நீ கேட்டதே எனக்கு பத்து லட்சம் தந்தது மாதிரி. நான் கிளம்புகிறேன்' என வெளியேறினேன்.

நான் சைக்கிளை தள்ளியபடி கேற்றால் வரும் போது என்னுடன் அக்காவும் வந்தாள். அப்போது கொக்குவில் ஸ்ரேசன் ரோட்டில் வேகமாக பல வாகனங்கள் சென்றன. இதன் பின்னால் ஏராளமான சைக்கிள்களும் வந்தன.

ஒருவரிடம் 'என்ன நடந்தது' என்றேன்.

'ஆமி சுடுகிறான்கள்' என குழறியபடியே சென்றார். பம்பலாக ஓடி வந்த சைக்கிள்களுக்கு பின்னால் ஆண்களும் பெண்களுமாக பலர் ஓடி வந்தனர். அதில் ஒருவர் சிறிது விபரமாக கூறுவதற்கு எங்கள் ரோட்டில் நின்றார். 'நாச்சிமார் கோயில் முன்னால் நடந்த கூட்டத்தில் பொடியள் இரண்டு பொலிசாரை சுட்டுக் கொன்று போட்டார்கள். ஆமி வந்து எல்லோரையும் அடித்துக் கொண்டிருக்கிறான்கள். நாச்சிமார் கோயிலையும் கொழுத்து கின்றார்கள். '

'அறுவான்கள் கோயிலைக் கொழுத்துறான்களோ' என்றாள் அக்கா.

'நீங்கள் எங்கே போகிறீர்கள். வீட்டை வந்து இருந்து விட்டு ஆறுதலாக போங்கோ.' என்று செய்தி சொன்னவரை அழைத்தேன்;.

'நான் திருநெல்வேலிதான் போயிடலாம்.'

'சரி தண்ணீரை குடித்து விட்டு போங்கள்' என அக்கா உள்ளே சென்று செம்பில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

அவர் குடித்துக்கொண்டு இருக்கும் போது 'யார் கூட்டத்தில் பேசியது' என்றேன்.

'தமிழர் கூட்டணி தலைவர் சிவசிதம்பரம் பேசும் போது சூடு கேட்டது'

'யார் சுட்டது அண்ணை.'

'யாருக்கு தெரியும்  புலி என்கிறார்கள். ஆமிதான் சுட்டாங்களோ யாருக்கு தெரியும்.'

'நன்றி' என கூறி விட்டு ஓட்டமும் நடையுமாக சென்றார் அந்த ஐம்பது வயது மதிக்கத்தக்க அந்த மனிதர்.

'நீ கொஞ்சம் இருந்து விட்டு போ' என மறித்தாள் அக்கா.

'இல்லை. ஒழுங்கையால் செல்வேன்' எனக் கூறிவிட்டு இருளாகக் கிடந்த சிறு ஒழுங்கைகள் வழியாக வீட்டுக்கு சென்றேன்.

வீடு வந்து சேர்ந்த போது அம்மா ஒரு கதிரையை போட்டுக்கொண்டு வாசலில் இருந்தாள். 'ஏன் இவ்வளவு நேரம். ஆமி அடிக்கிறான்' என்றாள்.

'நான் ஒழுங்கையால் வர லேட்டாகிவிட்டது.  உங்களுக்கு யார் சொன்னது?'

'ரவி அங்கிருந்து தான் வந்தான்.'

'சரி நான் படுக்கப் போகிறேன். நாளைக்கு மதவாச்சி போகவேண்டும்.'

'நிலைமை இப்படி இருக்க நீ போகப் போகிறாயா தம்பி',

'நான் போகாமல் எப்படி இருப்பது?'

அப்பு விறாந்தையில் படுத்திருந்தபடி, 'அவன் எதைக் கேட்டான் நீ சும்மா இரு' என்றார்.

அப்புவோடு கதைக்காமல் இருப்பது மேலானது என நினைத்து விறாந்தையில் பாய் விரித்து படுத்தேன். சிறிது நேரத்தில் அம்மா வந்து நெற்றியில் திருநீறு பூசிவிட்டு என் மேல் போர்வையை போட்டுவிட்டு சென்றாள்.

*நூலக தகனம்*

*காலை நேரத்துடன் எழுந்து விட்டேன் என்று சொல்வதை விட நித்திரை கொள்ளவில்லை என்பதே பொருத்தமானது. அம்மா தந்த கோப்பியைக் குடித்து விட்டு கொக்குவில் ஸ்ரேசனில் ரயில் ஏறி விட்டேன்.*

*மதவாச்சி ரயில் நிலையத்தில் எனக்காக காமினி மோட்டார் சைக்கிளில் எதிர்பார்த்துக் கொண்டுஇருந்தான். இருவருமாக விடுதிக்கு சென்று விட்டு அங்கிருந்து பதவியா சென்றோம். மனதில் பல நினைவுகள் ஆக்கிரமித்தபடியால் காமினியிடம் சைக்கிள் ஓட்டும் பொறுப்பை விட்டு விட்டேன்.*

*கெப்பிற்றிகொல்லாவ வரை எதுவும் பேசவில்லை.*

*எனது மௌனம் காமினிக்குப் பொறுக்கவில்லை.*

*'வீட்டில் என்ன நடந்தது?'*

*நான் வீட்டில் நடந்த விடயத்தையும் ஆமிக்காரர் கோயில் எரித்த விடயத்தையும் கூறினேன்.*

*'ஆமிக்காரர் இவ்வளவு கீழ்த்தரமானவர்களாகப் போய் விட்டார்கள். வழிபாட்டுத்தலங்கள் அழிக்கப்பட்டால் நூறு ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் மக்கள் மறப்பதில்லை. தற்போது கூட அநுராதபுரத்தில், பொலநறுவையில் தென் இந்திய அரசர்களால் விகாரைகள் இடித்து நொறுக்கப்பட்டன எனக் கூறி இனக் கலவரத்தைத் தூண்டுகிறார்கள்.'*

*'நீ சொல்வது உண்மை. இந்தியாவில் நானூறு ஆண்டுகளுக்கு முன் நடந்த கதையைச் சொல்லி தற்போதும் அரசியல் நடத்துகிறார்கள். பாமர மக்களின் மதப்பற்றை இலகுவாக வெறியாக மாற்றலாம்.*

எமது அரசியல் வாதிகள் இதில் கைதேர்ந்தவர்கள். எனக்குத் தெரிந்தவரை இலங்கையில் எல்லோரும் படிப்படியாக மனிதத்தன்மையையும், மனிதாபிமானத்தையும் இழந்து கொண்டிருக்கிறார்கள்;.'

'அப்படி மொத்தமாகச் சொல்லக்கூடாது.'

'எனக்கு பாலைவனத்தில் பயணம் செய்வது போன்று இருக்கிறது.'

'நாளைக்கு ரிஜிஸ்ரேசன். எனவே சந்தோஷமாக இருக்க வேண்டும்' என்று கூறியபடி சித்ராவின் வீட்டுக்கு முன் மோட்டார் சைக்கிளை நிறுத்தினான்.

சித்ராவின் குடும்பத்தவர் பலரும் நின்றனர். எல்லோரினது முகத்திலும் சந்தோஷம் தெளிவாகத் தெரிந்தது. சித்ராவின் கன்னத்தில் ஒரு குழி உண்டு. அது அவள் நிறைந்த மகிழ்ச்சியுடன் இருக்கும் போது மட்டும் வெளித்தெரியும். அந்த குழியைக் கண்டதும் என் மனதில் உள்ள சோக நினைவுகள் கரைந்து விட்டன. சித்ரா எனது கையைப் பிடிக்கும் போது அந்தரத்தில் மிதப்பது போல இருந்தது. உடையலங்காரம் எதுவும் விசேடமாக இல்லை. மேலே சட்டையும் கீழே பூப் போட்ட துணியால் தன்னை சுற்றியிருந்தாள். அவளை புகழ் பெற்ற சிகிரியா சுவரோவியமாகக் காட்டியது.

வாயால் பதில் சொல்லக்கூடிய நிலையில் நான் இல்லாததால் அவளது கையை அழுத்திப் பிடித்து விட்டு பிரிந்து கொண்டேன்.

தாயார் வழக்கம் போல் யாழ்ப்பாணத்துப் புதினங்களை விசாரித்தபோது நான் எதுவும் கூறவில்லை. சில விடயங்களை தணிக்கை செய்வது சில காலங்களில் நல்லது. இல்லாவிட்டால் தேவை இல்லாமல் கவலைப்படுவார்கள். மேலும் அவர்கள் கவலைப்படுகிறார்கள் என்று அவர்களுக்காக நாங்களும் கவலைப்படவேண்டும்.

சித்ராவின் தகப்பனார் நாளைக்கு ரிஜிஸ்டார், வைபவத்துக்கு காலை பத்து மணிக்கு வருவதாக கூறினார்.

நண்பன் ஒருவனை பார்த்து விட்டு வருவதாக சொல்லி கொண்டு ருக்மனும் காமினியும் சென்றுவிட்டார்கள்.

'சித்ரா மோட்டார் சைக்கிளில் ஏறு' சைக்கிளில் ஏறியவள் வழக்கத்திலும் பார்க்க இறுக்கமாக இடையை பிடித்தபடி 'எங்கே போகிறோம்' என்றாள்.

'இப்படி கட்டிப் பிடித்தால் எங்கேயும் என்னால் போக முடியாது. ஏனென்றால் என்னால் சைக்கிள் ஓட்ட முடியாது.'

'அப்ப சரி பிடிக்கவேயில்லை' என்றபடி இறங்குவதாக பாவனை செய்தபோது மோட்டார் சைக்கிளில் அக்சிலேட்டரை அழுத்தினேன். வேறு வழியில்லாமல் என்னை மீண்டும் அணைத்து பிடித்தாள்.

'சித்ராக்குட்டி'

எதுவித சத்தமும் வரவில்லை.

'மீண்டும் என்னுடன் கோவமா?'

'ம்'

'சரி என்னோடு பேசமாட்டாயா?'

பதவியாக் குளத்தருகில் மோட்டார் சைக்கிளை நிறுத்தினேன். மீண்டும் சித்ராவை சீண்டும் நோக்கத்துடன், 'நான் சைக்கிளில் வரும்போது இரு குழிகள் கண்டேன். இப்போது நீ சிரித்தால் கன்னத்தில் விழும் குழியை காணவில்லை' என்றேன்.

'சரி மற்றது எந்த குழி'

அவளுடைய நாபிக்குழிகளை எனது விரலால் காட்டினேன்.

'போங்க' என்று இரு கைகளாலும் தன் இடையை மூடினாள். அவளும்; நானும் எதுவும் பேசவில்லை. மதிய சூரியன் மறைந்து சந்திரன் வரும் வரையும் அங்கிருந்தோம். வார்த்தைகள் பரிமாறப்படாவிட்டாலும் இருவருக்கிடையில் மின்சாரம் உயர் அழுத்தத்தில இருந்து தாழ் அழுத்தத்துக்கு பாய்வது போல் மாறிமாறிப் பாய்ந்து கொண்டிருந்தது. காதல் உணர்வின் அத்திவாரத்தில் மனித உறவுகள் கட்டப்படுகின்றன என ஏதோ புத்தகத்தில் படித்தது நினைவுக்கு வந்தது. காதல்

காமத்துக்கு அலங்காரம் செய்கிறது. அங்கே கலைவடிவம் பெறுகிறது. சுரமும் சத்தமும் எவ்வளவு பேதமாக தெரிகிறது. அதே போல் காதலும், காமமும் வேறுபடுகிறது.

இருவரும் வீடு செல்லும்போது மணி ஏழு ஆகிவிட்டது. விசேஷமாக சித்ராவின் வீட்டில் பெற்றோமக்ஸ் விளக்கு விசேஷமாக எரிந்தது. இதனால் ஒளிவெள்ளம் பரவியது. வயல் பிரதேசமாகையால் ஏராளமான பூச்சிகள் பறந்து தங்கள் உயிரை பெற்றோல்மக்ஸ் அருகில் மாய்த்தன. ருக்மனும் காமினியும் பெற்றோருடன் காத்திருந்தனர். சாப்பாடு தயாராக இருந்தது. உணவருந்தும் போது நாம் பல விடயங்களைப் பற்றி பேசினோம்.

நான் அரசியலைப் பற்றி பேச முற்பட்டபோது காமினியும் ருக்மனும் பேச்சை வேறு திசையில் இட்டுச்சென்றனர். இது எனக்கு விசித்திரமாக இருந்தாலும் நான் பொருட்படுத்தவில்லை. சாப்பிட்டு முடிந்தவுடன் வீட்டின் முற்றத்துக்கு வந்தேன். அங்கு கலர் கலராக வண்ணக்கடதாசிகள் தொங்க விடப்பட்டிருந்தன. நானும் சித்ராவும் பதவியா போய் இருந்தபோது காமினியும் ருக்மனும் இந்த அலங்காரம் செய்திருக்க வேண்டும்.

'காமினி, என்ன முகம் நல்லா இல்லை' என்னை பின்தொடர்ந்து முற்றத்துக்கு வந்தபோது, அவனிடம் கேட்டேன்.

'ஒன்றுமில்லை.'

'யாழ்ப்பாணம் நூல் நிலையத்தை இரவு ஆமியும் பொலிசும் சேர்ந்து கொழுத்தி விட்டார்களாம்.' என கரகரத்த குரலில் ருக்மன்; கூறினான். எனக்கு தலையில் இடி இறங்கியது போல் இருந்தது.

'யார் சொன்னது.'

'வவனியாவில் இருந்து வந்த ஜே.வி.பி தோழர்கள் மூலம் எமக்கு செய்தி வந்தது. .' என்றான்; ருக்மன்;.

எனக்கு அதற்கு மேல் எதுவும் பேசமுடியவில்லை. உடல் முழுவதும் வித்தியாசமான விபரிக்கமுடியாத உணர்வுகள் எழுந்து தொண்டையில் கட்டியாகவும் நெஞ்சில் ஆத்திரமாகவும் வயிற்றில் அருவருப்பாகவும் இருந்தது. இதைதான் சீனப் பாரம்பரிய மருத்துவத்தில் மன உணர்வுகள் உடல் உறுப்புகளை பாதிக்கும் என கூறுவதோ.? பக்கத்தில் இருந்த கதிரையில் அமர்ந்தேன். பலநிமிடநேரம் எதுவும் பேசவில்லை.

'மிகவும் கீழ்தரமான வேலை' எனக் கூறி மௌனத்தை கலைத்தான் காமினி.

'நேற்று இரவு மந்திரிகள் காமினி திசநாயக்க மற்றும் சிறில் மத்தியூ யாழ்ப்பாணம் சென்றார்களாம்' என்றான் ருக்மன்;.

'உண்மையாகவா?'

'ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கமே இதற்கு முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்' என்றான் ருக்மன்; ஆத்திரமாக.

'இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பிரிட்டன் மேல் குண்டுமாரி பொழிந்த ஜெர்மனிய விமானப்படைக்கு ஒக்ஸ்போட், கேம்பிரிஜ் ஆகிய பல்கலைக் கழகங்களின்மீது குண்டு போடக்கூடாது என கட்டளை இடப்பட்டிருந்ததாம். ஹிட்லர் பிறப்பித்த கட்டளை.. அப்படி பார்க்கும் போது காமினி திசநாயக்க ஹிட்லரையும் மிஞ்சி விட்டார்.'

'யாழ்ப்பாணத்தவர் படிப்பதற்கு யாழ்ப்பாண நூலகம் காரணம் என நினைத்துக்கொண்டு இதை செய்திருக்கிறார்கள்' என்றான் ருக்மன்;.

'இது மிகவும் தவறான காரணம். இதை வைத்துத் தான் தரப்படுத்தல் முறையை கொண்டு வந்தார்கள்;. இதன் விளைவாக விடுதலை இயக்கங்கள் தோன்றின. நன்றாகப் படித்த மாணவர்களுக்கும் ஆயதப் போராட்டத்தில் நம்பிக்கை வந்தது. படிக்காதவர்கள் கூட நான் படித்து என்ன பயன் என கூறிவிட்டு இயக்கங்களில் சேர்ந்து கொள்கிறார்கள்.இப்படி இரண்டு பகுதியாரும் இயக்கங்களில் இணைந்து கொள்கிறார்கள். இரண்டாவது பகுதியை சேர்ந்த இளைஞர்கள் ஆரம்பத்தில் சேர்ந்து இயக்கங்களில் தலைமைப்பதவிகளில் இருக்கிறார்கள். இப்பொழுது நூலக எரிப்பு போன்ற விஷயங்கள் சகலரையும் ஆயுதபோராட்டத்தை நோக்கித் தள்ளி விடுகிறது. இப்படியான சம்பவத்தினால் ஆயுதப் போராட்டம் ஏற்படும்போது அதில் வேகமும் விரோதமும் பழி வாங்கும் தன்மையும் மேலோங்;கும். விவேகம் மனிதாபிமானம் இருக்காது. அப்போது அரசாங்கம் மட்டுமல்லாது மொத்தமாக நாடே கீழ் தள்ளப்படும். இதை விட யாழ்ப்பாணத்தினர் படிக்கிறார்கள் என்பது பொய்யான பிரசாரம். கண்டியில் வசிப்பவர்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினால் அவர்கள் இங்கு படிக்க வேண்டும். எமது மண்ணில் வளமில்லை. கண்டியில் அரை ஏக்கர் நிலத்தில் மிளகு வளர்த்தால் டாக்குத்தர், என்ஜினியரின் வருமானத்தை பெறலாம். நான் பிறந்து வளர்ந்த மண்ணில் பல ஏக்கர் நிலம் எமக்கு சொந்தமாக உண்டு. ஆனால் நல்ல தண்ணீர் இல்லை. எனவே படிக்க வசதி இருப்பவர்கள் படிக்கிறார்கள். இல்லாதவர்கள் தென்னிலங்கைக்கு வியாபாரம் செய்வதற்காக செல்கிறார்கள். இதைவிட இலங்கையில் சகல பொருளாதார நடவடிக்கையையும் கொழும்பை மையமாக வைத்து நடைபெறுவதால் தமிழர் தென்னிலங்கை போகிறார்கள். இது அரசாங்கத்தின் தவறு '.

'ஒன்றுக்கும் பயப்படத்தேவையில்லை. தோழர் விஜேவீரவின் ஆட்சி வந்தால் எல்லாம் சுமுகமாக நடக்கும்' என்றான் ருக்மன் நம்பிக்கையுடன்.

'ருக்மன்;, இவ்வளவு இனத்துவேசம் உருவாகிய பின் எவராலும் எதுவும் செய்யமுடியாது. நீயும் விஜேவீரவுடன் சேர்ந்து கனவு காண்கிறாய்' என்றேன் விரக்தியுடன்.

'சரி சரி சாப்பிடுவோம்.' என உள்ளே அழைத்துச்சென்றான் காமினி.

அருமையான சாப்பாடு. ஆனால் என்னால் சாப்பிட முடியவில்லை. சித்ரா எதுவும் பேசவில்லை. நான் நினைக்கிறேன் அவளுக்கும் விஷயம் தெரிந்திருக்க வேண்டும்.

சாப்பாடு முடிந்தபின், 'நாளைக்கு எல்லோரும் சீக்கிரம் எழும்ப வேண்டும். படுக்க போங்கள்' என சித்ரா கூறினாள் காமினி சிரித்தபடி 'தங்கச்சிக்கு அவசரம்' என கூறிய படி ருக்மனை அழைத்துக்கொண்டு சென்றான்.

தங்கப்பல் ரகசியம்

திருமணப்பதிவு காலை பத்துமணியளவில் நடந்தது. வீட்டின் முன்பக்கத்தில் மாமரத்தின் கீழ் மேஜை வைக்கப்பட்டு மஞ்சள் துணி விரிக்கப்பட்டிருந்தது. சுற்றி பல கதிரைகள் வரிசையில் போடப்பட்டிருந்தன. சித்ரா வேலை பார்க்கும் பதவியா மகா வித்தியாலயத்தின் கதிரைகள் என நினைக்கிறேன். ருக்மனின் நண்பர்கள், சித்ராவின் பாடசாலை ஆசிரியர்கள் உட்பட ஐம்பது பேருக்கு மேல் இருக்கும். ருக்மனின் நண்பர்கள் ஜேவிபி கட்சியின் பதவியா பிரதேச உறுப்பினர்கள் என நினைத்தேன்.

சில மாதங்களுக்கு முன்னர் சிறிபுர பகுதியில் பண்ணையில் கோழிகள் இறப்பதாக எனக்கு தகவல் வந்தது. நான் பண்ணைக்குச் சென்று இறந்த கோழிகளை வெட்டிப்பார்த்து மற்றைய கோழிகளுக்கு தடுப்பூசி போட்டேன். பண்ணையில் மூன்று இளைஞர்களும், மூன்று பெண்களுமாக ஆறு பேர் இருந்தார்கள். ஒருவரும் அதிகம் பேசவில்லை. இளைஞர்கள் எல்லோரும் தாடி வைத்திருந்தார்கள். பேசிய சிங்களத்தில் இருந்து கண்டியை சேர்ந்தவர்கள் என அறிந்து கொண்டேன். என்னுடன் வந்த சமரசிங்க 'சேர், இவர்கள் சேகுவேராகாரர்' என்று கூறியது நினைவுக்கு வந்தது.

பல இளைஞர்கள் ஜேவிபியில் சேர்ந்தும் குடும்பங்களை விட்டு விலகுவதும் மட்டுமல்லாமல் வேறு இடங்களுக்குச் சென்று அரசியல் வேலைகளில் ஈடுபடுவதும் வழக்கமாகும். இதை விட நகரங்களைச்

சேர்ந்தவர்கள் கிராமத்திற்கும், கிராமங்களைச் சேர்ந்தவர்கள் நகரத்திற்கும் செல்வார்கள். மாசேதுங்கின் வழி வந்த இந்த சிந்தனை அக்காலத்தில் பல நாடுகளில் இருந்தது. கம்போடியாவில் 'இயர் சீரோ' என்பது இதனது தீவிரமான வெளிப்பாடாகும்.

திருமணப் பதிவின் பின் சிறிய விருந்தொன்றில் பாடசாலை அதிபர் வாழ்த்துரை வழங்கினார். அவருக்கும் மற்றையோருக்கும் எனது உடைந்த சிங்களத்தில் நன்றி கூறினேன்.

வந்தவர்கள் போனவுடன் சித்ராவை அழைத்துகொண்டு வவனியாவுக்கு கொரவப்பொத்தான வழியாகச் சென்றேன். இந்தவழி வவனியாவுக்கு சமீபமானதாக காட்டை ஊடறுத்துக் கொண்டு செல்கிறது. காட்டு யானைகள் ரோட்டை கடப்பதும் உண்டு. இதற்கு எதிர்மாறாக மதவாச்சி வழியாகசெல்லும் கண்டி ரோடு அகலமானது. ஆனால் ராணுவமுகாம் உண்டு. இது யானையை விட அபாயமானது. தமிழ் பிரதேசங்களில் ராணுவம் பொலிசுக்கு எதிராக ஏதாவது தாக்குதல் நடத்தினால் இராணுவத்தினர் 'உருக்'கொண்டு வண்டிகளில் வரும் தமிழர்களை சோதனை என்ற பெயரில் துன்புறுத்துவார்கள்.

வவனியாவில் சித்ராவின் தாய்தந்தையருக்கும் ருக்மனுக்கும் புதுத்துணிகள் வாங்கிவிட்டு தேன்சுரபி என்னும் தேநீர்க்கடையில் குளிர்பானம் அருந்தினோம்.

கடையின் உரிமையாளர் எனது உறவினர். இதனால் சித்ராவை அறிமுகப்படுத்தினேன். எனது விவாகப்பதிவை கூறியபோது துக்கம் விசாரிப்பது போல் கேட்டார். சித்ரா பக்கத்தில் இருந்ததால் நாகரிகம் கருதி எதுவும் விமர்சனமாக சொல்ல இடம் தராமல் விரைவாக விடைபெற்றேன்.

வயல் சார்ந்த பிரதேசங்களில் மாலை நேரத்தில் பறக்கும் சிறு பூச்சிகள் மோட்டார் சைக்கிளில் செல்பவர்களை துன்புறுத்துவது தெரிந்து மிக வேகமாக பதவியா சென்றாலும் மாலை ஏழு மணியாகி விட்டது.

தாய்தந்தையர் உணவுடன் காத்துக்கொண்டு இருந்தனர். குளித்து விட்டு சாப்பாட்டுக்கு செல்லும் போது சாப்பாட்டு மேசையில் பெட்ரோமக்ஸ் ஒளிபரப்பியது. அந்த வெளிச்சத்தில் இரண்டு போத்தல்கள் இருந்தன. ஒன்று மென்டிஸ் விசேட சாராயம் மற்றது கசிப்பு எனும் வடிசாராயம்.

'இன்று நல்ல நாள். ஏன் கசிப்பு குடிக்கிறீர்கள்? ' என சித்ராவின் தந்தையை சீண்டினேன்.

'இது கசிப்பில்லை. தங்கொட்டுவயில் இருந்து வரவழைக்கப் பட்டது'.

'தாத்தேயின் நண்பர் அனுப்பியது' என்றாள் சித்ரா.

'அப்ப நானும் குடிக்கட்டா' என்றேன்.

'தங்கொட்டுவக்கு பவர் அதிகம் உங்களுக்கு ஒத்து வருமோ தெரியாது' என சிரித்தபோது தந்தையாரின் தங்கப்பல் தெரிந்தது.

' உங்களுக்கு தங்கப்பல் உள்ளது இன்றுதான் கவனிக்கிறேன். '

'தாத்தே தங்கொட்டுவ குடித்தால் மட்டுமே தங்கப்பல் தெரியச் சிரிப்பார் ' என கூறி ருக்மனும் காமினியும் கலந்து கொண்டனர்.

'மாத்தையா உங்களது வயதாக இருக்கும் போது ஐம்பத்தியெட்டாம்; ஆண்டு இனக்கலவரம் வந்தது. நாங்கள் வேலை இல்லாமல் ஊர் சுற்றியகாலத்தில் ஒரு நாள் சேதி வந்தது. ' யாழ்ப்பாணத்தில் சிங்களவரை கொலை செய்து விட்டார்கள். மதவாச்சியில் உள்ள சிங்களவரையும் கொலை செய்துவிட்டார்கள். பதவியாவில் உள்ள சிங்களவரையும் கொல்ல வவனியாவில் இருந்து பஸ் லொரிகளில் வந்து கொண்டிருக்கிறார்கள்.' இதை கேள்விப்பட்ட நானும் எமது கிராமத்து இளைஞர்களும் தமிழர்களை எதிர்;த்து அடிப்பதற்காக வவனியாவை நோக்கி சென்றோம். வழியில் இராணுவத்தினர் எம்மை நோக்கி தடுத்து திரும்பிப் போகும்படி கூறினார்கள். நாங்கள் மறுத்தோம். இராணுவத்தினர் துப்பாக்கியால் தாக்கியபோது எனது பல்லு போனது. இவ்வாறு வதந்தியை நம்பியதற்காக நான் இப்பவும் வெட்கப்படுகிறேன்.' இப்படி தாத்தே ஒரு வரலாறு சொன்னார். அவருடைய தங்கப்பல்லுக்கு பின்னால் இப்படி ஒரு வரலாறு இருக்குமென நான் கற்பனை செய்ததே இல்லை.

' இலங்கையில் பல மரணங்களுக்கும் அழிவுகளுக்கும் இப்படி வதந்திகள் காரணமாக இருந்திருக்கிறது' என கூறியபடி உணவை உண்ண தொடங்கினேன்.

அக்சிடென்டல் ஹீரோ

அநுராதபுரத்தில் இருந்து பஸ்ஸில் வருவதற்கு, இரவு பத்து மணியாகி விட்டது. அன்று வார விடுமுறை தினம். இதனால் குணதாசா நண்பர் ஒருவருடன் மதுபானத்தால் இரத்த நாடிகளை சூடாக்கி கொண்டிருந்தார். காமினியும் ருக்மனும் அவருக்குப் பக்கத்தில் இருந்து பேசிக்கொண்டு இருந்தனர்.

என்னைப் பார்த்ததும் குணதாச 'எப்படி உங்கள் தேர்தல் கடமைகள் சுமுகமாக முடிந்ததா' என நகைச்சுவை கலந்த போதையில் கேட்டார்.

'தேர்தல் எல்லாம் நன்றாக நடந்தது. ஆனால் எனக்குத்தான் நேரம் சரியில்லை'.

'அப்படி என்ன நடந்தது' என காமினி அவசரமாக கேட்டான்;.

'அமைச்சர் மகிந்தசோமாவுடன் பிரச்சனையாகி விட்டது.'

'மகிந்தசோமா பெரிய சண்டியர் அல்லவா' என்றார் குணதாச.

நடந்தது இதுதான்.

கெக்கிராவையில் இருந்து பத்து மைல்களுக்கப்பால் உள்ள சிறு கிராமத்தில் எனக்கு சிரேஸ்ட தேர்தல் அலுவலராக நியமனம் கிடைத்தது. தார்ரோட்டு வசதியில்லாத இந்த விவசாய கிராமம் ஒரு பெரிய குளத்தின் மறுபக்கத்தில் இருந்தது.

தேர்தலுக்கு முதல் நாள் மாலையே அநுராதபுரத்தில் இருந்து இரண்டு உதவியாளர்கள், ஒரு பொலிசார், ஒரு கே.கே.எஸ் (கே.கே.எஸ் என்பது காரியாலய கம்கவே சேவக) மற்றும் ஜீப்பின் சாரதியுடன் புறப்பட்டு இருள் சூழ்வதற்கு முன்பாக கிராமத்தில் உள்ள பாடசாலையை அடைந்தோம்.

கிராமசேவகர் எங்களுக்கு உணவும் படுக்கை வசதியும் அந்த பாடசாலையிலே செய்து கொடுத்தார். மின்சார வசதி இல்லாத காரணத்தால் இரண்டு அரிக்கன் விளக்குகள் தரப்பட்டன. வந்தவர்களில் பொலிசாக வந்தவரை தவிர்ந்த மற்றையோர் நடுத்தர வயதானவர்கள். பொலிசாக வந்த வணசிங்கவுக்கு இருபத்தைந்து வயது இருக்கும்.

உணவு உண்டபின் படுக்கையில் சாய்ந்தபடி அரிக்கன் விளக்கு வெளிச்சத்தில் பத்திரிகை படித்துக்கொண்டிருந்தேன்.

'மாத்தையா' என்றபடி வணசிங்க எதிரே வந்தமர்ந்தார்.

' வணசிங்கவுக்கு எந்த ஊர்?' என்றேன்.

' இரத்தினபுர'.

' எவ்வளவு காலம் பொலிஸ் சேவையில் சேர்ந்து. ?'

' இரண்டு வருடம் தான். நீங்கள் யாழ்ப்பாணமா?'

' நான் நாக தீப'

பெரும்பாலானவர்களுக்கு என் தாயின் ஊரான எழுவைதீவை சொல்வதில்லை. ஏனென்றால் இந்த ஊர் இலங்கையில் எந்தப்பகுதி என காண்பிக்க பூகோளப் பாடம் எடுக்க வேண்டும். மேலும் சிங்களவர்களுக்கு தந்தையின் ஊரான நயினாதீவை நாகதீப என சொல்லும் போது இலகுவாக புரிந்து கொள்வார்கள். அதைவிட இனம் புரியாத வாஞ்சையுடன் உரையாடுவார்கள். பௌத்தர்கள் நாகதீப என்றழைக்கப்படும் நயினாதீவுக்கு வருவதை ஒருவித சமயக் கடமையாகக்; கருதுவது போலத் தோன்றும்.

'அப்படியா மாத்தையா. நானும் சிறுவயதில் அங்குள்ள பண்சலாவுக்கு போயிருக்கிறேன்.'

'சரி வணசிங்க நாளைக்கு நடக்கும் சர்வஜன வாக்கெடுப்பு சுமுகமாக நடக்குமா?'

'தேவையில்லாத வேலை ஜே ஆர் ஜெயவர்த்தன மாத்தையாவுக்கு இல்லையா?'

நான் புரிந்து கொண்டேன் வணசிங்க எதிர்கட்சியின் ஆதரவாளர் என்பதை. இளம் வயதானதால் வெளிப்படையாக பேசினார்.

'நாளை ஏதாவது பிரச்சனை இல்லாமல் தேர்தல் நடக்க வேண்டும். அதைப்பற்றித்தான் எனக்குக் கவலை. ஜே.ஆரை பற்றியில்லை.' எனக் கூறிவிட்டு என் உரையாடலை நிறுத்திக் கொண்டேன்.

வணசிங்க 'இரவு வணக்கம்' சொல்லி விட்டு போனதும் விளக்கை அணைத்து விட்டு நித்திரைக்குச் சென்றேன்.

காலைப்பொழுதில் குளத்தில் எல்லோரும் ஒன்றாக குளித்தோம். குளிர்ந்த நீரில் தாமரை, அல்லி மலர்களுக்கு இடையே அமிழ்ந்து குளித்தது புது அநுபவம். என்னையும் வணசிங்கவையும் தவிர்ந்த மற்றவர்கள் அநுராதபுர மாவட்டத்தை சேர்ந்தவர்கள். இப்படியான நீராடலுக்கு பழக்கப்பட்டவர்கள். குழந்தைகளும் ஒரு சில கிராமத்தவர்களும் எங்களை வேடிக்கையாக பார்த்தார்கள்.

குளித்து முடிந்த எங்களுக்கு, தாமரை இலையில் கிரிபத் பால்சோறு கிடைத்தது. இது கிராமசேவகரின் எற்பாடு என்பதை தெரிந்து கொண்டோம்.

காலை ஒன்பது மணிக்கு வாக்களிப்பு தொடங்கியது. வணசிங்க வாசலில் நின்றார். காலையில் மெதுவாக வாக்களிப்பு நடந்தது. ஆண்கள் தான் பெரும்பாலும் காலையில் வாக்களித்தனர். பிற்பகல் நேரத்தில் பெண்கள் கூட்டமாக வந்து வாக்களித்தார்கள். சமையல் சாப்பாடு எல்லாம் முடித்து விட்டு வந்திருக்கிறார்கள் போலும்.

மாலை நாலு மணியளவில் வாக்களிப்பு நிலையத்தின் வாசலில் கூட்டம் கூடி பலமான சத்தம் அங்கிருந்து வந்தது.

வணசிங்கவை அழைத்து,' ஏன் அங்கு கூட்டம் கூடுகிறது?' என விசாரித்தேன்.

'இந்தப்பகுதி பாராளுமன்ற உறுப்பினரான மகிந்த சோமா மாத்தையா வந்துள்ளார்.'

' எதற்கும் கூட்டம் கூட வேண்டாம் என சொல்லு' என கூறி விட்டு, பத்திரிகையை வாசித்துக் கொண்டிருந்தேன். சிரேஸ்ட தேர்தல் அதிகாரியானபடியால் நடப்பதை மேற்பார்வை செய்வது மட்டுமே எனது வேலையாகும்.

என் எதிரே ஒருவர் வந்து நின்று சிங்களத்தில் அதிகார தொனியுடன் 'நீர் தானா இங்கு பெரியவர்?' எனக் கேட்டார்.

நிமிர்ந்து பார்த்தேன். மகிந்தசோமா நின்றார். அவரை அநுராதபுரம் கச்சேரியில் நான் பார்த்திருக்கிறேன்.

'வாக்காளர் கூண்டுக்குள் ஒரு பத்திரிகை போடவும், மக்களுக்கு புள்ளி போடுவதற்கு இலகுவாக இருக்கும்' என்றார்.

ஏதாவது பிழை பிடிக்க முயல்கிறார் என நினைத்தபடி, 'மன்னிக்கவும். தேர்தல் சட்டப்படி வாக்களிக்கும் கூண்டுக்குள் எதுவும் இருக்கக் கூடாது என சட்டம் கூறுகிறது' என்றேன்.

'நீ எனக்கு கூறுகிறாயா?' என கூறி விட்டு என் கையை உயர்த்தி வைத்திருந்து, பின்பு கீழே விட்டார்.

எனக்கு உடம்பில் நடுக்கம் பிடித்தாலும் , நின்ற இடத்திலிருந்து அசையவில்லை. சிறிது நேரம் நின்று விட்டு, ஏதோ சொல்லியபடி வெளியே சென்றார்.

வணசிங்க உள்ளே ஓடிவந்து 'இப்படித்தான் செய்யவேண்டும்.. நான் கூட்டத்தை கலைந்து போகும்படி கூறியபோது என்னை முறைத்துபார்த்து உனக்கு நான் யார் என காட்டுகிறேன் என்று என்னிடம் கூறிவிட்டுத்தான் உள்ளே வந்தார்.'

'எனக்கு ஏதோ நல்லகாலம் இருந்திருக்கு' என்றேன்.

ஐந்து மணிக்கு வாக்குப் பெட்டிகளை சீல் வைத்து ஜீப்பில் எடுத்து வந்து அநுராதபுரம் கச்சேரியில் பொறுப்பு கொடுத்து விட்டு, அநுராதபுர மாவட்ட அதிபரான திசநாயக்காவிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தேன்.

'இது என்ன'? என்றார் மாவட்ட அதிபர்.

'அமைச்சர் மகிந்தசோமா என்னை அடிக்க முயன்றது சம்பந்தமான புகார் கடிதம்.'

விபரத்தை கேட்டு அறிந்து விட்டு 'நான் உங்கள் நிலையில் இருந்தால், அதை பொருட்படுத்த மாட்டேன். மேலும் மகிந்தசோமா பல அரசாங்க ஊழியர்களை அடித்திருக்கிறார்..'

' உங்களிடம் புகார் செய்துள்ளேன்.. இதைப்பற்றி நடவடிக்கை எடுப்பது உங்களைப் பொறுத்த விஷயம்' என கூறிவிட்டு மதவாச்சிக்கு பஸ் ஏறினேன்.

குணதாச கதையை கேட்டுவிட்டு, 'இம்மாதத்தின் கதாநாயகர் நீங்கள் தான்' ஒரு கிளாஸில் சாராயத்தை ஊற்றி என்னிடம் தந்தார்.

இதைத்தான் சொல்வது அக்ஸிடென்டல் ஹிரோ என நினைத்தவாறு கிளாஸில் உள்ளதை ஒரே மடக்கில் குடித்தேன்.

**தீவுப்பகுதி**

சித்ராவுடன் யாழ்ப்பாணம் செல்ல தீர்மானித்தபோது நாங்கள் மோட்டார் சைக்கிளில் செல்வது நல்லது என முடிவு செய்தோம். தாயாரிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பியது. ரயிலில் செல்வது நல்லது என மகளின் காதில் சொல்லப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் போனால் எல்லா இடங்களுக்கும்; போகமுடியும். அத்துடன் இரண்டு நாள்கள் சென்று திரும்ப வேறு வழியில்லை என வாதிட்டபோது தாயும், மகளும் ஏற்றுக் கொண்டார்கள்.

வெள்ளிக்கிழமை காலையில் மதவாச்சியில் இருந்து புறப்பட்டால் மூன்றரை மணி சொச்சத்தில் யாழ்;ப்பாணம் சென்று விடலாம் என நினைத்துப் புறப்பட்டோம். வவனியாவுக்கு வடக்கே சித்ரா பயணம் செய்யாதபடியால் பல இடங்களையும் காட்டி விளக்கிக் கொண்டு வந்தேன். ஓமந்தையில் குறுக்கே மாடு திடீரென வந்ததால் சைக்கிளில் திடீரென பிரேக் போட வேண்டியிருந்தது. சைக்கிள் அடுத்த பக்கம் திரும்பி நின்றது. திரும்பிய வேகம் பயங்கரமானது.

'இது தான் அம்மா ரயிலில் போக சொன்னா. நீங்கள் கேட்க வில்லை. '. எனப் பொறுத்த இடத்தில் வழக்குரைத்தாள் சித்ரா.

' உங்கள் அம்மாவுக்கு ஓமந்தையில் மாடு வரும் என்பது எப்படித் தெரியும்;. '?

என் கழுத்தில் செல்லமாக இலேசாக ஒரு அடி விழுந்தது. '

இப்படி ஊடல்களுடனும், உரசல்களுடனும் மாங்குளம் வந்த போது 'இதுதான் ரூபவாகினியின் உப அஞ்சல் நிலையம் ' என்றேன்.

வண்டியை முறிகண்டியில் நிறுத்தினேன். 'இது பிரசித்தி பெற்ற பிள்ளையார் கோயில். எந்த வாகனமும் இங்கு நிற்காமல் போனதில்லை. கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் இங்கு தேங்காய் உடைப்பது வழக்கம்.'

'அப்ப நான் கணதெய்யோவுக்கு தேங்காய் உடைக்கப் போகிறேன். ' என கூறிவிட்டு தேங்காய் கடையை நோக்கி ஓடினாள்.

முறிகண்டியில் உள்ள தேனீர் கடைகளில் கிடைக்கும் வடை மிகவும் ருசியாக இருக்கும். என்பதால் நான் தேநீர்கடைக்கு சென்று ஓடரை கொடுத்து விட்டு காத்திருந்தேன்.

தேங்காயை உடைத்து விட்டு வந்தவள் என்னிடம் 'முறிகண்டிப் பிள்ளையாரிடம் உங்களுக்கு நம்பிக்கை இருக்கா இல்லையா'?

' உனக்கு நம்பிக்கை இருக்கிறதல்லவா? அதுதான் இங்கு நிறுத்தினேன் '.

'இது பொய். உண்மையை சொல்லுங்கோ? '

' நம்பிக்கை இல்லை. ஆனால் சிறிது பயம் இருக்கு என ஏற்றுக்கொள்கிறேன். அம்மா சிறுவயதில் கூறிய கதை இப்பவும் மனதில் ஒட்டி இருக்கு'.

'எனக்கு சொல்லுங்கோ'.

'எனக்கு பெரியப்பா முறையான ஒருவர் சிங்கப்பூர் சென்று வேலை பார்த்திருந்தார். விடுமுறையில் இலங்கைக்கு வரும் போது கொழும்பில் ஒரு புதிய காரை வாங்கிக்கொண்டு நேராக யாழ்ப்பாணம் வந்திருக்கிறார். முறிகண்டியில் நிறுத்தவில்லை. கிளிநோச்சியில் கார் மரத்தில் மோதி அவர் இறந்து விட்டார். இந்தக்கதை பொய்யோ உண்மையோ தெரியாது. ஆனால் இந்தக் கதை மூலம் முறிகண்டி மகத்துவத்தை அம்மா உயர்த்தியுள்ளார். பெரியப்பா நித்திரை மயக்கத்தில் காரை மோதியிருக்கலாம் என எனது சுயபுத்தி சிந்தித்தாலும் அம்மாவை நினைத்து முறிகண்டியில் வாகனத்தை நிறுத்துவதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளேன். இதோ நசிந்து கிடக்கும் எலுமிச்சம் பழங்களைப்பார். இவர்கள் எல்லாம் புதுவாகனக்காரர்கள் தேங்காயை உடைத்து விட்டு எலுமிச்சம் பழத்தை நசித்து விட்டு நிம்மதியாக வாகனத்தை ஓட்டிகொண்டு போவார்கள்.

'உங்கள் செய்கைகள் ஒவ்வொன்றிலும் ஒரு உபகதை உண்டு. ' எனக் கூறிய அவள் என்னுடன் முறிகண்டி வடையைச் சுவைத்தாள்.

ஆனையிறவு ராணுவ முகாமை கடந்தபோது சித்ரா, 'நாங்கள் எத்தனை ராணுவ முகாம்களை கடந்து வந்துள்ளோம்? ' எனக் கேட்டாள்.

'வழி நெடுக இருக்கு, வா. காட்டுகிறேன். மதவாச்சியில் இருந்து கொழும்பு போகும் போது எந்த ராணுவ முகாமும் கண்ணில் படாது. மதவாச்சியில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் நூற்றிஐந்து மைல் பிரதேசத்தில் ஆறு ராணுவ முகாம்கள் உண்டு. ' என கூறியபடி கொடிகாமம் சாவகச்சேரியை கடந்தோம். யாழ்ப்பாண எல்லைக்கு வந்தபோது 'யாழ்ப்பாணம் வரவேற்கிறது' என்ற போர்ட்டை பார்த்து விட்டு 'என்னையும் வரவேற்கிறதா? என இடுப்பில் கிள்ளினாள்.

'எங்கள் வீட்டை போனபின் அது உனக்கு தெரியவரும். அதுவரை பொறுத்திரு'.

'உங்கள் வீட்டில் யாருக்கு சிங்களம் தெரியும் '

'என் அப்புவுக்கு மட்டும் தெரியும். '

'மற்றவர்களோடு எப்படி பேசுவது? '

'இந்த நாட்டின் நிலையில் எந்த மொழியும் பேசாமல் இருப்பதுதான் நல்லது. அமைதி ஏற்படும். மொழிகள் மக்களை பிரித்தன. சமயங்கள் மக்களை அழித்தன'.

'நீங்களும் ருக்மன்; அண்ணா மாதிரி பேசுகிறீர்கள். '

மாலை ஏழு மணியளவில் வீட்டை அடைந்தோம்.

மகனையும் மருமகளையும் கட்டிப்பிடித்து கொஞ்சிவிட்டு 'பிள்ளைகள் வெயிலில் காய்ஞ்சு இருக்கினம் ' என அம்மா கவலைப்பட்டாள்.

தம்பி ரவி மசுங்கிய படி வந்தான். ஆங்கிலத்தில் அறிமுகப் படுத்தினேன்.

'குளித்துப்போட்டு சாப்பிட வாருங்கள் ' என அம்மா அறிவித்தாள்.

சித்ராவின் கையில் இருந்த தோல்பையை வாங்கியபடி அறையுள் அழைத்துச்சென்றேன்.

'அம்மா உங்களை மாதிரி இருக்கிறார் ' என சித்ரா என் காதுக்குள் கிசுகிசுத்தாள்.

'நான் அம்மா மாதிரி என்று சொல்லு' என சாரத்தை மாற்றிக் கொண்டு 'குளிக்க வா' என்றேன்.

'எங்கே'

'உங்கள் மாதிரி குளத்தில் குளிக்கமுடியாது. வீட்டுக்குப் பின்னால் இருக்கும் கிணற்றில் தான் குளிக்கமுடியும் ' எனச் சொன்னவாறு கிணற்றடிக்கு அழைத்தேன்.

கிணற்றை எட்டிப்பார்த்து விட்டு 'ஐயோ கிணறு ஆழமாக இருக்கிறது. நான் எப்படி தண்ணீர் அள்ளுவது' என அவள் தயங்கினாள்.

'தா, நான் அள்ளித்தருகிறேன் ' என்ற கூறி தண்ணீர் அள்ளத் துவங்கினேன். இருவரும் கிணற்றுத் தண்ணீரை அள்ளி மாறிமாறி குளித்தோம்.

'சித்ரா உனக்கு சோப்பு போடவா' என்றேன்.

'எனக்கு நான் போடுவேன். '

'இதற்குத்தான் கிடுகுவேலி போட்டிருக்கு'.

'தம்பி கெதியா வா சாப்பாடு ஆறுது. ' என் அம்மா குரல் தந்தார்.

அன்று சாப்பாடு விசேடமாக இருந்தது. காக்கைதீவில் இருந்து ரவி வாங்கி வந்த இறாலைத் தண்ணீரில் பலமணி நேரம் ஊறவிட்டு குழம்புக்கறி சமைத்தது என அறிந்தேன். சாப்பாடு முடிந்த நேரத்தில் அப்பு வந்தார்.

சித்ரா எழும்பி அப்புவின் கால்களில் விழுந்தாள்.

அப்புவும் எதிர்பார்க்கவில்லை. சிங்களத்தில் ஓர் இரு வார்த்தைதான் பேசினார். நான் எதிர்பார்;த்தபடி விசனித்த பார்வை இல்லை. அசம்பாவிதம் நடக்காதது மிகுந்த ஆறுதலைத் தந்தது.

விடிந்தவுடன் பல உறவுக்காரர்கள் வந்து விசாரித்து பல்வேறு பரிசுப்பொருள்களைத் தந்தார்கள். பலருக்கு சிங்களப் பெண்ணை பிடிக்காவிட்டாலும் நாகரீகத்தின் காரணமாக எதுவும் கூறவில்லை. மனித மனத்தில் ஒருவரை ஒருவர் அறியாமல் வெறுப்பையும் துவேஷத்தையும் வளர்த்துக் கொள்வார்கள். இனத் துவேஷத்தின் அடிப்படை அறியாமை என்பதை எழுபத்தேழாம் ஆண்டு இனக்கலவரத்தின் போது அறிந்து கொண்டேன்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நான் படித்தபோது நாங்கள் இருந்த 'மார்ஸ்' மாணவர் விடுதியில் சிங்கள, தமிழ் மாணவர்கள் கலந்து இருந்தார்கள். எழுபத்தேழாம் ஆண்டின் கலவர உச்சநிலையில் பேராதனை சந்தியில் இருந்த தமிழ்க்கடைகள் சிங்களக் காடையரால் தீக்கிரையாக்கப்பட்டன. சில தமிழர்கள் கொலை செய்யப்பட்டார்கள். மற்றையோர் அகதி முகாம்களுக்கு அனுப்பப்பட்டார்கள். இந்த நிலையில் மற்ற மாணவர் விடுதிகள் மூடப்பட்டிருந்தன. ஆனாலும் எங்கள் விடுதியில் நாங்கள் தொடர்ந்து இருந்தோம். விடுதியில் உள்ள சமையல்காரர் ஒருவரின் உதவியுடன் அருகே உள்ள கிராமத்தில் இருந்து சிங்கள குண்டர்கள் அன்று இரவு எமது விடுதியைத் தாக்க திட்டமிட்டிருப்பதாக அறிந்தோம். இதை எமது விடுதியில் உள்ள சிங்கள மாணவர்களிடம் கூறியபோது அவர்கள் உடனடியாக படுக்கை கட்டில்களின் கால்களை உடைத்து எடுத்து வைத்துக்கொண்டு எமக்கு பாதுகாப்பாக பதில் தாக்குதலில் ஈடுபட தயார் நிலையில் இருந்தார்கள். எங்களையும் தங்களுடன் சேர்ந்து தாக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். மாணவர்களுடைய தயார் நிலையை கேள்விப்பட்ட குண்டர்கள் முயற்சியைக் கைவிட்டார்கள். சிங்கள மாணவர்கள் எம்மை தமிழர்களாக பார்க்காமல் தங்களின் நண்பர்களாகவே பார்த்தார்கள். அத்துடன் ஒரு சிங்கள நண்பன் 'உங்களைப்போல் எல்லா தமிழரும் இருந்தால் தமிழர் பிரச்சனைக்கே இடமில்லை' என அந்தச் சந்தர்ப்பத்திலே சொன்னான். ஆவனைப் பொறுத்தவரை தனக்கு தெரிந்த, அறிமுகமான தமிழர்கள் நல்லவர்கள். அறிமுகம் அற்ற தமிழர்கள் கெட்டவர்கள் என்பதாகும்.

எங்களைப் பார்க்க வந்த ஓர் உறவினர் மட்டும் நகைச்சவை உணர்வோடு 'உனக்கு என்ன சீதனம் கிடைத்தது' எனக் கேட்டார் புன்புறுவலுடன்.

'நீங்கள் வந்து எனது சீதனக்காணியை பதவியாவில் பார்த்துக் கொள்ளுங்கள் ' என்று கதையளந்த போது 'ஆளை விட்டால் போதும் ' என்றார்.

அம்மா வழி பெரியம்மா எழுவைதீவிலும் அப்பு வழி மாமி நயினாதீவிலும் இருப்பதால் அங்கு செல்ல மதியம் போல் வெளிக்கிட்டோம்.

பண்ணை பாலத்தால் செல்லும் போது கருகிய நிலையில் வக்கிரமான மனிதமனங்களுக்கு சாட்சி சொல்வது போல தெரிந்த யாழ்ப்பாண நூலகத்தின் அருகில் சென்றோம்.

'நான் இந்த நூலகத்தில் பல நாட்கள் செலவழித்து இருக்கிறேன். இங்கிருந்த சிறுகதை, நாவல்கள் ஏராளமாக படித்திருக்கிறேன். அடுத்த தலைமுறைக்கு இல்லாமல் செய்து விட்டார்கள்' எனக் கூறினேன்.

'ருக்மன்; அண்ணா சொன்னார். மந்திரி காமினி திசநாயக்காவின் கட்டளைப்படிதான் இந்த நூலகம் எரிக்கப்பட்டதாம்.'

'நானும் நம்புகிறேன். '

பண்ணை பாலத்தின் இருபக்கமும் உள்ள கடல்நீரை மாலை சூரியன் தங்கக் குழம்பாக்கி விட்டிருந்தது. பாலத்தின் இரு பக்கத்திலும் இருந்த களங்கட்டி வலை கட்டி மீன் பிடிக்கும் முறை பற்றி ஒரு சிற்றுரை நிகழ்த்தினேன். இத்துடன் பரவைக்கடல் மீன்களின் ருசிக்கு எதுவும் நிகரில்லை என்பதையும் சொல்லி வைத்தேன்.

ஊர்காவல் துறையில் உறவினர் ஒருவரின் கடையில் மோட்டார் சைக்கிளை வைத்துவிட்டு எழுவைதீவுக்கு செல்லும் மாலை நேர மோட்டார் படகில் ஏறினோம். மோட்டார் படகின் மணமும் அலைகளும் கடல் பயணத்துக்கு பழக்கமில்லாத சித்திராவினால் தாங்க முடியவில்லை. வாந்தி எடுக்க முயன்றாள்.

'நீ வாந்தி எடுத்தால் பிள்ளைத்தாச்சி என எல்லோரும் நினைப்பார்கள். ' என சிரித்தேன்.

'சட் அப் ' என முறைத்தாள். அச்செயலில் கோபம் இருக்கவில்லை. அவளுடைய இயலாமை தெரிந்தது.

' சரி, சரி மேல்தட்டுக்கு வா. அப்போது சத்தி வராது. '

'எனக்குப் பயமாக இருக்கிறது'.

'இவ்வளவு தூரம் வந்திருக்கிறாய். என்னை நம்பி' என அவளது கையைப் பிடித்துக் கொண்டு மோட்டார் வள்ளத்தின் மேற்பகுதிக்கு அழைத்துச் சென்றேன்.

கடற்காற்று வாந்தியை நிறுத்தியது'அதோ முழுக்க பனைமரங்களாகத் தெரிவதுதான் எழுவை தீவு' என்றேன்.

இறங்குதறை பனைமரவளைகளை பயன்படுத்தி செய்யப்பட்டிருந்தது. இடைக்கிடை ஓரிரு தடிகள் இல்லாததால் கீழே கடல் தெரிந்தது. கவனமாகவா' எனக்கூறிக் கொண்டு கையை பிடித்து இறக்கினேன்.

தீவுப்பகுதியில் சிறிய தீவாகவும், பொருளாதார வளம் அற்றதாகவும் இருந்ததால்; எழுவைதீவை அரசு கவனிப்பதில்லை. இறங்கு துறை திருத்தாமல் இருந்தாலும் மக்கள் பெரிதாக பொருட்படுத்துவதில்லை. அரசாங்கமும் கடவுளைப்போல் அதிக தூரத்தில் இருப்பதால் சாதாரண மக்களுக்கு இப்படி விடயங்களை விதியென ஏற்றுக்;கொள்வார்கள்.

'சித்ரா, ருஸ்சோ என்ற பிரான்ஸ் அறிஞர் பிரான்ஸ்சில் இருந்து நாடு கடத்தப்பட்டு பின்பு நாடு திரும்பியபோது மண்ணில் விழுந்து முத்தமிட்டாராம். அது போல செய்யவேண்டும் போல இருக்கிறது'

'என்னை பக்கத்தில் வைத்து விட்டு மண்ணை முத்த மிட்டால் உங்களை பைத்தியகாரன் என்று தான் கூறுவார்கள். '

'சரி எனது காலணிகளை கழட்டுகிறேன். குறைந்தளவு என்கால்கள் மட்டுமாவது மண்ணை தடவட்டும் ' என்று கூறிவிட்டு காலணிகளை கழற்றி பையில் போட்டேன்.

'காலில் ஏதாவது முள்ளு குத்தினால் தான் தெரியும். '

அரை மணித்தியால நடையில் பெரியம்மாவின் வீட்டை அடைந்தோம். வாசலில் இருந்த இரு யானை சிலைகள் எங்களை மௌனமாக வரவேற்றன.

'இது தான் நான் பிறந்து வளர்ந்த வீடு' என சொல்லும் போதே பெரியம்மா வெளியே வந்தார்.

பெரியம்மாவின் கண்களில் கண்ணீர் வந்தது. பெரியம்மாவின் பிள்ளைகளும் நாங்களும்; ஒன்றாகவே சிறு வயதில் வளர்ந்தோம். அவர்கள் எல்லோரும் வெளிநாடு சென்று விட்டார்கள்.

'எங்கே பெரியப்பா?'.

'நீ வருவதால் தனிப்பனை கள்ளு எடுத்து வர சென்று விட்டார்.' பெரியப்பாவுக்கு விருந்தோம்பல் கள்ளில் தொடங்கி கள்ளில் முடியும்.

சித்ராவுக்கு மொழி புரியாவிட்டாலும் விருந்தோம்பல் அவளை திக்கு முக்காடச்செய்து விட்டது.

கள்ளும் மீனும் வயிற்றில் குழப்பம் விளைவிக்க தொடங்கி விட்டதால் முற்றத்தில் பனை ஓலை பாயில் நித்திரை கொள்ள முடிவு செய்த போது சித்ரா 'இங்கு பாம்பு இருக்கா? ' என்றாள்.

'ஒருமுறை பெரியம்மா படுத்துவிட்டு காலை எழுந்து பாயை சுருட்டும்போது நல்ல பாம்பு வந்து விழுந்தது. '

'எனக்குப் பயமாக இருக்கு'

'வேறு வழி இல்லை. என்னைக் கட்டி பிடி. '

'கள்ளு மணக்குது. '

'பேட் லக் '.

காலை எழுந்து குளித்து விட்டு நயினாதீவுக்குப் புறப்பட்டோம்.

நயினாதீவின் இறங்குதுறையில் நாகபூசணி அம்மன் கோயில் இருந்தது.

'இது தான் பிரசித்தி பெற்ற அம்மன் கோயில் ,'என்று கூறினேன்.

'நான் சிறுவயதில் வந்திருக்கிறேன். '

'நீ எனக்கு சொல்லவில்லை'.

'நீங்கள் கேட்கவில்லையே'.

கோயில் உள்ளே சென்று அம்மனை தரிசித்து விட்டு வரும்வரை கோயில் வாசலில் உள்ள கருங்கல்லில் இருந்து கொண்டு கோபுரத்தை அண்ணாந்து பார்த்தேன். புதுக்க வண்ணம் அடிக்கப்பட்டிருந்தது. சிறுவனாக இருந்த காலத்தில் ஓடிப்பிடித்து விளையாடிய இடங்களை மீண்டும் மனதில் அசை போட்டுக்கொண்டேன்.

கால்மணி நேர நடைக்கு பின் விகாரைக்கு சென்றோம்.

சித்ரா புத்த சாதுவின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றாள். நான் சிறுவனாக இருந்த போது இருந்த புத்த பிக்கு இன்னும் இருந்தார். முகத்தில் வயது தெரிந்தது. ஊர்மக்களின் மதிப்பை பெற்றவர். மரியாதையுடன் புன்புறுவல் செய்து விடை பெற்றேன்.

இந்த நயினாதீவுதான் மணிமேகலை வந்த மணிபல்லவதீவு என நம்பப்படுகின்றது. 'கோமுகி' என்கிற குளம் இருந்த இடத்தை ஊரவர்கள் காட்டுகிறார்கள். அங்கே கிடைத்த அமுதசுரபி என்கிற அட்சய பாத்திரத்தின் மூலமே மக்களின் பசிப்பிணியை மணிமேகலை போக்கினாள். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பட்ட மணிமேகலை என்ற காப்பியம் புத்த சமய கோட்பாடுகளைப் பரப்பும் நூலாகவும் அமைந்துள்ளது. ஒரு காலத்தில் தமிழர்கள் பலரும் புத்தசமயத்தை சேர்ந்தவர்களாக வாழ்ந்தார்கள். புத்தசமயத்துடன் தொடர்புடைய இடப்பெயர்கள் பல யாழ்ப்பாணக் குடா நாட்டில் உண்டு. இவை அனைத்தையும் சிங்கள ஆட்சியின் பரம்பல் என சில வரலாற்று ஆசிரியர்களும் அபிப்பிராயம் பேசுகிறார்கள். பௌத்த மதம் தமிழருடைய வாழ்க்கை முறைக்;கு மாறானது அல்ல. அவளுக்கு விளங்கியதோ, இல்லையோ நான் உரத்த சிந்தனையில் ஈடுபட்டவாறு மாமி வீட்டினை அடைந்தேன்.

மாமி வீட்டில் சிறிது நேரம் இருந்து விட்டு உடனடியாக திரும்பினோம். மாலை நேரத்தில் காற்று பலமாக இருந்தது. ஏழுகடல் சந்திக்கும் இடத்தில் கடல் அலை பலமாக எழுந்து மோட்டார் வள்ளத்தை ஒரு அரக்கன் சின்ன குழந்தையை தூக்குவது போல தூக்கி சுழற்றியது. சித்திராவுக்கு வாந்தி உண்மையில் வந்து விட்டது. யாழ்ப்பாணத்தில் உண்மையில் நான் சூறாவளிப்பயணத்தை மேற் கொண்டிருந்தேன் என்று கூறுவதுதான் பொருந்தும். அதனை முடித்துக் கொண்டு  மதவாச்சி வந்து சேர்ந்தோம்.

பாலில் கலப்படம்

மன்னார் ரோட்டும், யாழ்ப்பாண ரோட்டும்; மதவாச்சியில் ஒன்றாக சந்தித்து கண்டி ரோட்டாக மாறுகிறது. இந்த சந்தியின் இடைவெளியில் பஸ்நிலையம் உள்ளது. இந்த பஸ் நிலையத்தைச் சுற்றி கடைத்தெரு உண்டு. இரண்டு உணவுக் கடைகள் இஸ்லாமியரால் நடத்தப்படுகிறது. தமிழர்கள் அரசாங்க வேலை பார்த்து விட்டு வார இறுதியில் காணாமல் போய் விடுவார்கள். மீண்டும் திங்கட் கிழமையில் உயிர்த்தெழுவது போல் தோன்றுவார்கள்.

மன்னார் வீதியில் சிறிதாக ஒரு வீட்டை வாடகைக்கு நாங்கள் எடுத்துக்கொண்டோம். விடுதியை விட்டு சென்றது என் நண்பர்களுக்கு பிரிவு துயரத்தை விட பொருளாதாரத்திலும் பாதித்தது. விடுதியில் குணதாசவும் நானும் மட்டுந் தான் ஒழுங்காக சமையலுக்கு பணம் கொடுப்பவர்கள். விடுதியில் எவரும் சாப்பிடலாம். முக்கியமாக ஜே.வி.பி அங்கத்தவர்கள் வந்து சாப்பிடுவார்கள். கறி இல்லாதபோது தேங்காயைத் துருவி சோற்றில் போட்டு சாப்பிடுவார்கள். இவர்களுடைய எளிமையான வாழ்க்கையும் தன்னலம் கருதாத செயல்களும்; அவர்களில் எனக்கிருந்த மதிப்பை உயர்த்தியுள்ளது.

எண்பதில் அநுராதபுர மாவட்டத்தின் அபிவிருத்திக்குப் பெருமளவு வெளிநாட்டுப் பணம் ஒதுக்கப்பட்டது. இதனால் அரசாங்க அதிகாரிகளும், பாராளுமன்ற அங்கத்தவர்களும் போட்டி போட்டுக்கொண்டு அபிவிருத்தி பணியில் ஈடுபட்டனர். நான் வேலை பார்த்த மதவாச்சி அநுராதபுர மாவட்டத்தில் இருந்தாலும் எதிர்காட்சியை சேர்ந்தவரே பாராளுமன்ற அங்கத்தவராகையால் ஐக்கியதேசிய கட்சி மாற்றான் தாய் மனப்பான்மையில் நடத்தியது. அப்பொழுது மைத்திரிபால சேனநாயக்க மதவாச்சித் தொகுதியின் பாராளுமன்ற அங்கத்தவராக விளங்கினார். அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினர். எதிர்க்கட்சி ஆட்சிபீடம் ஏறிய காலங்களில் அவர் முக்கிய அமைச்சராக பணிபுரிந்துள்ளார். யாழ்ப்பாணத்திலே படித்ததனால் நன்றாக தமிழ் பேசக்கூடியவரும் அத்துடன் அவர் தமிழ் பெண் ரஞ்சி என்பவரை மணம் முடித்திருந்தார்.

குறைந்த அளவு பணமே ஒதுக்கப்பட்டதனால் மதவாச்சிப் பகுதியை அபிவிருத்தி செய்ய என்னைப் போன்ற அரசாங்க அதிகாரிகள் கோதாவில் இறங்க வேண்டி இருந்தது. எனது பகுதியில் பசுக்களின் எண்ணிக்கையை கணக்கெடுத்து பால் சேகரிப்பு நிலையத்துக்கு அனுமதி கேட்டபோது அதற்கு பணம்

ஒதுக்கப்பட்டது. இப்படியான நடவடிக்கைளிலும் ஈடுபட்டதாலும் யாழ்ப்பாணம் செல்லும் வழக்கம் முற்றாக நின்றது.

சிங்கள கிராம மக்களின் வீடுகளுக்கு செல்லும்போது அவர்கள் என்னிடம் பல கேள்விகளை கேட்டார்கள். மதவாச்சி தமிழர் பிரதேசத்துக்கு அடுத்ததாக இருப்பதால், இவர்கள் யாழ்ப்பாண விடயங்களை உன்னிப்பாக கவனித்தனர்.

'யாழ்ப்பாணத்தவர்களுக்கு ஏன் தனி நாடு? உங்களுக்கு என்ன குறை? '

'தமிழ் ஈழத்தில் நீங்கள் எல்லாம் எங்கு வேலை செய்வீர்கள்? '

'கொழும்பு தமிழரின் எதிர்காலம் என்ன? '

'மலையக தமிழர் எதிர்காலம் என்ன? '

'தமிழ் ஈழத்தின் எல்லை எது? '

'மதவாச்சிக்கு புலி வருமா? '

இப்படியான கேள்வி கேட்டவர்கள் சாதாரண பாமர சிங்கள விவசாயிகள். இவர்களுக்கு பதில் சொல்ல என்னால் முடியவில்லை. இலங்கை அரசாங்கத்தின் தரப்படுத்தல் பற்றி சொல்லி இவர்களுக்கு புரிய வைக்க முடியாது. கொழும்பு கண்டி போன்ற நகரங்களில் வாழும் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த சிங்களவருக்குப் புரியலாம். ஆனால் மதவாச்சியில் வாழும் சிங்களமக்கள்; பல்கலைக்கழக அனுமதியை பற்றிக் கவலைபடுவதில்லை.

1958ம் ஆண்டில் நடந்த கலவரங்களிலும்; தமிழர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அப்பொழுது தமிழ் ஈழம் கேட்கிறோம் என தமிழர் கோஷம் எழுப்பவில்லை. இக்கலவரத்தில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் கொழும்பிலும், மலையகத்திலும் வசித்த தமிழர்கள். இவர்கள் தனிநாடு கிடைத்;தாலும் சிங்களவர் மத்தியிலேயே வசிக்க வேணடும்.

தமிழ் பிரதேசங்களில் சிங்கள மக்களை அரசாங்கம் குடியேற்றம் செய்தார்கள் என்று எப்படி பதவியா, மதவாச்சி மக்களிடம் கூறமுடியும்? கனகராயன் குளத்திலும், அக்கராயன் குளத்திலும் தமிழர்களுக்கு

அரசாங்கம் காணி கொடுக்கவில்லையா? மேலும் பதவியாவில் வந்து குடியேற எத்தனை தமிழர்கள் தயாராக இருந்தார்கள்?

தமிழ் அரசியல் வாதிகள் அவசரப்பட்டு விட்டார்கள் என்பது மட்டுமல்ல தாங்கள் வைத்த திட்டத்துக்கு எந்த அத்திவாரமும் இல்லாமல் இறங்கி விட்டார்கள். இவர்களது செயல்இ ஓடும் வண்டியில் கண்டக்டர் எம்மை அடித்து விட்டாலோ திட்டிவிட்டாலோ வாக்குவாதத்தில் ஈடுபட்டு வண்டியில் இருந்து குதிப்பது மட்டுமல்லாமல் குடும்பத்தையே குதிக்கச்சொல்கிற குடும்பத்தலைவரின் பொறுப்பற்ற செயலைப் போன்றது எனவும் விளங்கிக் கொண்டேன்.

சாதாரண சிங்கள மக்களுக்கு தமிழரின் பிரச்சனையில் நூறு பங்கில் ஒன்று கூட தெரிவதில்லை. தமிழர் பிரச்சனை இருபக்கத்து அரசியல்வாதிகளின் பிரச்சனையாகப் பார்க்கப்பட்டது.

1983ம் ஆண்டு ஆரம்பகாலத்தில் யாழ்ப்பாணத்தில் பல தமிழர்கள் துரோகிகள் என கொல்லப்பட்டார்கள். இதே வேளையில் சிங்களபகுதிகளில் ராணுவ நடவடிக்கை தங்களை நோக்கி திரும்புவதாக காமினி மூலம் அறிந்தேன்.

மதவாச்சியில் பால் சேகரிப்பு நிலையம் திறந்தவுடன் அதற்கு முகாமையாளராக ஆளும் கட்சியின் சிபார்சின் பேரில் மார்ட்டின் சில்வா நியமிக்கப்பட்டார். பால் சேகரிப்பு நிலையத்தை நிர்வகிப்பதில் அவரிடம் திறமை குறைவாக இருந்தாலும் பாலில் ஊழல் செய்வதில் அவரது திறமை சீக்கிரமாகத் தெரிந்தது.

இலங்கையில் சேகரிக்கப்படும் பாலில் பெரும்பகுதி வெண்ணையாக மாற்றப்படுவதால் கொழுப்பின் அளவைப் பார்த்தே பால் விலை நிர்ணயிக்கப்படும். சாதாரணமாகப் பாலில் மூன்று சதவீதம் கொழுப்பு உள்ள பாலே கிடைக்கும.; ஆனால் வரண்ட பிரதேசத்திலுள்ள மாடுகளில் கொழுப்பு ஐந்துசத வீதமாக இருக்கும். பாலின் கொழுப்பை அளந்து விவசாயிகளுக்குப் பணம்; கொடுப்பது வழக்கம். மாட்டின் சில்வா பாலை மதிப்பிடுவதாக கூறி விட்டு பாலில் கொழுப்பு மூன்று சதவீதம் என கூறிக் காசைக் கொடுத்து விட்டு மிகுதியை தனது பையில் போடுவார். இந்தக் கலவை பற்றிப் பலருக்குத் தெரிந்தாலும் இதை நிரூபிக்க முடியவில்லை. பாலின் கொழுப்பின் அளவை சோதிக்கும் உபகரணம் சாதாரண விவசாயிகளிடம் கிடையாது. இதனால் மார்ட்டின் சில்வாவின் காட்டிலே தொடர்ச்சியாக மழை பெய்து கொண்டிருந்தது.

இந்த விடயத்தை அவரிடம் நான் பேசிய போது அதனை அவர் மறுத்ததுடன் மிகவும் கோபம் அடைந்தார். இனிப் பேசி பிரயோசனம் இல்லை என நினைத்து காரியத்தில் இறங்கினேன்.

அநுராதபுரம் பால் சேகரிப்பு நிலையத்தில் இந்த உபகரணத்தை வாங்கிக் கொண்டு சில விவசாயிகளின் பாலை ஒரு மாதமாகப் பரிசோதித்து அட்டவணை இட்டேன். இந்த விடயத்தில் ருக்மனின் உதவி

கிடைத்தது. ஜே.வி.பிக்கு அநுதாபமுள்ள விவசாயிகள் இந்த விடயத்தை இரகசியமாக வைத்துக் கொண்டார்கள்.

ஒரு மாத காலத்தின் பின் இந்த அட்டவணையை மார்டின் சில்வாவிடம் காட்டி இதற்கு மேலும் நேர்மையாக நடக்காவிட்டால் மேலிடத்துக்கு புகார் செய்வேன் என்ற போது மார்டின் சில்வா மன்னிப்பு கேட்டு தான் இனி இப்படியாக நடக்கவில்லை என உறுதி கூறினார்.

இத்துடன் இப்பிரச்சனை முடிந்து விட்டது என நான் நினைத்தேன். ஆனால் மாh;டின் சில்வா கடைசி ஆயுதமாக நான் புலி இயக்கத்தை சேர்ந்தவன் என்று பலரிடம் கூறி வைத்தார். இந்தப் பிரசாரம் என்னைப் பாதித்திருக்க கூடும் ஆனால் நான் சிங்களப் பெண் ஒருத்தியை திருமணஞ் செய்து வாழ்வதால் மார்ட்டின் செய்த பிரசாரம் அதிக அளவு நம்புதிறன் கொண்டதாக இருக்கவில்லை.

**புல்மோட்டை**

புல்மோட்டை கடற்கரை அண்டிய பிரதேசம். இங்கு தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் வாழ்கிறார்கள். இதற்குப் பக்கத்து சிறு கிராமமான தென்னமரவடி தமிழ்க் கிராமம். இவ்விரு கிராமங்களும் ஆரம்பத்தில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவை. இந்த இரு கிராமங்களையும் சமீபத்தில் அநுராதபுர மாவட்டத்தோடு இணைத்து விட்டார்கள். இதன் மூலம் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கிடையில் இருந்த பூகோளத் தொடர்ச்சியை அறுத்துக் கொள்ளலாம். இவ்வாறு இடையில் சிங்கள கிராமங்கள் புகுத்தப்படவதால் தமிழருடைய தொடர்ச்சியாக வாழும் பூகோள அமைப்பு உருவாகும் வாய்ப்பினை மறுக்கலாம் என்பது சிங்கள அரசியல்வாதிகளின் கணிப்பு. இந்த இரு கிராமங்களும் எனது மிருக வைத்தியப் பகுதியை சேர்ந்தவை.

புல்மோட்டையில் இல்மனைட் மண் எடுக்கப்பட்டு இரசாயன பொருட்கள் பிர்pத்தெடுக்கப்படும். இவ்வாறு எடுக்கப்படும் இரசாயனம் அதி உயர் வெப்பநிலையைத் தாங்க கூடியவை. விமானங்களின் மேற்பகுதியில் பூசப்படும். இந்த இரசாயனப்பொருளுக்கு உலக சந்தையில் அதிகமதிப்பீடு இருந்தது.

இந்தப் பகுதியில் இலகுவாக புல்லு வளராது எனவே மாடுகள் வளர்ப்பது கடினம். ஆனால் சிறுபற்றை காடுகள் உள்ளது. கானிமுகம்மது ஆட்டுப்பண்ணை வைக்க அரசாங்கத்திடம் விண்ணப்பித்திருந்தார். இவரது ஆட்டுப்பண்ணைக்கான நிலத்தை நான் பார்த்து அங்கீகரிக்க வேண்டியிருந்தது.

புல்மோட்டை சென்றால் அடுத்த நாள்தான் திரும்பிவரலாம். இதனால் அங்கு செல்ல வேண்டிய பயணம் தள்ளிப்போனது. கடைசியாக ஒருநாள் புல்மோட்டைப் பயணத்தை மேற்கொண்டேன்.

நானும் எனது உதவியாளரான விக்கிரமசிங்காவும் மோட்டார் சைக்கிளில் சென்றோம். அவருடன் பயணித்ததிலே பல சௌகரியங்கள் இருந்தன. சமரசிங்க, பலகாலம் பிரம்மசாரியாக இருந்து சமீபத்தில் தான் திருமணமானவர். தனது பழைய பெண் சிநேகிதிகளின் தொடர்புகளை மிகவும் விரிவாகவும் ரசமாகவும் கூறிக்கொண்டு வந்தார்.

போகும் வழியில் பதவியாவுக்கு முன்பாகக் காட்டுப்பிரதேசம். சாலை ஓரத்து பாரிய மரங்கள் தெருவையே பந்தல் போட்டது போல் நிழல் விரித்து வளர்ந்திருந்தன. சில இடங்களில் மட்டும் சூரியவெளிச்சம் தார் சாலையில் ஊடுருவியது. இயற்கையின் செழிப்பும், சமரசிங்;காவின் பேச்சும் கண்ணுக்கும், காதுக்கும் இதமாக இருந்தன.

திடீரென ஓர் மூதாட்டி மரங்களுக்கிடையே இருந்து எமது பாதையின் குறுக்கே வந்தாள். சைக்கிளை நிறுத்த முயன்று வெற்றி கண்டாலும், சைக்கிளை கண்ட பயத்தாலோ அல்லது உடல் தளர்ச்சியால் பாதையில் விழுந்து விட்டார்.

பாதை ஓரத்தில் நிறுத்திவிட்டு மூதாட்டியை பரிசோதித்தோம். மூச்சுப் பேச்சில்லை. விழுந்த போது கால் மடங்கி முறிந்திருந்தது.

'நாங்கள்போய் விடுவோம். இல்லாவிடில் எமது தலையில் பிரச்சனை வரும்' என்றார் சமரசிங்;கா.

'அது நியாயமில்லை ஆடுமாட்டுக்கு வைத்தியம் பார்க்கும் நாங்கள் ஒரு மூதாட்டியை விட்டுச்செல்ல முடியாது. '

'நாங்கள் என்ன செய்முடியும்.? '

'கொஞ்சம் பொறு. ஏதாவது வாகனம் வரும். '

சொல்லி வைத்தாற் போல் ஐந்து நிமிடத்தில் நீர்ப்பாசன திணைக்களத்து வாகனம் ஒன்று வந்தது. வாகனத்தில் மூதாட்டியை ஏற்றி விட்டு பின்னால் தொடர்ந்து சென்றோம். பதவியா வைத்தியசாலையில் மூதாட்டியை அனுமதித்து பதவியா பொலிசாரிடம் சம்பவத்தை அறிவித்து விட்டு புல்மோட்டைக்கு எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம்.

புல்மோட்டையை அடைந்த போது இரவாகி விட்டது தெரிந்தவர்கள் எவரும் இல்லாததால், இல்மனைட் மணல் திணைக்களத்தில் விருந்தினர் விடுதியில் தங்கினோம். விருந்தினர் விடுதியில் கட்டில்

நள்றாக இருந்தாலும் நித்திரை வரவில்லை. மூதாட்டியின் விபத்து மனத்தை விட்டு போகவில்லை. இதைவிட சமரசிங்;காவின் குறட்டை படு பயங்கரமாக இருந்தது. புலி உறுமுவதைத்தான் கேட்கவில்லை. ஆனால் இப்படி இருக்கலாம் என நினைத்துக்கொண்டேன்.

விடிந்ததும் கானிமுகம்மதுவை சந்தித்து ஆடு வளர்க்க விருக்கும் பகுதியை காட்டும் படி கேட்டோம். கானிமுகம்மது காட்டிய இடத்தில் புல்லும் இல்லை. தழையும் இல்லை. வெறும் மணல் பிரதேசம். அரசாங்கத்திடம் இருந்து நிலம் பெறுவதற்கு இந்த விளையாட்டு எனப் புரிந்து கொண்டோம். ஊடனடியாகப் பதில் சொல்லாமல் 'மதவாச்சி போய் கடிதம் எழுதுகிறேன் ' என கூறினேன்;.

அரசாங்கத்திடம் இருந்து நியாயமற்ற காரணத்தால் நிலம் பெற முயன்றது மட்டுமல்லாமல் எனது நேரத்தையும் வீணடித்து விட்டதுடன் ஒரு மூதாட்டியின் விபத்துக்கும் மறைமுக காரணமாக இருந்ததையிட்டு அவரைத் திட்ட வேண்டும் போல இருந்தது. ஆனாலும் என் கோபத்தினை அடக்கி பொறுப்புள்ள அரச ஊழியனாக நடந்தேன். சிங்ள அரசியல் தலைவர்களின் பதவி ஆசைகளின் விபரீதத்தினால், இந்து சமுத்திரத்தின் 'சொர்க்கத்துளி 'அழிந்து கொண்டிருக்கிறது. எல்லாம் மண்கொள்ளை! இந்த அவலத்திலே பிடுங்கியது ஆதாயம் என்ற கானிமுகம்மதுகளும் முளைத்துக் கொண்டிருப்பது எனக்கு எரிச்சலை தந்தது.

**தலைமறைவு**

இரவு ஒன்பது மணிக்கு ரூபவாகினியில் செய்தி கேட்டுக் கொண்டிருந்தேன். சித்ராவுக்கு செய்திகளில் விருப்பமில்லை. அரசியல்வாதிகளின் முகங்களை சுத்திசுத்தி காட்டுவார்கள். அவர்களை சுற்றியே உலகம் சுழல்வதாக கூறி மக்களை நம்பப்பண்ணும் ஒரு வேலை என்பது அவளது வாதம்.

குசினிப்பக்கத்தில் பாத்திரங்களை கழுவிக்கொண்டு நின்றவள் பின் கதவால் யாரோ வருவது கண்டு ரி.வி இருந்த கூடத்தை நோக்கி வந்தாள்.

பின்கதவு வழியாக ருக்மன்; உள்ளே நுழைந்தான்.

'என்ன பின்பக்கத்தால் கள்ளன் மாதிரி வருகிறாய் ' என்றாள் சித்ரா.

'நான் காலிக்கு போகிறேன் சொல்லிவிட்டு போக வந்தேன் '.

'ஏன் '

ஜனதா விமுக்தி பெரமுனையைத் தடை செய்யபோகிறார்கள். அதற்கு முன்பே முக்கியமானவர்களை கண்காணிக்கவும், தேவை என்றால் கைது செய்யவும் உத்தரவு வந்திருப்பதாக பொலிசில் உள்ள நண்பர்கள் மூலம் தகவல் வந்தது. இதைவிட நாட்டில் பாரிய கலவரம் நடக்கலாம். இந்தக் கலவரத்தினைக் காரணம் காட்டி எங்களைக் கொல்லுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக தலைமை பிராந்தியத்துக்கு தகவல் வந்துள்ளது. எங்களை வேறு இடத்துக்கு செல்லும்படி உத்தரவு வந்துள்ளது. பதவியாவில் என்னை எல்லோருக்கும் தெரியும். இன்று இரவே அநுராதபுரம் சென்று மற்றத்தோழர்களுடன் நாளை காலிக்கு செல்கிறோம்.

'வீட்டில் சொல்லி விட்டாயா? '

'சொல்ல நேரமில்லை. நீதான் சொல்ல வேணும். '

'அண்ணா உனது முடிவை மாற்றமாட்டாயா'

ருக்மன்; முடிவு மாறபோவதில்லை என தெரிந்ததும் ருக்மனை பார்த்து 'ஏதாவது காசு தேவையா' என்றேன்.

'காசு இருக்கு. '

அறைக்குள் போய் வந்த சித்ரா சில நோட்டுகளை அவனுடைய சேட்டுப்பைக்குள் திணித்தாள்.

சித்ரா கதிரையில் பிரமை பிடித்தவள் போல் இருந்தாள். நான் ரி.வி யை அணைத்து விட்டு சித்திரா அருகில் சென்றேன்.

நான் பக்கத்தில் சென்றதும் கண்ணீர் அருவியாக கொட்டியது.

'என் அண்ணா ஓடி ஒளிந்து தலைமறைவாக வாழும் போது எப்படி நிம்மதியாக இருக்க முடியும். ' என்றாள் சித்திரா.

'ருக்மனின் நிலையில் இந்த முடிவு சரி' என நான் நினைக்கிறேன்.

'நீங்களும் இப்படி சொல்லுகிறிர்களே' என கூறி என் தோளில் சாய்ந்தாள்.

அவளது வாய் அப்படி கூறினாலும் ருக்மன்; தலைமறைவாக வாழ்வதில் அவளுக்கு சந்தோஷம் என்பது எனக்குத் தெரிந்தது.

எனது வேலை முடிந்தது. ஐந்து மணியளவில் பஸ்சில் இருவரும் பதவியா சென்றோம். சிறிபுர செல்வதற்கு ஏழுமணியாகி விட்டது. தாய் எங்களை கண்டதும் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்றாள்.

'என்ன திடீரென வந்து விட்டீர்கள் ' என்று தாய் கேட்டாh.;

'உங்களைப் பார்க்க வேண்டும் போல இருந்தது. அதுதான் வந்தோம்.' என்றாள் சித்திரா.

பொய்யுரைத்தது அவளுடைய முகத்தில் எனக்குத் தெரிந்தது. தாய் மகளை சந்தேகிக்கவில்லை.

'உள்ளே வாருங்கள் ' என என்னிடம் கூறிவிட்டு 'தந்தை வந்து விடுவார் ' என கூறியபோதே சித்ராவின் தந்தை வந்துவிட்டார்.

இவர்களிடம் எப்படி ருக்மன்; தலைமறைவாகியதை சொல்வது. ஏற்கனவே சித்ரா என்னிடம் இந்த விடயத்தை கூறும்படி கேட்டிருந்தாள். சாப்பாடு முடிந்தவுடன் சொல்லுவது என முடிவு செய்திருந்தேன்.

நாங்கள் சாப்பிடும் போதே சித்ராவின் தந்தையார் 'சித்ரா, ருக்மனை கண்டாயா? பல நாட்களாக வீட்டுப்பக்கம் வரவில்லை'. என்றார்.

சித்ரா என் முகத்தை ஏறிட்டாள்.

'உங்களிடம் ஒரு விடயம் பேசவேண்டும்.கதிரையில் உட்காருங்கள் ' என்றேன்.

'உங்களுக்குத் தெரியும் தானே? நாட்டு நிலைமை நல்லா இல்லை. இதனால் ஜனதா விமுக்தி பெரமுனையை மீண்டும் தடை செய்யப் போவதாக பேசுகிறார்கள். இந்த நிலையில் தடை செய்யும் போது பிரதேசப் பொறுப்பாளர்கள் கைது செய்யப்படுவார்கள். இதனால் ருக்மன்; இங்கில்லாமல் காலிப்பக்கம் சில நாள் தங்கி இருப்பதற்காக சென்று விட்டான். உடனே பஸ் ஏற இருப்பதால் எங்களிடம் இந்த விஷயத்தை சொல்லும் படி கூறினான். ' என மூச்சு விடாமல் கூறினேன்.

சித்ராவின் தாயார் சாப்பாடு விடயத்தில் கவனம் செலுத்தியபடி குசினியில் நின்றதால் இந்த விஷயம் அவருக்குக் கேட்கவில்லை.

'ருக்மனுக்கு ஒரு பிரச்சனையும் இல்லைதானே? '

'பிரச்சனை இல்லை, ஆனால் முன்னெச்சரிக்கையாக இப்படி செய்திருக்கிறான். '

'ஆரம்பத்திலேயே சொன்னேன.; இந்த வேலைகளில் ஈடுபடாதே என்றுஇ கேட்டால் தானே.'

'வளர்ந்த பிள்ளைகள் பெற்றோரைக் கேட்டு நடப்பது அந்தகாலம். '

'அந்தக்காலத்தில் தாத்தா மட்டும் கேட்டு நடந்தாரா? ' என கூறி முகத்தை திருப்பினாள் சித்ரா.

பலமுறை ருக்மன்; தகப்பனை போல் தன்னிஷ்டமாக நடப்பது என சித்ரா என்னிடம் கூறி இருக்கிறாள். பொறுத்த இடத்தில் சுட்டிக் காட்டுவதில் பெண்களுக்கு மிஞ்ச யாரும் இல்லை என்று நினைத்தேன். சாப்பாடு எல்லோரும் ஒன்றாக இருந்து சாப்பிட்டாலும் ஒரு இயந்திரத் தன்மை தெரிந்தது.

**யூலைக்கலவரம்**

நானும் சித்ராவும் மதவாச்சி வைத்தியசாலைக்கு புதிதாக இடமாற்றமாகி வந்திருந்த கண்ணனை சந்தித்தோம். கண்ணன் என்னுடன் பேராதனை மருத்துவ பல்கலைக்கழகத்தில் மருத்துவம் படித்தவன்.

மதவாச்சியில் உள்ள வைத்தியசாலை சிறியது. ஒரு வைத்தியரை மட்டும் கொண்டுள்ளது. பெரிய நோய்கள் வந்தால் வவனியாவோ அநுராதபுரமோ தான் செல்ல வேண்டி இருக்கும். பல வருடங்களுக்குப் பின்பு சந்தித்தபடியால் ஏராளமான விஷயங்களை பேசினோம். சித்திரா எங்கள் உரையாடலை கேட்டுக் கொண்டிருந்தாள். பெரும் பாலும் தமிழில் இருந்ததால் அவளுக்குப் புரியவில்லை.

*வீடு திரும்பும் வழியில் 'உங்களுக்கு யாழ்ப்பாணத்து நண்பர் கிடைத்து விட்டார் இல்லையா? ' என்றாள்.*

*'உனக்கு எரிச்சல் போல' என சிறிது சீண்டினேன்.*

*'அப்படியானால் நான் பதவியா போகிறேன். '*

*'உன்னை சீண்ட கூறினேன். பிளீஸ் '*

*அடுத்த வார விடுமுறைக்கு கண்ணனை வீட்டுக்கு அழைத்து உபசரித்தோம். கண்ணனிடம் ஒரு விஷயம் எனக்கு பிடிக்காது. அவன் அசைவம் சாப்பிடுவதில்லை.*

*மதவாச்சி போன்ற காடுகள் சூழ்ந்து இருக்கும் பிரதேசத்தில் விதம் விதமான மிருக மாமிசங்கள் சாப்பிடும் வசதி உண்டு. யாரோ சட்டவிரோத மானையோ மரையையோ வெடி வைத்து கொன்றால் அந்த இறைச்சியை பரிசோதித்து அத்தாட்சி பத்திரம் கொடுக்கும் பொறுப்பு என்னைச் சேர்ந்தது. இறைச்சியை என்னிடம் கொண்டு வரும் பொலிசார் அதில் ஒரு பகுதியை என்னிடம் தருவார்கள். இந்த பழக்கம் பல காலமாக நடக்கிறது. ஆரம்பத்தில் மனதை உறுத்தினாலும் பின்னால் பழகி விட்டது*

*இப்படித்தான் ஒரு நாள் இரவு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொலிஸ்கான்ஸ்டபிள் கதவை தட்டினான். வந்தவன் கையில் ஒரு கலன் பிளாஸ்டிக் பாத்திரமும் கையில் ஒரு பொட்டலமும் இருந்தது. அவரது முகத்தில் சாராய வாடை கப்பென அடித்தது.*

*'என்ன இந்த நேரத்தில் ' என சிறிது எரிச்சலுடன் கேட்டேன்.*

*'ஐயாவுக்கு மான் இறைச்சியும் கொஞ்சம் கசிப்பும் உள்ளது. நீங்கள் ஒரு சேட்டிபிக்கெட் தரவேணும் ' என்றான். அவனுடைய வார்த்தைகள் தடுமாறிக்கொண்டு வெளியே வந்தன.*

*பேசிப் பிரயோசனமில்லை என உணர்ந்து உள்ளே அழைத்தேன் அவன் இருக்கையில் அமர்ந்தபிறகு 'என்ன நடந்தது' என விசாரித்தேன்.*

'எங்களுக்கு மானை சுட்டதாக தகவல் வந்தது. நாங்கள் இருவர் காட்டுக்குள் சென்றோம். அங்கு மானைச் சுட்டவர்கள் கசிப்பு காச்சி கொண்டிருந்தார்கள். எம்மை கண்டவுடன் ஓடி விட்டார்கள். எப்படி கசிப்பை அரைவாசியில் விடுவது என மனங்கேளாமல் நாங்கள் அதை காய்ச்சி முடித்து மான் இறைச்சியையும் பொலிஸ் ஸ்ரேசனுக்கு கொண்டு வந்தோம். ஆளுக்கு பிரித்தெடுத்து பின்பு உங்களிடம் அத்தாட்சி பத்திரம் வாங்க வேண்டும். வரும் போது நான் உங்களுக்கும் உதவும் என இதை கொண்டு வந்தேன். ' என கான்ஸ்ரபிள் கூறினான்.

'இறைச்சிக்கு நான் அத்தாட்சிப்பத்திரம் தாறேன் ஆனால் கசிப்பை கொண்டு போங்கள் ' என நாகரிகமாக மறுத்தேன்.

பல மாதகாலமாக யாழ்ப்பாணம் போகாதபடியால் வீட்டு ஞாபகம் வந்தது. மேலும் அம்மாவுக்கு அடிக்கடி வரும் தொய்வும் நினைவுக்கு வந்தது.

சித்திராவிடம் 'நீ இந்த வார விடுமுறைக்கு பதவியா செல் நான் யாழ்ப்பாணம் போகிறேன் ' என்றேன்.

அவள் ஒரு மறுப்பும் சொல்லவில்லை. அவளது மனநிலையும் என்னை போல் இருக்கலாம். அத்துடன் ருக்மனை பற்றிய எந்தத் தகவலும் வராத நிலையில் பெற்றோருடன் பேசுவதால் ஆறுதல் ஏற்படலாம் என நினைத்தேன்.

வெள்ளிக்கிழமை வீடு சென்ற என்னை கண்டவுடன் அம்மாவுக்கு நல்ல சந்தோஷம்.

சாப்பிடும்போது, 'இப்ப அங்கு எப்படி அரசியல் நிலை இருக்கு' என்றார்.

'நல்லா இல்லை. ஆனால் நாங்கள் என்ன செய்யமுடியும். '

'இங்கேயும் பெடியள் பலரை துரோகிகள் என சுட்டுக்கொல்கிறார்கள். இன்றும் கூட கொழும்புத்துறைச் சந்தியில் ஒருவரை கொலை செய்து தந்திக்கம்பத்தில் தொங்க விட்டிருக்கிறார்கள். இவ்வளவுக்கும் அவன் மேல் திருட்டுக்குற்றம் மட்டும் சுமத்தப்பட்டிருக்கிறது. நான் இவன் தம்பி ரவியை ஜேர்மனிக்கு அனுப்பபோகிறேன். இங்கு இருந்தால் இவனும் இயக்கம் என்ற போகக்கூடும்.' என்று வழக்கத்துக்கு மாறாக அப்பு இப்படிப் பேசினார்.

'நல்ல விஷயம் தான்.' அவனும் வெளிநாடு போவதுதான் அவனுக்கும் பாதுகாப்;பு என்று நானும் நினைத்திருந்தேன்.

'நீ ஏன் வெளிநாடு போகக் கூடாது'?

'எல்லோரும் வெளிநாட்டுக்கு போமுடியுமா? மேலும் நான் மதவாச்சியில் சந்தோஷமாகஇருக்கிறேன்.'

'சரி, கலவரம் ஏதாவது வந்தால் சிங்களபொடிச்சியோடு எங்க போவாய்? '

'கலவரம் ஏதாவது வரும் என ஏன் யோசிக்கிறீர்கள் '.?

'சரி ஏதோ சொல்லிப்போட்டேன் '. எனகூறிவிட்டு சுருட்டை பற்ற வைத்துக் கொண்டு படலையோரமாக சென்றார்.

வராந்தாவில் பாயை போட்டுக்கொண்டு நிலா வெளிச்சத்தை பார்த்துக்கொண்டு படுத்தேன். அப்புவை எதிர்த்து பேசினாலும் அப்புவின் கூற்றில் உண்மை இருபபதாக நினைத்தேன்.

மதவாச்சி பால் சேகரிப்பு நிலையத்தில் வேலை செய்யும் மார்ட்டின் சில்வா தொடர்;ச்சியாக கொட்டியா(புலி) என்ற பிரசாரத்தை என்மேல் கட்டவிழ்த்து கொண்டிருந்தார். பெரும்பாலானவர்கள் நம்பாவிட்டாலும் ஒரு சிலருக்கு அந்த கதைகள் காதில் ஏறியது. வடபகுதியில் தொடர்ச்சியாக நடந்த கொலைகளும் தாக்குதல்களும் சகல தமிழர்களும் புலியாக இருக்கலாம் என்று சிங்களவர்கள் அனைவரையும் நினைக்க வைக்கும் நிலைக்குத் தள்ளியது.

யூலை இருபத்திநாலாம்; திகதி திருநெல்வேலியில் குண்டு வெடிப்பு நடந்தது என கேள்விப்பட்டவுடன் சித்ராவை பதவியாவுக்கு செல்ல சொல்லி விட்டு மதவாச்சியில் கண்ணனுடன் தங்கினேன். கெப்பத்திகொல்லாவையில் நெல்லியடியைச் சேர்ந்த எண்ணெய் லாரியைச் சிங்கள காடையர்கள் அதில் நாலு தமிழர்களுடன் சேர்த்தே எரித்தார்கள். இவர்களின் சடலத்தை அதே ஊரை சேர்ந்த கண்ணனே பிரேத பரிசோதனை செய்ய ஏற்பட்ட துர்ப்பாக்கிய நிலையையும் எனக்கு விபரித்தான். கொழும்பில் கறுப்பு யூலை அரங்கேற்றப்பட்டது.

அநுராதபுரத்தில் கடைகள், வீடுகள் கொழுத்தப்பட்டு பல தமிழர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

இவர்கள்pல் பலர் எனக்கு பழக்கமானவர்கள்.மதவாச்சி பகுதியில் எதுவித அசம்பாவிதமும் நடக்கவில்லை. ஆனாலும் இரவு நேரத்தில் எங்களுக்கு பழக்கமான சிங்கள நண்பர்களின் வீடுகளில் தங்கினோம். ஓர் இரவு எமக்கு பழக்கமான விஜசிங்க என்ற சிங்கள குடும்பத்pனருடன் நாம் தங்கினோம். இருவரும் ஆசிரியர்கள். நான்கு பெண்குழந்தைகள் உண்டு.

இவர்களின் வீட்டில் உணவுண்டு விட்டு பத்து மணியளவில் படுக்க போனோம். இந்த தம்பதிகள் தங்கள் படுக்கையறையை எமக்கு தந்து விட்டு அந்த அறையின் முன் படுத்தார்கள். நடுநிசியில் எனது காலில் யாரோ தட்டி எழுப்பியது போலத்தோன்றியது திடுக்கிட்டு எழுந்தேன்.

படுக்கைக்கு அருகில் திருமதி விஜயசிங்கா டார்லைட்டுடன் ஒரு கழல் துப்பாக்கியுடனும் நின்றார். எனது நெஞ்சில் தண்ணியில்லை. பயம் வாயை அடைத்தது.

திருமதி விஜயசிங்;க ரகசிய குரலில் முதலில் பேசினார். 'தயவு செய்து இந்த துப்பாக்கியையும் லைட்டையும் வைத்துக்கொள்ளுங்கள். இந்த துப்பாக்கியில் ஒரு சன்னம் இருக்கிறது. உங்களுக்கு ஏதாவது நடந்தால் எங்களுக்கு என்ன செய்யமுடியும் ' என கூறி எனது கையில் துப்பாக்கியையும், கண்ணனின் கையில் லைட்டையும் திணித்தார்.

'உனக்குத் துப்பாக்கி சுடதெரியும் என அவருக்கு தெரிந்திருக்கு' என்றான் கண்ணன்.

இருவரும் அதற்கு மேல் எதுவும் பேசவில்லை. ஆனால் விடியும் வரை உறங்கவில்லை.

காலை எழுந்ததும் தேநீரை கொடுத்து விட்டு 'முடிந்தால் எங்கு சென்றாவது உயிர் தப்புங்கள் இந்த நாடு உருப்படாது'. என்றார் விஜயசிங்க.

கண்ணனின் விடுதிக்குச் சென்று பல விடயங்களை ஆலோசித்தோம். கொழும்பிலும் மற்றும் இலங்கையின் தென்பகுதியில் நடந்த அநர்த்தங்கள் பத்திரிகையிலும் வானொலியிலும் வந்தன. மதவாச்சி போன்ற இடங்களில் எமக்கு எந்த தீங்கும் நடக்கவில்லை என்றாலும், இருபுறமும் எரியும் இந்த தீவின் எதிர்காலம் இருளாகவே தெரிந்தது.

நாட்டின் நிலைமையை சாதாரணமான எங்களால் தீர்மானிக்க முடியாதவிடத்தில் வெளிநாட்டுக்கு செல்வதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

'நாங்கள் எங்கே போகலாம். விசா ஏதும் இல்லாமல் கனடாவுக்கு போகலாம் என்று சொல்கிறார்கள்' என்று நான் சொன்னேன்.

'நான் எப்படியும் மேல் படிப்பு படிக்க இங்கிலாந்து போக இருக்கிறேன். ஆனால் இவ்வளவு அவசரமாக அங்கு போக முடியும் என்று நான் நினைக்கவில்லை. ' என்று கண்ணன் தன்தளத்தை விளக்கினான்.

இருவரும் கொழும்பு போவதற்கு தீர்மானித்தோம். கலவரம் நடந்து ஒரு கிழமை கூட ஆகவில்லை. எந்த வாகனமும் ஓடவில்லை. மேலும் தென்னிலங்கையில் இருந்து தமிழ் அகதிகள் வடக்கும், கிழக்கும் சென்று கொண்டிருந்தார்கள்.

எமக்கு துணையாக இரு சிங்கள நண்பர்கள் கொழும்புக்கு வர சம்மதித்து அவரில் ஒருவர் தனது காரையும் கொண்டுவர முடிவு செய்தார்.

காரில் கொழும்பு நோக்கி செல்லும் போது நடந்த அழிவுகளை பார்க்க முடிந்தது. நீர்கொழும்பு பகுதியில் ஜாஎல பகுதிகளில் எரிந்த தமிழ்க்கடைகளில் இருந்து இன்னும் புகை வந்து கொண்டிருந்தது.

நீர்கொழும்பில் சிங்கள நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கி இங்கிருந்து 'உப்பாலி ரவல்ஸ்' மூலமாக கனடாவுக்கான விமான சீட்டுகளை ஒழுங்கு பண்ணிவிட்டு மீண்டும் மதவாச்சி திரும்பினோம்.

**அந்நியமாகுதல்**

ஓடும் தளத்தை விட்டு விமானம் மேலே எழுந்தது.. . மேலே, மேலே வானத்தில் ஏறியது.

அதன் பறப்பு தொடர்ந்தது.

நான் வாழ்ந்த, பிறந்த மண்ணில் இருந்து பறக்க துடிக்கிறேன்...

எழுவைதீவு, நயினாதீவு, யாழ்ப்பாணம், பேராதனை, மதவாச்சி, பதவியா என்ற இந்த இடங்கள் கனவில் வந்து போன இடங்களா?

இந்த விமானம் என்னை எங்கு கொண்டு செல்கிறது.? பூகோள படத்தில் மட்டும் பார்த்த இடங்கள். இனி எனக்கு சொந்த பூமியாகுமா?

என் பாதங்கள் அணைத்து மகிழ்ந்த அந்த இனிய மண் எனக்கு அந்நியமாகின்றதா?

கால் நூற்றாண்டுகள் விதைத்த இனவாத விதையின் அறுவடையில் என்னுடைய சொந்தமான உரிமைகள், உறவுகள் கனவுகள் சிதைந்து விடுகிறதா?

என் மனதில் ஏற்பட்ட எண்ணங்களை அறிந்தவள் போல சித்திரா லேசாக என் கைகளைத் தொட்டுக் கொண்டு என் கண்களை உற்று நோக்குகிறாள்.

அவளது கைகளை எனது கைகளில் பொத்திக் கொண்டு, அவளுக்கு மட்டும் கேட்கும் வகையில்' பதவியா குளத்துக்கு புராதனமான தமிழ்ப் பெயர், உண்டு தெரியுமா?' எனக்கேட்டேன்.

' என்ன பெயர்'

'வண்ணத்திக்குளம்'

வண்ணத்திப்பூச்சிகள் சிறகடிப்பது போல அழகாக தோன்றும் தனது விழி இமைகளைச் சிமிட்டினாள். அந்தக் கண் சிமிட்டலில் ஓர் உறவும் உத்தரவாதமும் விகசித்தது.

'இங்கு தான் வண்ணத்துப்பூச்சிகள் போன்ற உன் கண்களை வார்த்தெடுத்தாயா'? என கேட்க வேண்டும் போல இருந்தது.

'இலங்கையில் இனக்கலவரம்,. சிங்களவர்கள் தமிழரை கொலை செய்கிறார்கள். எனக்கு புகலிடம் தா.. என்றுதான் கேட்கப் போகிறேனா?

இவள் என் பக்கத்தில் இருப்பவள் - பிறந்த மண்ணையும் உறவுகளையும், இனத்தையும் விட்டு பிரிந்து வந்து கொண்டிருக்கிறாள்.

வண்ணத்திக்குளத்தின் உறவுகள் இலங்கை முழுவதும் விரியுமானால். .

விமானத்தின் கண்ணாடி வழியே பார்க்கும் போது எதுவும் தெரியவில்லை.

என் கண்களின் பார்வையை மறைப்பது வானத்து முகிலா? அல்லது கண்ணீரா?